விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்தைப் பயன்படுத்துங்கள்; உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்.

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆடி 12 ஞாயிற்றுக்கிழமை (28.07.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 221

# கோடி விலை கொடுத்து எம்.பிக்கள் கொள்வனவு!

## அரசைச் சாடுகிறது ஐ.தே.க

(வவுனியா)

கோடிக்கணக்கில் பணத்தைக் கொடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கித் தேர்தலில் போட்டியிடும் அளவுக்கு அரசாங்கம் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார், பொலநறுவை பக்கமுன பகுதியில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போது அவர் இதனைக் கூறினார். (23ஆம் பக்கம் பார்க்க)

## தயா மாஸ்டர் நீக்கம்!



(யாழ்ப்பாணம்)

வட மாகாண சபைத் தேர்தல் வேட்பாளர் பட்டியலிலிருந்து தயா மாஸ்டர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினால் நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலாக சுபியான் களமிறக்கப்படுவதாகத் தெரிய வருகிறது.

இதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து நீக்கப் பட்டதைத் தொடர்ந்து தயா மாஸ்டர் சுயேட்சைக் குழுவில் போட்டியிடவுள்ளதாக கூறப்பட்டது. (எ-4)

## திண்டுக்கல்லுக்குச் சென்ற விடுதலைப்புலிகளின் கடிதம்



(சென்னை)

தமிழ்நாட்டின் திண்டுக்கல்லில் உள்ள சிறுமலையில்தான் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்த பெண் புலிகளுக்கு முதன்முதலில் பயிற்சி வகுப்பு நடந்தது.

புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் நேரடிப் பார்வையில் நடந்த அந்தப் பயிற்சிக்கு, இடம் கொடுத்து உதவியவர், திண்டுக்கல் அழகிரிசாமி.

கடந்த 15-ம் தேதி தனது 74-வது வயதில் மாரடைப்பால் மரணமடைந்தார்.

அமெரிக்காவில் மகள் வீட்டில் இறந்த அவரது உடல் திண்டுக்கல்லுக்குக் கொண்டு வரப்பட்டு அவரது சொந்த ஊரான வடுகபட்டியில் அடக்கம் (23ஆம் பக்கம் பார்க்க)

## பிக்குகளுக்கு தனி நீதிமன்றம்

(கொழும்பு)

பௌத்த பிக்குகளுக்கு தனியான நீதிமன்றமொன்று அமைக்கப்பட உள்ளதாக பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் அறிவித்துள்ளார்.

பௌத்த பிக்குகளுடன் தொடர்புடைய வழக்கு விசாரணைகளை மேற்கொள்வதற்கு இந்த விசேட நீதிமன்றம் அமைக்கப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பௌத்த பிக்குகள் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்யும் நீதிமன்றம் சங்கா நீதிமன்றம் என அழைக்கப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த நீதிமன்றின் விசாரணைகள் ஒரே நாளில் மேற்கொள்ளப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை மற்றும் வழக்குகளை ஒரு வருடத்திற்குள் நிறைவு செய்ய வேண்டுமென்றே நீதவான்கள் விரும்புவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## இலங்கையை பணிய வைக்க இந்திய 'றோ' கடும் முயற்சி!

(சென்னை)

இலங்கையைத் தனக்கு அடிபணிந்து நடக்கும் நாடாக மாற்றுவதற்கு இந்தியா தனது புலனாய்வு சேவையான "றோ" அமைப்பின் ஊடாக தந்திரமான முறையில் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளதாக இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இலங்கை முழுவதும் 64 கோயில்களை நிர்மாணிப்பதே றோ அமைப்பின் முதல் நோக்கமாகும்.

இது தொடர்பில் ஆராய இலங்கை சென்றிருந்த றோ அமைப்பின் தலைவர் ஒருவர், இலங்கையில் உள்ள மதத் தலைவர்களையும் சில வர்த்தகர்களையும் சந்தித்து பேசியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த திட்டத்திற்கு பல கோடி ரூபா பணத்தை செலவிட றோ புலனாய்வு சேவை தயாராக உள்ளது.

அத்துடன் பிரிவினைவாதத்தை வளர்ச்சியடையச் செய்து, ஈழத்திற்கு ஏதுவான சூழ்நிலையை ஏற்படுத்தி, இந்தியாவின் அரசியல் தேவைக்கு அமைய இலங்கையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதே றோ அமைப்பின் நோக்கம் என அந்த தகவல்கள் தெரிவித்தன. (எ-11)

## 10 மாதக் குழந்தை மூச்சுத் திணறிப் பலி

(யாழ்ப்பாணம்)

மருந்துப் பொருட்களை உட்கொண்டபோது மூச்சுத் திணறியதில் 10 மாதக் குழந்தையொன்று பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம்நேற்று மாலை பழைய பொலிஸ் வீதி, ஆனைக்கோட்டை என்னும் இடத்தில் இடம்பெற்றது.

இதில் அதேயிடத்தைச் சேர்ந்த யதுயாழினி என்ற குழந்தையே பலியானதாகும்.

சடலமானது நேற்று மாலை 5.15 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக (23ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ஹக்கீம் மீது விகாராதிபதி பாய்ச்சல்!



மஹியங்கனையில் உள்ள முஸ்லிம் பள்ளிவாசல் [illegible]கப்பட்டுள்ளதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் பொய்யான அறிக்கை வெளியிட்டுள்ளதாக மஹியங்கனை ரஜமஹா விகாரையின் விகாராதிபதி தம்மரக்கித்த தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் அமைச்சரைக் கடுமையாகச் சாடியுள்ளார்.

பொறுப்புமிக்க அமைச்சர் என்ற வகையில் அமைச்சர் ஹக்கீம் உண்மையான ஆதாரங்களை வழங்கி, குற்றச்சாட்டை நிரூபிக்க வேண்டுமென [illegible] (23ஆம் பக்கம் பார்க்க)

## பிரித்தானியக் குழுவின் பாதுகாப்புச் செயலருடனான சந்திப்பு இறுதிநேரத்தில் ரத்து

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்த பிரித்தானிய நாடாளுமன்றக் குழுவுடனான சந்திப்பை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இறுதி நேரத்தில் இரத்துச் செய்துள்ளார்.

வடக்கு மற்றும் இறுதிக் கட்டப் போர் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால், புதுமாத்தளன் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கும் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டிருந்த பிரித்தானிய நாடாளுமன்றக் குழுவினர், கொழும்பில் அரச தரப்புடனான சந்திப்புக்களை நடத்தியது.

இந்நிலையில், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவைச சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தத் திட்டமிட்டிருந்தபோது, பிரித்தானிய நாடாளுமன்றக் குழுவுடனான



சந்திப்பை அவர் இறுதி நேரத்தில் இரத்துச் செய்துள்ளார்.

பிரித்தானிய நாடாளுமன்றக் குழுவினர் முன்னதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தத் திட்டமிட்டிருந்தனர்.

ஆனால், இலங்கைக்கு சுற்றுலாப் (23ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இன ஐக்கியத்திற்கு தடையாகும் சிரேஷ்ட அமைச்சரின் செயற்பாடு

## மன்னார் ஆயர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு மாகாண சபைத் தேர்தல் நெருங்கியுள்ள நிலையில் அரசாங்கத்தில் உள்ள சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் இனங்களுக்கு இடையிலான ஐக்கியத்திற்கு தடையேற்படுத்தி வருவதாக மன்னார் மறைமாவட்ட ஆயர் வணக்கத்திற்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் விசேட பிரதிநிதிகள் சிலர் ஆயரை சந்திக்க வவுனியா சென்றிருந்த போது ஆயர் இதனை கூறியுள்ளார்.

வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களின் சகல அபிவிருத்தி நடவடிக்கைகள் மட்டுமன்றி வேலைவாய்ப் புகள் என்பனவும் அமைச்சரின் தேவைக்கு அமைய நடைபெறுவது அநீதியானது என சுட்டிக்காட்டி ஆயர் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

இதனையடுத்தே ஜனாதிபதி தனது விசேட பிரதிநிதிகளை அங்கு அனுப்பி வைத்தார்.

சம்பந்தப்பட்ட அமைச்சின் செயற்பாடுகள் காரணமாக போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவது பெரும் சிரமமாக மாறியுள்ளது என்று ஜனாதிபதியின் பிரதிநிதிகளிடம் சுட்டிக் காட்டியதாக ஆயர் சர்வதேச ஊடகம் ஒன்றிடம் கூறியுள்ளார்.

அமைச்சின் செயற்பாடுகள் வவுனியா, முல்லைத்தீவு ,மன்னார் பிரதேசங்களில் உள்ள தமிழ்,முஸ்லிம் மக்கள் இடையிலும் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் இடையிலும் முரண்பாடுகளை தோற்றுவிக்க காரணமாக அமைந்துள்ளது என தெரிவித்துள்ள ஆயர் இந்த விடயம் தொடர்பில் உடனடியான விசாரணை ஒன்றை நடத்துமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (எ-11)

## இளைஞன் மீது தாக்குதல்; நால்வர் கைதாகினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சுயாதீன ஊடகவியலாளர் ஒருவர் வானில் வந்த நான்கு பேர் கொண்ட மர்ம கும்பல் ஒன்றினால் தாக்கப்பட்டுள்ளார்.

தாக்குதலை தடுக்க முற்பட்ட அவருடைய நண்பரொருவர் கம்பியினால் தலையில் தாக்கப்பட்டதையடுத்து படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமாலை 5.30 மணியளவில் திருநெல்வேலி பாற்பண்ணைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் சுயாதீன ஊடகவியலாளர் சிறீ ராமச்சந்திரன் மயூரதன் (வயது 26) காயமடைந்ததோடு, தாக்குதலைத் தடுத்த அவரது நண்பரான சிவப்பிரகாசம சிவதாசன் (வயது 28) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, திருநெல்வேலி கலாசாலை வீதியில் அமைந்துள்ள அவரது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது வானில் வந்த இனந்தெரியாத நான்கு பேர் கொண்ட குழு அவரை வழி மறித்து கூரிய ஆயுதங்கள் மற்றும் கம்பிகளினால் கடுமையாகத் தாக்கியதோடு அவரின் கழுத்தில் இருந்த தங்கச்சங்கிலியையும் அறுத்துள்ளனர்.

தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தபோது அப்பகுதியில் நின்று கொண்டிருந்த மயூரதனின் நண்பர்களுக்கும் அம்மர்ம கும்பலுக்கும் கடும் சண்டை மூண்டது.

உடனடியாக கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டதையடுத்து அவ் நான்கு பேரையும் கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸார் நடத்திய முதற்கட்ட விசாரணையின் மூலம் தாக்குதல் நடத்தியவர்கள் கொக்குவில் பிறவுண் வீதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவருகின்றது. (எ-4,6,11)

## மரண அறிவித்தல்

### திருமதி ஆனந்தராசா நவனேஸ்வரி



அல்வாய் வடக்கு, முத்து மாரி அம்மன் கோவிலடி, 'குவேனகத்தை' பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆனந்தராசா நவனேஸ்வரி அவர்கள் 27.07.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு இலச்சுமி தம்பதியினரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-பருவதம் ஆகியோரின் பாசமிகு மருமகளும் ஆனந்தராசாவின் அன்பு மனைவியும்,நேசதாசன் (பிரான்ஸ்), குகதாசன்,மோகனதாஸ் (பிரான்ஸ்), அரவிந்தன் (லண்டன்), குணேகா, அமுதரூபி (லண்டன்), சுயதர்சினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் பிறேமினி (பிரான்ஸ்), சுகுணா, ஜமேலா (பிரான்ஸ்), வினோஜினி (லண்டன்), ஆனந்தகுமார், சூர்யா(லண்டன்), ஜெகதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற செல்லக்கிளி மற்றும் கன்னிகா பரமேஸ்வரி, மகேஸ்வரி, அசுபதி, தங்கவேல் (சுவிஸ்), சிவனொளி (சுவிஸ்), சிவஞானசுந்தரம், வெற்றிவேல், பாஸ்கரன் (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரியும் துஷ்யந்தன் (நிஷாந்தன்), குகசாந்தன், அஜீசன், ஆகாஸ், சுயாதா, ஆர்த்தி, ஆயிசா, சபிகா, வினிதா, நிரூஜா ஆகியோரிரது பாசமிகு பேர்த்தியாருமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று 28.07.2013 ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10.00 மணியளவில் சுப்பர்மடம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குவேனகம்,
அல்வாய் வடக்கு, அல்வாய்.

தகவல்: குடும்பத்தினர். (C-4157)


பிள்ளையார் இன்

சனி, ஞாயிறு தினங்களில் புஃவே (Buffet) இந்திய சமையற் கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வழங்கப்படும். 6-10 P.M

+ 6 மணிமுதல் 3 மணிவரை மிகச் சிறந்த் சைவ் அசைவ உணவு வகைகள் வழங்கப்படுகின்றன.

சைவ உணவு: 150/- அசைவ உணவு 175/-

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829 (C-4148)

புதிய பிரிவுகள் ஆரம்பம்

3rd August 2013

(02.08.2013 முன் பதிவு செய்பவர்களிற்கு 5% கட்டணக்கழிவு)

AAT : Foundation, Intermediate, Final
Banking (CBF), Chartered, CIMA

இக்கற்கை நெறிகளைத் திறமையான முறையில் பூர்த்தி செய்யும் மாணவர்களிற்கு 2 வாரகால இலவச தொழில் தகைமைப் பயிற்சியும் தகுதி வாய்ந்த வேலை வாய்ப்புகளும் காத்திருக்கிறது.

Spoken English,
A/L English, O/L English
இற்கான புதிய பிரிவுகளும் ஆரம்பம்
வாரநாள் வகுப்பு: 05.08.2013
வார இறுதி நாள் வகுப்பு: 03.08.2013

தொடர்புகளுக்கு:
Spectra Skills
19, Stanley Road,
(Peoples Bank 2nd Floor),Jaffna
Tel: 021 222 1422/1423 (C-4154)

HIACE வான் விற்பனை

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வக நிறுவனத்தின் பாவனையிலுள்ள 53-XXXX இலக்க TOYOTA HIACE வாகனம் உடன் விற்பனைக்குண்டு. கிழமை நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணி வரை வாகனத்தை பார்வையிட முடியும். (C-4151)

தொடர்புகளுக்கு
021-224 0146
ஆ. ரவீந்திரன்,
தலைவர், வாழ்வகம்

தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
☛ கடிதங்கள் ☛ அன்பளிப்பு பொருட்கள் ☛ உடுபுடவைகள்
☛ CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும். (C-4149)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER



பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளின் உயர்தரமான பட்டப்படிப்பினை இன்றே உறுதி செய்யுங்கள் (C-4153)

LL.B (UK)
கற்கைநெறி

யாழில் சட்டக் கல்வியை வழங்கும் ஒரே கல்வி நிறுவனம்
Prince City Campus இன்
EdHat IHD in Law leading to LL.B (UK)

Batch 5 இற்கான பதிவுகள் நடைபெறுகின்றன.

✔ உலகத் தரம் வாய்ந்த கற்கை நெறி
✔ இலங்கை மற்றும் UK பாட விதானங்களை உள்ளடக்கியது
✔ யாழ்ப்பாணத்தில் 3 வருடங்களையும் பூர்த்தி செய்யலாம்
✔ இலகு தவணை கொடுப்பனவு முறை
✔ இலவசமான ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப கற்கை திட்டங்கள்

University of Wolverhampton
EDhat International
bucks new university United Kingdom

PCC Prince City Campus
இல.275, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 4923855, HotLine: 0775949272

சாரதிகள் 25 பேர் தேவை

யாழ். மாவட்டத்திற்குள் நாகர்கோவில் மணல் டிப்பர் வாகனம் ஓடுவதற்கு சாரதி அனுமதிப்பத்திரத்துடன் கூடிய அனுபவம் வாய்ந்த சாரதிகள் 25 பேர் தேவையாக உள்ளனர். 28.07.2013, 29.07.2013 காலை 10.30 மணி தொடக்கம் நேரில் சமுகம் தரவும்.

✹ வேலைநாள் ஒன்றிற்கான ஊதியம் ✹
2,000 தொடக்கம் 3000 ரூபாய் வரை

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி
வட பிராந்தியக் காரியாலயம்
ஈஸ்வரபகவான் & கம்பனி
வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம்
91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 0212227603, 0770035092 (3485)

மிக உயர்தரம் கொண்ட மணல் விற்பனைக்கு

கட்டட வேலைகளுக்கு தேவையான யாழ் நாகர் கோவில் மணல் உள்ளடங்கலாக மணல் தேவைப் படுபவர்கள் குறிப்பிட்ட இடங்களிலேயே விரைவாகப் பெற்றுக்கொள்வதற்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி
வட பிராந்தியக் காரியாலயம்.
ஈஸ்வரபகவான் & கம்பனி
வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம்
91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.
0770035091 (விண்ணன்)
0770035092 (பகிரதன்)
0770035088 (முருகதாஸ்) (3485)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழாவில் பாடசாலை நூலகங்களுக்கும் பரிசு

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழாவையொட்டி யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் யாழ். மறை மாவட்டமும் இணைந்து மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்ட மாணவர்களுக்கிடையே நடத்திய பேச்சு, கவிதை, கட்டுரைப் போட்டிளுக்கான பரிசளிப்பு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும்.

துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் வெற்றியீட்டிய மாணவர்கள் பதக்கங்கள் ,சான்றிதழ்கள் மற்றும் புத்தகப் பொதிகள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

வெற்றியீட்டிய மாணவர்களுக்கான புத்தகங்களை ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களும் தமிழ்ச்சங்க அங்கத்தவர்களாகவுள்ள எழுத்தாளர்களும் தங்கள் கையொப்பத்துடன் வழங்கவுள்ளனர். போட்டிகளில் அதிகளவான இடங்களை வெற்றி கொண்ட பாடசாலை நூலகங்களுக்கும் புத்தகப் பொதிகள் வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி, கிளிநொச்சி மாவட்டத்தில் தர்மபுரம் மகா வித்தியாலயம், வவுனியா மாவட்டத்தில்ஓமந்தை மத்திய கல்லூரி, மன்னார் மாவட்டத்தில் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி, முல் லைத்தீவு மாவட்டத்தில் வித்தியானந்தக் கல்லூரி ஆகிய பாடசாலைகள் அந்தந்த மாவட்டங்களில் அதிகளவிலான இடங்களைப் பெற்று புத்தகப் பொதிகளைக் பெற்றுக் கொள்ளவுள்ளன என போட்டிச் செயலர் விரிவுரையாளர் ச.லலீசன் அறிவித்துள்ளார்.(அ-6)

# ஓவியப் பயிற்சியும் திரைப்படக்காட்சியும்

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி, உருத்திரபுரம் காந்தி நிலையம் சிறுவர் இல்லத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாணவர்களுக்கான ஓவியப் பயிற்சி வழங்கப்படவுள்ளதுடன் அதனைத் தொடர்ந்து காந்தி வரலாற்று திரைப்படக் காட்சியும் காண்பிக்கப்படவுள்ளது.

காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை காந்தீயம் இதழாசிரியர் எம். ஷாந்தன் சத்திய கீர்த்தியின் நெறிப்படுத்தலில் நடைபெறவுள்ள இந்நிகழ்வை காந்தி நிலையத் தலைவர் தி.இராசநாயகம் தொடக்கவுரையாற்றி ஆரம்பிக்கவுள்ளார்.

இப்பயிற்சி வகுப்பில் வளவாளர்களாக இணுவில் இந்துக் கல்லூரி சித்திரப்பாட ஆசிரியர் செ.ஜெகன் மற்றும் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பாட மாணவன் த.சுகந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் என காந்தீயம் இதழாசிரியர் எம். ஷாந்தன் அறிவித்துள்ளார். (அ)

# தே.க.கல்லூரியின் முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம்தேசிய கல்வியற்கல்லூரியின் முத்தமிழ் விழா நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு, பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் க.கணபதிப்பிள்ளை, கௌரவ விருந்தினராக இலங்கை வங்கி வட பிராந்திய முகாமையாளர் பி.எம்.ரி.தென்னக்கோன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.இந் நிகழ்வில் உள்ளகப் பயிற்சி ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பீடாதிபதி எஸ். அமிர்தலிங்கம் கேட்டுள்ளார். (அ)

# ப்ரச் நோத்திர ரத்னமாலிகா வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ப்ரச் நோத்திர ரத்னமாலிகா நூல் மீள் வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

1981 ஆம் ஆண்டு மில்க்வைற் தொழிலதிபர் கலாநிதி க.கனகராஜாவினால் வெளியிடப்பட்ட ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் செய்தருளிய ப்ரச் நோத்திர ரத்ன மாலிகா வினாவிடை. அன்னாரின் 15 ஆவது தினத்தை முன்னிட்டு அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் சிரேஷ்ட தலைவர் சோ.க.தம்பிப்பிள்ளையால் மீள் வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

பிள்ளைகள் தமக்கும் பெற்றோருக்கும் சமூகத்திற்கும் நல்லவர்களாக உருவாகி சோம்பலின்றி நன்றாக உழைத்து எல்லோருக்கும் நல்லதையே செய்யும் இயல்பினராகி நல் வாழ்வு வாழ்தல் வேண்டும் என்பதையே இந்நூல் வலியுறுத்துகிறது.

இவ் வெளியீட்டின் இலவச பிரதியொன்றைப் பெற விரும்பின் ரூபா 5 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுய முகவரி எழுதப்பட்ட நீண்ட தபாலுறையை அகில இலங்கை காந்தி சேவா சங்கம், இல.774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ள முடியுமென காந்தீயம் ஆசிரியர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி அறிவித்துள்ளார். (அ)

# தொழில் சார் கற்கை நெறிகள்

வடமராட்சிசுருக்கெழுத்துகழகம்பாடசாலையை விட்டு விலகியோரின் நலன்கருதி தொழில் சார் பயிற்சி நெறிகளை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

தமிழ் சுருக்கெழுத்து தட்டச்சு, தமிழ் தட்டச்சு, கணனி (4 மாதம்) ஆகிய கற்கை நெறிகள் வாரத்தில் ஐந்து நாட்களும் கணனி தமிழ் தட்டச்சுப் பயிற்சி வாரத்தில் 2 நாட்களும் ஆங்கில தட்டச்சு மற்றும் தமிழ்தட்டச்சு விசைப் பலகைப் பயிற்சி வார இறுதி நாட்களிலும் நடைபெறவுள்ளன.

ஆர்வமுடையோர் கழகத்தில் நேரடியாகத் தொடர்புகொண்டுவிபரங்களையும் விண்ணப்பப் படிவத்தையும் முற்கூட்டியே பெற்றுக் கொள்ளலாம். 20 பேர் கொண்ட மாணவர் குழுக்கள் சிங்கள மொழி, கணக்கியல் பயிற்சிகளை ஆரம்பிக்கக் கோருவார்களாயின் அது பற்றி பரிசீலிக்கப்படும் எனவும் சமுர்த்தி நிவாரணம் பெறுவோர், இடம்பெயர்ந்தோர் ஆகிய குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படும் எனவும் வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத் தலைவர் வ.சிவச்சந்திரதேவன் அறிவித்துள்ளார். (அ)

# வாரம் ஒரு தகவல்

## விடுதலைக்கான மரணம்

ஆபிரிக்காவுக்கு சென்ற ஒருவர் மீண்டும் நாடு திரும்பும் போது அங்கிருந்து காட்டுக்கிளி ஒன்றை பிடித்துக் கொண்டு வந்தார்.

ஊருக்கு கொண்டு வந்த அக்கிளியை கூண்டில் அடைத்து வளர்த்து வந்தார். ஆபிரிக்க காட்டில் சுதந்திரமாக சுற்றித்திரிந்த அந்தக்கிளி தப்பிக்க வழி தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தது.

தகுந்த நேரத்திற்கு தண்ணீர் ஆகாரம் அனைத்தும் கிடைத்த போதும் அதற்கு விடுதலை ஒன்றே வேண்டியிருந்தது.

சிறிதுகாலம் கழிந்தது. அப்போது அவர் மறுபடியும் ஆபிரிக்காவுக்குப் புறப்பட்டார்.

அவர் ஆபிரிக்காவுக்கு பயணமாகும் முன் அக்கிளியின் கூண்டுக்கு முன் போய் நின்றார்.

கிளியிடம் சென்ற அவர் "கிளியே! நான் உன் ஊருக்குப் போகிறேன். ஏதேனும் செய்தி உண்டா?" என்று கேட்டார்.

அதற்கு கிளி "ஏதோ... உங்கள் தயவில் இங்கே கூண்டுக்குள் நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்பதை அங்கே உள்ளவர்களிடம் கூறுங்கள்" என்று கூறியது.

பின் ஆபிரிக்காவிற்கு சென்ற அவர் அங்குள்ள கிளிகளை எல்லாம் பார்த்து கூண்டில் வளரும் கிளியின் செய்தியை கூறினார்.

காட்டிலுள்ள அநேகமான கிளிகளைப் பார்த்து இச்செய்தியை கூறிய போதும் ஒரே ஒரு கிளி மாத்திரம் இச் செய்தியைக் கேட்டதும் அப்படியே சுருண்டு கீழே விழுந்து இறந்து போனது.

இதைப் பார்த்ததும் அவர் "அடடா இதுதான் நம்ம கூண்டுக்கிளியின் ஜோடிக்கிளி போலிருக்கிறது!" என்று எண்ணிக்கொண்டார்.

ஊருக்கு திரும்பி வந்த அவர் கூண்டுக்கிளியிடம் நடந்ததை கூறினார். உடனே அக்கிளியும் பொல பொலவென கண்ணீர் விட்டது. பின்கூண்டுக்குள்ளேயே சுருண்டு விழுந்தது.

இதைக்கண்டதும் அவர் "ஐயோ பாவம்!" என்று சொல்லியவாறு கூண்டைத் திறந்து அக்கிளியை எடுத்து வெளியே எறிந்தார்.

அவ்வாறு அவர் வெளியே எறிந்ததும் அக்கிளி படபடவென சிறகடித்துப் பறந்து போய் மரத்தின் கிளையில் உட்கார்ந்து கொண்டது.

பின் அக்கிளி அந்த மனிதனைப்பார்த்து " ஏ மனிதனே! கூண்டுக்குள்ளேயிருந்து நான் தப்பிக்க என்ன வழி என்பதை, ஆபிரிக்காவில் உள்ள என் ஜோடிக்கிளி உன் மூலமாகத் தகவல் அனுப்பியது. அவ்வளவுதான் அதுவும் சாகவில்லை.இறந்தது போன்று நடி. கூண்டிலிருந்து தப்பிக்கலாம் என்பதுதான் அது அனுப்பிய தகவல் "என்று கூறியது.

தரையில் நின்று கொண்டிருந்த மனிதனுக்கு அப்போதுதான் புரிந்தது"வாழும் போது விடுதலைக்காக செத்துப் போகிறவர்கள் இறந்த பின்பும் வாழ்ந்து கொண்டிருப்பார்கள்" என்பது.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இராசி பலன்

28.07.2013
(ஆடி 12, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
சஷ்டி பிற்பகல் 3.55 மணிவரை
ரேவதி பின்னிரவு 4.31 மணிவரை
இராகுகாலம் 4.32-6.02 மணிவரை
சுபநேரம் 9.02-10.32மணிவரை

**மேடம்** பொழுதுபோக்கு விடயங்களில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், வழக்கத்தைவிட அதிகநேரம் பணிபுரியும் சூழ்நிலை உருவாகும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்** செல்வாக்கு மேலோங்கும் நாள், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், உறவினர் வருகையால் உற்சாகமடைவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், தொல்லை தந்தவர்கள் மனம் மாறி உதவ முன்வருவர், உற்சாகமான நாள், போசன நன்மையுண்டு.

**கடகம்** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், சுப நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்புண்டு, உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், மறதியால் தவறிய காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள்.

**சிங்கம்** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், உறவினர்களின் மனக்கசப்பிற்கு உள்ளாகாமல் பார்த்துக்கொள்வது நல்லது, மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம்.

**கன்னி** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், புதிய தொழில் தொடங்கும் திட்டமொன்றை மேற்கொள்வீர்கள், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி காண்பீர்கள், கௌரவமான நாள்.

**துலாம்** தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும் விதத்தில் அமையும், நல்லவர்களின் சிநேகிதம் கிடைக்கும், விருந்தினர் வருகையுண்டு, சத்துரு ஜெயமுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்** சுப செய்திகள் வந்து சேரும் நாள், சொல்லை செயலாக்கிக் காட்டுவீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** தாராளமாகச் செலவுகள் செய்து மகிழும் நாள், நேர்மையும் நாணயமும் கொண்ட நண்பர்களால் நம்பிக்கைகள் நடைபெறலாம், அரசியல் செல்வாக்கு மேலோங்கும்.

**மகரம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் நாள், பெண் வழிப்பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும், சிலர் உங்களிடம் தொழில் ரீதியாக உதவி கேட்டு வரலாம், சகோதர வழியில் நல்ல தகவல்கள் வந்து சேரும்.

**கும்பம்** கோரிக்கைகள் நிறைவேறும் நாள், பொருளாதார நிலை உயர்வடையும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மீனம்** பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், திட்டமிட்ட காரியமொன்றில் திடீர் திருப்பங்கள் ஏற்படலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 40 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 120 | 80 |
| தக்காளி | 60 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 45 | 60 | 60 |
| கோவா | 60 | 120 | 120 |
| கரட் | 160 | 140 | 60 |
| பூசணி | 25 | 40 | 40 |
| புடோல் | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 160-200 | 140-180 | 160 |
| பெரிய வெங்காயம் | 110 | 120 | 100 |
| பாகற்காய் | 60 | 60 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | -- | 120 |
| பயற்றங்காய் | 40 | 60 | 60 |
| லீக்ஸ் | 110 | 120 | 140 |
| பீற்றூட் | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 60 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 70-100 | 160 | 160 |
| போஞ்சி | 110 | 100 | 160 |
| கத்தரிதம்புள்ள | 20 | -- | -- |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 20 |
| தேசிக்காய் | 100 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 35 | 35-40 |
| [illegible] | 120 | 120 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினமும் கசிப்பு அருந்திய நபருக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத சிறை


(கரவெட்டி)

நெல்லியடி பொலிஸ் பிரிவில் தினமும் கசிப்பு அருந்திய நிலையில் போதையில் நடமாடிய நபர் ஒருவருக்கு இரண்டு வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறுமாத கால சிறைத் தண்டனை வழங்கி பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்துள்ளது.

நெல்லியடி பொலிஸ் பிரிவில் மேற்படி நபர் மதுபோதையில் நடமாடிய வேளை அவரை கைது செய்த பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் அவர் தொடர்ந்து தினமும் கசிப்பு அருந்தி வந்தமை தெரிய வந்துள்ளது.

எனவே அந்நபரை நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் பொலிஸார் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதவான் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் அவரைக் குற்றவாளியாகக் கண்டு மேற்படி தீர்ப்பை வழங்கியதுடன் அந்நபரை தெல்லிப்பழை வைத்தியசாலையில் உள்ள குடிவகை சிகிச்சை பிரிவில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி வரை சிறைச்சாலை உத்தியோகத்தர் ஊடாக அனுமதிக்குமாறும் உத்தரவிட்டார். (ம-24)




# தாபரிப்பு பணம் செலுத்தாத குடும்பஸ்தருக்கு விளக்கமறியல்

(கரவெட்டி)

வடமராட்சி பருத்தித்துறை பொலிஸ் பிரிவில் தாபரிப்பு வழக்கில் மனைவிக்கு தாபரிப்பு பணம் செலுத்தாத குடும்பஸ்தர் ஒருவரை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

மேற்படி பொலிஸ் பிரிவில் இக்குடும்பஸ்தர் இரு திருமணங்கள் செய்துள்ளார்.

இந்நிலையில் முதல் மனைவியை அவர் கைவிட்டதாக முதல் மனைவியால் தாக்கல் கொடுக்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்து குடும்பஸ்தருக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றில் தபாரிப்பு வழக்கு இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் முன்னதாகவே மன்றினால் கட்டளையிடப்பட்ட தாபரிப்பு தொகையை செலுத் தாமையாலும் வழக்குத் தவணைக்கு சமுகம் அளிக்காமையாலும் குறித்த குடும்பஸ்தர் நேற்று முன்தினம் மன்றில் ஆஜராக வேண்டியேற்பட்டது. இதன்போது வழக்கை விசாரித்த நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் அவரை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-ம-24)

# பிரதேச அபி.வங்கி தையல் இயந்திரங்களை வழங்கியது

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட 15 பேருக்கு பிரதேச அபிவிருத்தி வங்கியினால் தையல் இயந்திரங்கள் இலகுகடன் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை லோட்டஸ் வீதியில் உள்ள பாரதியார் சனசமூக நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் இந்த தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மாதர் அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் உற்பத்திறன் மேம்பாட்டு அமைச்சின் தொழில் வழிகாட்டல் பிரிவினால் நடத்தப்பட்ட பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கே இந்த தையல் இயந்திரங்கள் இலகுகடன் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலாளர் ப.செந்தில்நந்தனன் மற்றும் நல்லூர் பிரதேச திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச அபிவிருத்தி வங்கியின் சுன்னாகம் கிளையின் முகாமையாளர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-6)

# சங்கங்களை பதிவு செய்தல்

செல்வாபுரம், கரணவாய், செவ்வந்தி அபிவிருத்தி சங்கங்களைப் பதிவு செய்வதற்கான நிகழ்வு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இளங்கோ சனசமூக நிலையத்தில் ஜெ.சந்திரகலா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கி தலைமையக உதவிப்பொது முகாமையாளர் டபிள்யூ.ஏ.சி.திரேசா கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக இலங்கை வங்கி நெல்லியடி கிளை முகாமையாளர் ரி.செந்தில்நாதன், மத்திய வங்கி பொறுப்பதிகாரி ஆர். ஸ்ரீபத்மநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-ம-60)

# நெடுந்தீவு பிரதேசத்திற்கான நடமாடும் சேவை ஓகஸ்டில்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவில் வசிக்கும் பொதுமக்களின் நலன்கருதி, தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்கான நடமாடும் சேவை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ளது.

பதினாறு வயதைப் பூர்த்தி செய்து முதற்தடவையாக தேசிய அடையாள அட்டையை பெற்றுக் கொள்ளாதோரும் நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவில் தேசிய அடையாள அட்டையைத் தொலைத்து பிரதி தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளாதோரும் தேசிய அடையாள அட்டை சேதமடைந்து பழுதடைந்திருந்தால் அல்லது திருத்தம் செய்ய வேண்டிய தேவை உடையோரும் இந்நடமாடும் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மேலும் இந்திய அகதிகள் முகாமில் பிறந்து 16 வயது பூர்த்தியடைந்து முதற்தடவையாக தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளவுள்ளோர் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், பிரஜாவுரிமைப் பத்திரம் இல்லாதோர் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு உரிய ஆவணங்களைத் தயார்படுத்திக்கொண்டவர்களும் இச் சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ள விரும்புவோர் தமது கிராம அலுவலகத்துடன் அல்லது பிரதேச செயலகத்துடன் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு நெடுந்தீவு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (அ)

# 150 இராணுவத்தினர் இரத்ததானம் வழங்கினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள 512 ஆவது இராணுவப் படைப்பிரிவைச் சேர்ந்த 150 இராணுவத்தினர் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று இரத்ததானம் செய்தனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நிலவுகின்ற குருதிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் இந்த இரத்ததானம் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

நேற்றுக் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை இராணுவத்தினர் இந்த இரத்ததான நிகழ்வில் பங்கு கொண்டிருந்தனர்.

யாழ். மாவடத்தில் நிலவும் குருதிப் பற் றாக்குறையைக் கருத்திற்கொண்டு இந்த இரத்தம் வழங்கும் நடவடிக்கையில் இராணுத்தினர் ஈடுபட்டுள்ளதாகவும் கடந்த காலத்திலும் பலமுறை இரத்ததான நிகழ்வுகளில் இராணுவத்தினர் பங்கு கொண்டுள்ளதாகவும் யாழ்.போதனா வைத்தியசாலை இரத்தவங்கி அதிகாரிகள் தெரிவித்தனர் என்பது குறிப்பிடக்கத்தக்கது. (அ-6)




# குடாரப்பு பகுதியில் மீள்குடியமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சி கிழக்கிலுள்ள குடாரப்பு பகுதியில் மீள்குடியேற்றம் இடம்பெறவுள்ளதாக அரசு தரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இன்னும் ஓரிரு வாரங்களில் இந்தப் பகுதியில் மீள்குடியேற்றம் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் யுத்தத்திற்குப் பின்னர் பல இடங்களில் மீள்குடியேற்றம் இடம்பெற்றபோதும் யாழ். வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயம் உள்ளடங்கலாக இன்னும் பல பகுதிகளில் மீள்குடியேற்றம் இடம்பெறவில்லை.

இந்நிலையில் வடமராட்சி குடாரப்பு பகுதியில் ஓரிரு தினங்களில் மீள்குடியேற்றம் இடம்பெறவுள்ளதாக தெரியவந்துள்ளது. (அ-6)

# துவிச்சக்கரவண்டியில் சமாந்தர பயணம்; நபர்களுக்கு அபராதம்

(கரவெட்டி)

வடமராட்சி நெல்லியடி பொலிஸ் பிரிவில் வீதிப் போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கும் விதமாக துவிச்சக்கரவண்டியில் சமாந்தரமாக சென்ற மூன்று நபர்களுக்கு 9 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு முன்பாக வீதிப் போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் மூன்று நபர்களும் சமாந்தரமாக துவிச்சக்கரவண்டியில் சென்ற வேளை வீதிப் போக்குவரத்து பொலிஸாரால் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இவ்வழக்கு விசாரணை நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் அவர்களைக் குற்றவாளிகளாகக் கண்டு மூவருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு நீதவான் உத்தரவிட்டார். (அ-ம-24)

# நிர்வாகிகளின் பதவியேற்பு

லயன் மாவட்ட 306பி1 ஐச் சேர்ந்த மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் மற்றும் மானிப்பாய் பரிஷ் லியோ கழகங்களின் 2013/2014 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் பதவியேற்பு வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு கழகத்தின் மானிப்பாய் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக லயன்ஸ் ஆளுநரின் மாவட்ட பிரதிச் செயலாளர் லயன் ஜெயபாலனும் லயன் சீமாட்டி திருமதி ஸ்கைலாவும் கௌரவ விருந்தினராக லயன்ஸ் ஆளுநரின் மாவட்ட பிரதி பொருளாளர் லயன் அன்பானந்தனும் லயன் சீமாட்டி பற்குணவதியும் சிறப்பு விருந்தினராக முன்னாள் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் ராஜசூரியும் லயன் சீமாட்டி சுலோஜனாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இது மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தின் 27ஆவதும் மானிப்பாய் பரிஷ் லியோ கழகத்தின் 24ஆவதும் பதவியேற்பு வைபவமாகும்.

இந்நிகழ்வில் ஆதரவற்றோருக்கான ஒரு தொகுதி உதவிகளும் வழங்கி வைக்கப்படவுள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ-ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விற்பனைக்கு**

Toyato Corolla (121) கார் wpkc....

விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகொள்ள: 0777173414**

(3479)

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

நீல நிற Yamaha Fazer WR XXXX இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் மிகவும் மலிவு. நல்ல நிலையில் உடன் விற்பனைக்குண்டு.

**தொ.பே: 0779107153**

தொடர்பு: A.G.செல்வம்

107, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.

(3480)

**விற்பனைக்கு**

கொடிகாமம் புகையிரத நிலையத்திற்கு முன்பாக நான்கு பரப்புக்காணி கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.

**தொடர்புக்கு: 0774069974**

(3450)


# சமூக மேம்பாட்டு சேவைநலன் பாராட்டுவிழா

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம் மற்றும் புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியம் ஆகியன இணைந்து நடத்தும் எழுச்சித் தந்தை ஆர்.எம்.நாகலிங்கத்தின் 65 ஆவது ஆண்டு நிறைவு சமூக மேம்பாட்டுச் சேவைநலன் பாராட்டு விழா, எழுச்சிப்பாதை நூல்வெளியீட்டு விழா மற்றும் சாதனையாளர்களுக்கான விருது வழங்கும் விழா என்பன இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.30 மணி தொடக்கம் மாலை 5.50 மணிவரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாச போஷகர் சி.செல்லத்துரை தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கத்தவருமான பேராசிரியர் சு.மோகனதாஸ், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கம், இலங்கை கல்வி அமைச்சின் ஓய்வு நிலை மேலதிக செயலாளரும் அரச பொதுச் சேவை ஆணைக்குழு அங்கத்தவருமான உடுவை எஸ். தில்லைநடராசா, மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிரேம்சங்கர் , கொழும்பு பல்கலைக்கழக முன்னாள் கல்விப் பீடாதிபதி பேராசிரியர் சோ. சந்திரசேகரம், யாழ். பல்கலைக்கழக முன்னாள் கல்விப் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி சபா. ஜெயராசா, கலாபூஷணம் சைவப் புலவர் சு.செல்லத்துரை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வுகளுக் கான ஆசியுரையை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் ஆற்றுவார். காலை, மாலை என இரு வேளைக ளில் இடம்பெறும் இந் நிகழ்வுகளில் காலை நிகழ்வுகளாக சேவை நலன்பாராட்டு விழாவும் எழுச்சிப்பாதை நூல் வெளியீடும் மாலை நிகழ்வாக சாதனையாளர்களுக் கான விருது வழங் கும் நிகழ்வும் இடம் பெறவுள்ளது. எழுச் சிப்பாதை நூல் வெளியீட்டில் நூல் வெளி யீட்டுரையை பேராசிரியர் கலாநிதி சபா. ஜெய ராசா, நயப்புரையை பேராசிரியர் நா. சண்முக லிங்கம், உடுவை. எஸ். தில்லைநடராசா ஆகியோர் வழங்க வுள்ளனர்.

(அ-5)


**Hiace வான் விற்பனை**

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வக நிறுவனத்தின் பாவனையிலுள்ள 53XXXX இலக்க Toyota Hiace வாகனம் உடன் விற்பனைக்குண்டு.

கிழமை நாட்களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணிவரை வாகனத்தைப் பார்வையிட முடியும்.

**தொடர்புகளுக்கு : 021 2240146**

ஆ.ரவீந்திரன், தலைவர், வாழ்வகம்.

(சி-4151)

***New Science Hall, Jaffna***

**தொழில்நுட்பவியல் கற்கை நெறி**

***(Technology Subject Stream)***

- Science for Technology
- Bio Systems Technology
- Engineering Technology

A/L 2015

விஞ்ஞானம், தொழில்நுட்பவியல் துறைசார்ந்த விரிவுரையாளர்களால்

**ஆரம்பம்: 28.07.2013**

ஞாயிற்றுக்கிழமை 3 மணி pm

**தொடர்புகளுக்கு: தொ.பே: 0771240400**

(சி-4152)


## உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரல்

வலிகாமம் கல்வி வலயத்தில் பின்வரும் பாடங்களுக்கு நிரந்தர அல்லது கடமை நிறைவேற்று உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்கு வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

1. உதவிக் கல்விப் பணிப்பாளர்-உடற்கல்வி
2. உதவிக் கல்விப் பணிப்பாளர்-முன்பள்ளி
3. உதவிக் கல்விப் பணிப்பாளர்-முறைசாராக் கல்வி
4. உதவிக் கல்விப் பணிப்பாளர்-சமூகவிஞ்ஞானம்
5. உதவிக் கல்விப் பணிப்பாளர்-வர்த்தகம்
6. உதவிக் கல்விப் பணிப்பாளர்-தொழில்நுட்ப பாடங்கள்

**விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்**

★ இப்பதவி வெற்றிடத்துக்கு விண்ணப்பிப்பவர்கள் வலிகாமம் வலயத்துக்கு உட்பட்டவர்களாகவும், குறைந்தது 3 வருட காலமேனும் சேவையாற்றக் கூடிய வயதெல்லை உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

★ இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு III ஐச் சேர்ந்த, குறிப்பிட்ட பாடத்தை (அல்லது அப்பாடம் சார்ந்த ஏற்புடைய பாடத்துறை) ஒரு பாடமாக கொண்டு பட்டம் பெற்ற இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு I அல்லது இலங்கை ஆசிரியர்சேவை வகுப்பு 2-1 ஐச் சேர்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு IIIஇல் உள்ள உத்தியோகத்தர்கள் எவரும் இல்லாதவிடத்து, இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு I இல் உள்ள மற்றும், இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 2-1 உடன் சேவைக்கால ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றுவோர் ஆகியோரிடமிருந்து பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 2-1 இலுள்ள ஆசிரியருடமிருந்து தெரிவு மேற் கொள்ளப்படும்.

**குறிப்பு:-**

விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப் படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தை 12.08.2013 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**செ.சந்திரராஜா,**

**வலயக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம்.**

(C-4144)


**லண்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்கான விளக்கம்**

- மேலே குறிப்பிட்டுள்ள நாடுகளுக்கு செல்ல விரும்புவோர் நேரில் வரவும்
- போய் சேர்ந்த பின்பு பணம் செலுத்தலாம்
- மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்
- நிபந்தனைகளுக்கு உட்பட்டது

(3378)

**அனி இன்டர் நஷனல் எடியுகேஷன் கன்சல்டன்சி சர்விஸ்**

**இல. 72, இலுப்பையடி சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**

**தொ.பே.இ. 0214921831, 0214921832**

இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து(V)<br>நட்சத்திரம்:அவிட்டம் 4<br>உயரம்: 5'8"<br>கி.பா : 49-25<br>தககைமை/தொழில்:A/L<br>பொலிஸ் உத்தியோகத்தர்<br>தொ.இ:B1865 | பிறப்பு: 1985இந்து (V)<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம்: 5' 1"கி.பா- 35<br>தகைமை/தொழில்: BCS<br>முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ:G1867 |
| பிறப்பு: 1982 றோ.க (V)<br>நட்சத்திரம்: ஆயிலியம் 2<br>உயரம்: 5' 8" கி.பா:21 செவ்<br>1ல்தகைமை/தொழில்: A/L,Cvil<br>விரிவுரையாளர்<br>தொ.இ:B1868 | பிறப்பு: 1988 இந்து(V)<br>நட்சத்திரம்:;மூலம் 2<br>உயரம்: 5'6" கி.பா- 35<br>தகைமை/தொழில்: A /L ,<br>நூலகவிஞ்ஞானம்<br>தொ.இ:G1870 |
| பிறப்பு: 1983 இந்து(V)<br>நட்சத்திரம்: திருவோணம்<br>1ம்உயரம்: 5' 7"<br>தகைமை/தொழில்: MBCS, MSC, Software {eng}<br>தொ.இ:B1869 | பிறப்பு: 1975 இந்து(V)<br>நட்சத்திரம்: உத்தரம் 1ம்<br>உயரம்: 5'3"கி.பா: 06 செவ் 8ல்<br>தகைமை/தொழில்: BBA,MCA<br>கற்பித்தல் தனியார்<br>நிறுவனம்சைவபோசனம்<br>தொ.இ:G1873 |
| பிறப்பு: 1988 RC(V)<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>உயரம்: 5' 9"கி.பா :<br>தகைமை/தொழில்:A/L தனியார்<br>தொ.இ:B1871 | பிறப்பு: 1980 இந்து(V)<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 3ம்<br>உயரம்: 5' 4" கி.பா:36 செவ்8 இல<br>தகைமை/தொழில்: Engineer<br>தனியார்<br>தொ.இ:G1874 |

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

**(சர்வதேச இலவச திருமண சேவை)**

**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**

**தொடர்பு:- 021 720 1005**

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் ஒருபோதும் மாகாண சபை முறைமையை ஒழிக்கமாட்டோம்

## வலுப்படுத்தவே நடவடிக்கை என்கிறார் அமைச்சர் பசில்

(கொழும்பு)

**மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்றவகையில் கழிவறைகளை அமைக்கவில்லை என்றுகூட சில நாடுகள் இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பதாக மேற்குலக நாடுகளின் அழுத்தங்கள் குறித்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கிண்டலடித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், இந்தியா எமது நட்பு நாடு. அது ஏனைய நாடுகளைப்போன்று எம்மீது அழுத்தம் கொடுப்பதில்லை.

சில நாடுகள் மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்றவகையில் கழிவறைகள் அமைக்கப்படவில்லை என்றுகூட எமக்கு அழுத்தம் கொடுத்து குற்றஞ்சாட்டுகின்றன.

மேலும் வடக்கு மாகாண சபைத்தேர்தலில் ஐந்து மாவட்டங்களில் நான்கில் எம்மால் வெற்றி பெறமுடியும் என்று எதிர்பார்க்கிறோம்.

13ஆவது திருத்தச் சட்டம் என்பது ஒரு அரசியலமைப்புத் திருத்தமே தவிர, அது தனியான பிரிவு அல்ல. இது அரசியலமைப்பின் 154 ஆவது பிரிவான கணக்காய்வாளர் நாயகம் தலைப் பின்கீழ் ஆ பிரிவில்தான் மாகாண சபைகள் தொடர்பான இந்த 13 ஆவது திருத்தம் இணைக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பை எடுத்துப்பார்த்தால் அதுவும் ஒழுங்கு முறையாக தயாரிக்கப்படவில்லை. மக்களின் கருத்தை அறியாமல் செயற்பட்டதன் விளைவே இது.

நாம் ஒருபோதும் மாகாண சபை முறையை ஒழிக்கமாட்டோம். அதனை வலுப்படுத்தவே நடவடிக்கை எடுக்கிறோம்.

அனைவரும் ஒன்றுபட்ட இலங்கைக்குள் முரண்பாடுகளின்றி ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் வாழவேண்டும். மீண்டும் உயிரிழப்புகளும் அழிவுகளும் ஏற்பட ஒருபோதும் இடமளிக்க முடியாது என்றும் அவர் கூறியுள்ளார். (அ-2)

# இந்தோ. தடுப்பு முகாமிலிருந்து இலங்கையர்கள் தப்பி ஓட்டம்

இந்தோனேசிய தடுப்பு முகாமொன்றிலிருந்து இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் தப்பிச் சென்றுள்ளனர். இந்தோனேசியாவின் சுகாபூமி என்னும் தடுப்பு முகாமிலிருந்த இலங்கையர்கள் தப்பியோடியுள்ளனர்.

மூன்று இலங்கையர்களும் மூன்று ஈரானியர்களும் இவ்வாறு தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. குறித்த முகாமில் 66 புகலிடக் கோரிக்கையாளர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். தற்போது 60 புகலிடக் கோரிக்கையாளர்களே இந்த முகாமில் இருப்பதாகவும் ஆறு பேர் தப்பிச் சென்றுள்ளதாகவும் முகாம் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யாருக்கும் தெரியாமல் எவ்வாறு குறித்த இலங்கை மற்றும் ஈரானிய புகலிடக் கோரிக்கையாளர்கள் தப்பிச் சென்றனர் என்பது புரியவில்லை என முகாம் பொறுப்பதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காணாமல் போனவர்களை தேடும் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# நீதிமன்றினுள் ஒலித்தது கையடக்கத் தொலைபேசி

## செலுத்தினார் அபராதம்

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் வழக்கு இடம்பெற்ற வேளை கையடக்க தொலைபேசியை ஒலிக்க விட்ட நபர் ஒருவருக்கு 6 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.


கொழும்பில் இருந்து பண மோசடி வழக்கு ஒன்றுக்காக பருத்தித்துறை வந்திருந்த முறைப்பாட்டாளர் நீதிமன்ற திறந்த வளாகத்தில் வழக்கு இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளை தனது கையடக்க தொலைபேசியை செயலிழக்கச் செய்யாது ஒலிக்க விட்டுள்ளார்.

அந்நபருக்கு எதிராக இரண்டு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து நீதிமன்ற பொலிஸார் வழக்கை பதிவு செய்தனர்.

இந்த நபரை பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் பொலிஸார் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதவான் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் அவரைக் குற்றவாளியாக கண்டு முதலாவது குற்றச்சாட்டான பொலிஸாரின் வார்த்தையை மதிக்காது நடந்தமைக்கு 3 ஆயிரம் ரூபாவும் இரண்டாவது குற்றச்சாட்டான நீதிமன்ற திறந்த வளாகத்தில் கையடக்க தொலைபேசியை ஒலிக்க விட்டமைக்கு 3 ஆயிரம் ரூபாவும் அபராதமாக செலுத்துமாறு உத்தரவிட்டார். (அ-ம-24)

# மரண அறிவித்தல்



புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
021 224 1805

## திரு.இரத்தினம் சிறீதரன்
## (குமார்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் கனடா மொன்றியலை வதிவிடமாகவும் கொண்ட இரத்தினம் சிறீதரன் அவர்கள் 21.07.2013 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி இரத்தினம் (முன்னாள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர்) காலஞ்சென்ற இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், இரஞ்சினிதேவி (இலங்கை), காலஞ்சென்ற சிறீரஞ்சன் மற்றும் இரஞ்சிதமலர் (இலங்கை), சிறீகாந்தன் (மொன்றியல்), சிறீவரதன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புச்சகோதரரும் வைரவநாதன், அருந்தவராசா (இலங்கை), சிவகௌரி (மொன்றியல்), முருகதர்ஷினி (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சொரூபன் (கண்ணன்-மொன்றியல்), சொரூபி (பிரான்ஸ்), பிரதீபா, ஜெயரூபி (இலங்கை), நவரூபி (ரொரன்ரோ) ஜீவரூபி, கார்தீபா (இலங்கை) , காலஞ்சென்ற கஜனா மற்றும் கஜந்தனா, பிரதீப், கஜந்தன் (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெயராஜ் (பிரான்ஸ்), சோதிநாதன், சுதர்சன் (இலங்கை), ரஜீவன் (ரொரன்ரோ), அபிராமி, அபிதா, அபினேஸ் (டென்மார்க்), விபூஷினி (மொன்றியல்) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் லக்ஷிகா, அபிசன், அபிசா, ஜெலக்சன் (பிரான்ஸ்), கிருஷிகா, அஸ்வின், நிஷானந், சுயின், யதுர்சா (இலங்கை) ஆகியோரின் அன்பு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை 28.07.2013 பி.ப. 2.30 மணிக்கு Rideau Memorial Garden's & Funeral Home, 4275 Sources Boulevard, Dollard- des - Ormeaux, QC HSB 2A6, Canada இல் தகனஞ்செய்யப்படும்.

அத்துடன் அவரது தந்தையாரின் இல்லத்தில் மரணச் சடங்கு நிகழ்வுகள் இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குத் தேர்தலுக்கு பொதுநலவாய கண்காணிப்பாளர்களை அழையுங்கள்

## பவ்ரல் வலியுறுத்து

(கொழும்பு)

**பொதுநலவாய நாடுகள் கண்காணிப்பாளர்களை எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் கடமையில் ஈடுபடுத்த வேண்டுமென பவ்ரல் அமைப்பு கோரியுள்ளது. எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வட, வடமேல் மற்றும் மத்திய மாகாண சபைகளுக் கான தேர்தல்கள் நடைபெறவுள்ளன.**

இந்தத் தேர்தலில் பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்த தேர்தல் கண்காணிப்பாளர்களைக் கடமையில் ஈடுபடுத்துமாறு பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஆசிய தேர்தல் கண்காணிப்பாளர்களை மட்டுமன்றி பொதுநலவாய நாடுகள் கண்காணிப்பாளர்களையும் தேர்தல் கடமையில் ஈடுபடுத்த வேண்டியது அவசியமானது என அவர் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவிடம் கோரியுள்ளார்.

சுதந்திரமானதும் சுயாதீனமானதுமான தேர்தல்களை உறுதிப்படுத்த கூடுதலான தேர்தல் கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தேர்தல் கண்காணிப்பு முறைமையை எமது நாட்டுடன் ஒப்பீடு செய்ய முடியாது எனவும் பாரிய பொருட் செலவில் கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மூன்று மாகாண சபைகளிலும் நடைபெறவுள்ள தேர்தல்களுக்காக 4 ஆயிரத்து 500 பேரை கடமையில் ஈடுபடுத்த திட்டமிட்டுள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஹெட்டியாராச்சி சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

## மஹிந்த வாழ்த்து

(கொழும்பு)

புதிய லிபிய ஜனாதிபதி நூரி அலி புஸாமினுக்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

நூரி அலி புஸாம் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டமை மகிழ்ச்சியளிப்பதாக இலங்கை ஜனாதிபதி தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். புதிய நிர்வா கத்தின் கீழ் லிபியாவுடனான தொடர்புகளை மேலும் விஸ்தரிக்க முயற் சிகள் எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித் துள்ளார்.

லிபியாவில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தேசிய காங்கிரஸ் வேட்பாளர் புஸாமின், வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## இந்திய துணைத்தூதரகம் விண்ணப்பம் கோருகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்தியத் துணைத்தூதரகம் நடத்தவுள்ள யோகா மற்றும் ஹிந்தி, இசைக்கருவி வகுப்புக்களுக்கான விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு இந்திய தூதரகம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலக்கம் 14, மருதடி வீதி, நல்லூரிலுள்ள யாழ். இந்தியத் துணைத்தூதரகத்தில் இந்த பயிற்சி நெறிகள் அனைத்தும் எதிர்வரும் ஓகஸ்ட்மாதம் அல்லது செப்டெம்பர்மாதமளவில் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக யாழ். இந்தியத் துணைத்தூதரகம் விடுத்துள்ள ஊடாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பயிற்சி நெறியில் இணைந்து கொள்ள விரும்புவர்கள் தமது விபரங்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதிக்கு முன்னர் cgi.jaffna.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது 021 222 0503 என்ற தொலைநகல் இலக்கத்திற்கோ அனுப்பி வைக்க முடியும்.

விண்ணப்பதாரிகள் பெயர் மற்றும் வயது, இணைய விரும்பும் பாட நெறி போன்ற விடயங்களையும் தொலைபேசி இலக்கத்துடன் அனுப்பி வைக்க வேண்டும் என யாழ். இந்தியத் துணைத்தூதரகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (அ-6)

## போலி நகைகளை அடகு வைத்த நால்வருக்கு விளக்கமறியல்

(கரவெட்டி)

யாழ். மாவட்டத்தில் இயங்கும் பல வங்கிகளில் போலி நகைகளை அடகு வைத்ததாக குற்றம் சாட்டப்பட்ட முக்கிய 4 சந்தேக நபர்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தர விட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள பல வங்கிகளில் போலி நகைகளை அடகு வைத்தவர்கள் என சந்தேகிக்கப்படும் இந்த 4 சந்தேக நபர்களையும் நெல்லியடி பொலிஸார் கடந்த வியாழக்கிழமை நெல்லியடி மக்கள் வங்கியில் வைத்து 9 1/2 பவுண் போலி நகைகளை அடகு வைக்க முயன்ற வேளை கைது செய்தனர்.

இந்த 4 சந்தேகநபர்களும் முச்சக்கர வண்டியில் சென்று ஒரே நாளில் யாழ். மாவட்டத்தில் உள்ள பல வங்கிகளில் போலி நகைகளை அடகு வைத்துள்ளதாக விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

4 சந்தேக நபர்களையும் நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் பொலிஸார் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதவான் இரு பெண்கள், இரு ஆண்கள் உட்பட 4 சந்தேக நபர்களையும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-ம-24)

## 6000 இலங்கையர்கள் தாயகம் திரும்பினர்

சவுதிஅரேபியாவிலிருந்து 6 ஆயிரம் பணியாளர்கள் நாடு திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


அங்கு சட்டவிரோதமான முறையில் தங்கியிருந் தவர்களே இவ்வாறு நாடு திரும்பினர்.

சவுதிஅரேபிய அரசாங்கம் வழங் கிய பொது மன்னிப்புக் காலத்தை பயன்படுத்தி குறிப்பிட்ட பணியாளர்கள் நாடு திரும்பியுள்ளனர். சவுதி அரேபியாவில் 16 ஆயிரம் இலங்கையர்கள் சட்டவிரோதமான முறையில் கடமையாற்றி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பொது மன்னிப்பு காலத்தை 6 ஆயிரம் பேர் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொண்டுள்ளனர்.

எனினும், பலர் தொடர்ந்தும் சட்டவிரோதமான முறையில் கட மையாற்றி வருவதாகவும், பொது மன்னிப்புக் காலத்தை பயன்படுத்திக்கொள்ளுமாறும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

சவுதிஅரேபியாவிற்கான இலங்கைத் தூதரகம் இலங்கைப் பணியாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருவதாக குறிப்பிட்டுள்ளார். (அ-2)



அவுஸ்திரேலியாவிற்கு சட்டவிரோதமாக பயணித்துக் கொண்டிருந்த படகு பழுதானதில் தத்தளித்துக் கொண்டிருந்தவர்களைக் கடற்படையினர் மீட்பதைப் படத்தில் காணலாம்.

## பிரிட்டன் பிரஜை கொலைக்கு வருத்தம் தெரிவித்தார் பசில்



(கொழும்பு)

பிரித்தானிய தன்னார்வத் தொண்டர் குர்ஹாம் சாக்கீ படுகொலைச் சம்பவத்திற்காக இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ வருத்தம் வெளியி ட்டதாக பிரித்தானிய பாராளுமன்ற உறுப் பினர் சிமோன் டான்சூக் தெரிவித்துள்ளார்.

குர்ஹாம் சாக்கீ படுகொலை மற்றும் அவரது ரஷ்ய காதலி தாக்கப்பட்டமைக்காக அமைச்சர் பசில் ராஜபக்ஷ மன்னிப்பு கோரியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் தொடர்ச்சியாக கேள்வி எழுப்ப உத்தேசித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். பிரித்தானிய பாராளுமன்றில் இது குறித்து கேள்வி எழுப்பப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

குர்ஹாம் சாக்கீ கொலை குறித்த விசாரணைகள் நிறைவடையாவிட்டால் அது குறித்து பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் பொது நலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளின் போது கேள்வி எழுப்ப வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

2011 ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் தினமன்று குர்ஹாம் சாக்கீ, அவரது ரஷ்ய காதலி ஆகியோர் தாக்கப்பட்டனர். இந்தத் தாக்குதலில் தன்னார்வத் தொண்டரான குர்ஹாம் சாக்கீ படுகொலை செய்யப்பட்டார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பாரதி கண்ட புதுமைப்பெண் என் தமிழ் ஆசான்

நேர் கொண்ட பார்வை
நிமிர்ந்த நன்னடை
சுட்டெரிக்கும் விழிகள்
வீறுகொண்ட வீரம்
விசும்பின் மனதும்
விருட்சமாகும் சுபீட்சமும்
சொல்வன்மையும்
செஞ்சொற்கொண்டு
உதிரும் வார்த்தைகள்
உள்ளமதில் எழுச்சியை
எழுப்பிவிடும் உணர்ச்சிகள்
கண்ணியம் அவர் கண்களில்
கதிராகும்- கதிரவனும் அவர்
கனவில் வசமாகும்
காக்கப்பொருளாம்- அடக்கம்
அவர் மீது ஒளியாகும் ,
விட்டுக்கொடு அடுத்தவனைக் கொஞ்சம்
தட்டிக்கொடு என்று தினமும்
வகுப்பில் வழிமொழிவார்
அன்பினில் தாயும்
அறியாமை அகற்றிடும்
அழகியுமாய் அறிவினில்
உறைகின்றார் எம் ஆசான்

அ.நளினாசினி, கோண்டாவில்

## கல்வியில் காதல் கொள்

கல்வி கற்றுப்பார்
உன்னைச் சுற்றி
பட்டங்கள் தோன்றும்
விலகிச் சென்ற சொந்தங்கள்
உம்மைத் தேடி வரும்
வாழ்க்கை அர்த்தப்படும்
மண்வீடுகள் கல் வீடுகளாகும்
உன் அறிவுரையை
இரண்டு பேர் கேட்பார்கள்
கல்வி கற்றுப்பார்
சுற்றுகின்ற நாற்காலியில்
நீ அமர்வாய்
உன்னைச் சுற்றி
நான்கு பேர் இருப்பார்
படிக்கின்ற காலத்தில்
கல்வியின் அருமை
நமக்கு தெரிவதில்லை
தெரிந்து விட்டால்
நாளை நாமும்
பெரியவர்களாவோம்

எம்.நித்தி, தாவடியூர்

## தம்பியுடையான்...



தம்பி எழுந்தான்
தடல்புடலாய் வெளிக்கிட்டான்
தலைவாரிச் செல்லடா என
தாய் கூச்சலிட்டாள்
பஷன் இது என சிலுப்பினான்
செம்பட்டை பற்றிக்கிடந்த தலையை
ரியூசன் செல்கிறான்; யாழ்ப்பாணம்
தாய் ஒப்பித்தாள் கணவனிடம்
தந்தையின் வியர்வைத் துளிகளை
நறுமணமாக்கி பூசியபடி
நடக்கிறான் பொறுப்பற்று
தந்தையோ...
அவன் எதிர்காலத்தை சிந்தித்தபடி

மாவை. நா. கஜேந்திரன்

## வேலை வேண்டும்

நிலமும் நிலத்தடி நீர் வளமும் இருக்க
தல மரபின் வழித்தொழில்களும் இருக்க
பாடுபடச் பஞ்சிப்பட்டும் பவிசில்லை என்றும்
கஞ்சிக்கு வழிதேடும் கவலையின்றி
காலம் விடுகின்ற காளையரைப்பார்த்து
காலடியில் மிதிபடும் பூமிப்பெண் சிரிப்பாள்
விட்டேனா பார் வெளிநாடு போவேன் என்று
போலி முகவரிடம்
காசைத் தொலைத்தும்
சிலவேளை போனாலும் சில்லறை
வேலைகளை அங்கு செய்வீர்
இங்கு செய்யமாட்டீர்
புதிய தொடர்பாடல் தொழில்நுட்பம் என்று
கற்றறிந்து செய்ய கனவிசயம் இருக்கு
உத்தியோகம் எனின் உழைத்து
ஊக்கமாய் படிக்கவேணும்
மந்திரத்தில் மாங்காய் விழக்கூடுமோ
கைத்தொழில் ஒன்றையாவது கற்றுக்கொள்
வாழும் வகை அதுவென ஒத்துக்கொள்
காண மயிலாட்டத்தை ஆடும் வான்கோழி
நானும் பாரதியின் பாட்டுத் தொழில்
பயின்று தோற்றேன் அதுவும் வெற்றியே

சு.சிவராசா, நாவற்குழி

## இன்னொரு கருவில் பிறந்து இங்கு வரவேண்டும்!

வாலிபக் கவிஞா வாலி ஐயா- உங்கள்
வதனப் புன்னகை காணாது
வாடுகிறோம் நாம் ஐயா!
கவியரசர் கண்ணதாசனுக்கு நிகராக
கலையுலகில் கொடிகட்டிப் பறந்த
கவி மார்க்கண்டேயரே!
கண்காண முடியாத தேசத்திற்கு
காலன் அழைத்துச் சென்றாலும் -எம்
கருத்தினில் என்றும்
உங்கள் பெயர் நிலைத்திருக்கும்
எத்தனையோ இனிய பாடல்களுக்கு
உயிர்கொடுத்த கவிராஜனே!
இறவா வரம் எங்கள் நெஞ்சில்
எப்போதோ நீ பெற்று விட்டாய்
இது நிஜமே...!
கண்ணீரோடும் கவலையோடும்
இறுதி விடை தந்தோம்
இன்னொரு கருவில் நீ பிறந்து
இங்கு வரவேண்டும்

குறிஞ்சிக்கவி செ.ரவிசாந், குப்பிளான்.

# கவிதைக் கலசம்



## நிழல் தருவேன்

ஈரைந்து திங்கள் எனை
வ்யிற்றில் சுமந்தவளே
கண்ணாளன் உயிர்தனை
காலனும் கவர்ந்துவிட
பிறர்தயவை நாடாமல்
புறம்கூற நடவாமல்
உதிரத்தை வியர்வையாக்கி
உழைக்கின்ற உத்தமியே
நான் வளர்ந்து
நிழல் தருவேன்
உன் துயரம்
போக்கிடுவேன்

இணுவை சுகந்தி

## உயிரும் பயிரும்

தோட்டங்களில் போட்டிபோட்டு
கூடை சுமந்து
கொழுந்து கொய்வதற்கும்
இதற்கும் வித்தியாசம்
உயிரும் பயிருமானாலும்
ஒற்றுமை வறுமை
வேற்றுமை தனிமை

அ.கேசவன் கல்வயல்

## தாயம்மா...!

மூன்று முடிச்சுக்கள் அதன்
மடங்காக மாறிக்கொண்டிருக்கும்
இன்றைய திருமண பந்தங்களில்
மனைவியை பிள்ளையை
உற்றவன் பிரிந்தாலும்
என்றும் பிரியாத-அந்த
தொப்புள்கொடி உறவுக்காய்- தன்னையே
ஆகுதியாக்குகிறாள் பெண்மை போற்றும்
இந்த தாயம்மா...!

உதயம் ரூபன் நயினை

# மௌனத்தின் தேடல் - 164

## உழைத்தால்...

இருக்க இடம் இல்லை,
உடுக்க உடை இல்லை,
சாப்பிட சாப்பாடு இல்லை,
பிள்ளை உறங்க தொட்டிலுமில்லை,
உழைக்க தென்பும் இல்லை,
உழைத்தால் தான்? இதில்
ஒன்றாவது கிடைக்கும்

ச.புவித்ரா சாவகச்சேரி

## கடமை

உழைத்து வாழ்ந்திடு
பிறர் உழைப்பில்
வாழ்ந்திடாதே
தன்கையே தனக்குதவி என்று
பிஞ்சு பச்சை மழலையின்
எதிர்காலத்தின்
ஒளி விளக்கிற்காக
தன்னையே வருத்தி உழைக்கும்
வியர்வை சிந்தும்
எங்கள் அன்னையே
எங்கள் கடன் பணி என்றும்
செய்ய கடமைப்பட்டுள்ளோம்

ஆ.உஷாந்தினி மட்டுவில்

## தாயே குரு

தன் தாய் செய்யும் தொழிலை
தாயோடு சேர்ந்திருந்து
இந்தப் பிஞ்சும்
கற்றுக்கொள்கிறதோ?

க.ஜெயரூபன் பருத்தித்துறை

## தாய்மையின் மேன்மை

தாயே! உம் பிள்ளையை
ஈரைந்து மாதம் சுமந்து
உம் இரத்தத்தைப் பாலாக்கி
ஊட்டி வளர்த்த பின்னும்
அச்சுமையை முதுகில்
சுமக்கும் தாயே!
உம் சுமையை உம் பிள்ளை
சுகமாக்கும் காலம் வரும்
உம் தாய்மை போற்றப்படும்!

ம.அ.மரியஜெனிற்றா சாவகச்சேரி

## அம்மா சுமை தாங்கி

அம்மாவும் நீயே
என் அப்பாவும் நீயே
உன் முதுகுக்கு சுமைதாங்கி
நான் என்று
நீ சொல்லமாட்டாய்
காரணம் பெற்றவளுக்கு
பிள்ளை பாரம் கிடையாது அம்மா :
மண் அள்ளி என்னைச் சுமக்கின்றாய்
எதிர்காலத்தில் என் தோள்மீது
உன்னை சுமப்பேன்
என் தாயே அம்மா

ஸ்ரீ.பிரதீப் திருநெல்வேலி

## சுமை தாங்கி

மண்வெட்டி பிடித்தாலும்-
புண்பட்டு நின்றாலும்
பெண்ணின் பெருமையுணர்த்தி
தூண்போல குடும்பத்தை தாங்கும்
கண்ணின் மணியிலும் சிறந்தவளே
விண்ணைத்தாண்டி உயர்
பண்புடையவளே அம்மா

சு.அபர்ணா வட்டுக்கோட்டை

## தேசத்தாய்

அபிவிருத்தி
என்ற நாமத்தில்
எம் நிலத்தை
அபகரித்து
குடியிருப்பை நிறுவி
எமது செறிவை
குறைத்துவிட
துடியாய் துடிக்கும்
அரசியல்வாதிகளுக்கு
தெரியுமா?
இவள்போல
கணவனைக் காவுகொண்ட
கொடிய போரில் சிக்கி
மீண்டு வந்து
நிற்கும்
இந்த தேசத்தாய்மார்களின்
இன்றைய நிலை

எஸ்.சுரேஷ் சாவகச்சேரி

## ஏற்பது இகழ்ச்சி

தன் அன்புக் குழந்தையை
வளர்த்து ஆளாக்க வேண்டிய
பொறுப்பு இவளிடம்
இரந்துண்டு வாழ்வது கேவலம்
தன்கையே தனக்குதவி
ஆண்டவன் தந்த
இரு கைகள் உண்டு
உழைத்து வாழ்வோம் என
இங்கு கல்லுச் சுமக்கின்றாள்

வீனா செவ்வடிவேல் இணுவில் மேற்கு

## கண்ணும் மண்ணும்

கண்ணைப்போல்
எண்ணிப் பாதுகாத்து
பண்படுத்தப்படும்
அன்னை மண்ணும்
நின்று நிலவும்
தமிழ்ப் பண்பாடும்
ஒருவகையில்
ஒன்றுதான்
துன்பத்திலும்
இன்பம் தரும்

க.நாகராசா சாவகச்சேரி

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் - 165



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகள் மற்றும் வியாசர் பதிலுக்கான கேள்விகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 01.08.2013 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கிழக்கு பிரிந்துள்ளதை தமிழர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை

## தமிழரசுக் கட்சியின் கிளி. கிளை மகஜர்

(கிளிநொச்சி)

**வடக்கு மாகாண சபைத்தேர்தலில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு போட்டியிடுவதன்மூலம் பிரிந்த வடகிழக்கை நாம் ஏற்றுக்கொண்டு விட்டோம் என யாரும் நினைத்து விடக்கூடாது. வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம். அது என்றுமே பிரிக்கப்பட முடியாது என தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட கிளை தெரிவித்துள்ளது.**

இவ்வாறான கருத்துக்களை மக்களுக்கு தெரியப்படுத்தும் முகமாக வடக்குமாகாண சபைத்தேர்தல் விஞ்ஞாபனத்தில் இதனைப் பயன்படுத்துமாறுகோரி கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன், பொதுச்செயலாளர் மாவை. சேனாதிராஜா, முதலமைச்சர் வேட்பாளர் சி.வீ.விக்னேஸ்வரன் ஆகியோருக்கு மகஜர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அனுப்பிவைக்கப்பட்ட அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களாவன,

சர்வதேச இனப்படுகொலை, போர்க்குற்றங்கள் தொடர்பான முழுமையான விசாரணையைத் தமிழ்மக்கள் தொடர்ச்சியாக வலியுறுத்துகின்றனர். வடமாகாண சபைத்தேர்தல் நடத்தப்படுகின்றமைக்கும் சர்வதேச விசாரணையை நோக்கிய நகர்வுக்கும் எந்த விதத்திலும் தொடர்பில்லை என்பது தமிழ் மக்களின் உறுதியான நிலைப்பாடு.

பிரிக்கப்பட்ட முடியாத வடக்குக் கிழக்கு தமிழர் தாயகம்: பிரிந்த வடக்கு மாகாணத்தில் போட்டியிடுவதன்மூலம் பிரிந்த வடக்கு கிழக்கைத் தமிழர்கள் ஏற்றுக்கொண்டு விட்டார்கள் எனப்பொருள் கொள்ளலாகாது.

தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் தீர்வைத் தமிழர்கள் வலியுறுத்துகின்றனர். இவற்றை அங்கீகரித்து வரும் தீர்வே (அது சமஷ்டித்தீர்வாக இருந்தால்கூட) நிலையான தீர்வாக இருக்கும்.

13 ஆவது திருத்தம் அரசியல் தீர்வுக்கான ஆரம்பப் புள்ளியல்ல. வடக்கு மாகாண சபைத்தேர்தலில் போட்டியிடுவது 13ஆவது திருத்தத்தைத் தமிழர்கள் ஏற்றுக்கொண்டு விட்டார்கள் அல்லது தீர்வுக்கான ஆரம்பப் புள்ளியாக ஏற்றுக்கொண்டுவிட்டார்கள் என அர்த்தப்படாது.

ஆயுதமேந்திய அரசியல் போராட்டம் எமது போராட்ட வரலாற்றின் முக்கியதொரு காலகட்டம். அது எமது போராட்டத்தின் இயல்பான இயங்கியல் வளர்ச்சியின் முக்கிய கட்டம். அது தொடர்பிலான நினைவுகளைப் பேணுவதற்கு தமிழர்களுக்கு முழுமையான உரிமையுள்ளது.

பொதுவாக வடமாகாண சபையைக் கைப்பற்றுவதன்மூலம் வடக்கில் புரட்சியை ஏற்படுத்திவிடலாம் என்ற தோரணையில் தேர்தல் விஞ்ஞாபனம் அமையப் பெறக் கூடாது.

மாகாண சபை முறைமையில் உள்ள அடிப்படைப்பலவீனங்கள் மக்கள் பணியாற்றத் தடையாகவிருக்கும் என்பதைத் தெளிவுபடுத்தவேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-4)

# தோட்டத் தொழிலாளர்களும் இலங்கையர்கள்தான்-பிரதமர்

(கொழும்பு)

இலங்கையின் பெருந்தோட்ட தொழிலாளர்கள் இந்திய தமிழர்கள் என்று அழைக்கப்படாது அவர்களையும் இலங்கையர்கள் என்ற வகுதிக்குள் கொண்டுவரப்படவேண்டு என்று பிரதமர் டி .எம். ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட தொழிலாளர்கள் இலங்கையில் நூற்றாண்டு காலமாக வாழ்ந்து வருகின்றனர்.

அவர்களின் பரம்பரைகள் இலங்கையில் உருவாகியுள்ளன.

இந்நிலையில் அவர்களை இன்னும் இந்திய தமிழர்கள் என்று அழைப்பது பொருத்தமான முறையல்ல.

இலங்கையின் வடக்கு கிழக்கை தவிர்ந்த தென்பகுதியில் 15 இலட்சம் இந்திய தமிழர்கள் வாழ்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.(அ-2)

# ஐ.தே.கட்சியின் மூன்று எம்.பிக்கள் ஜனாதிபதியுடன் இரகசிய பேச்சு

தமிழ், முஸ்லிம் தேசிய முன்னணியின் தலைவரும் முன்னாள் கொழும்பு பிரதி மேயருமான அசாத் சாலி இம்முறை ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் அசாத் சாலி யானைச் சின்னத்தில் போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாணத்தில் அசாத் சாலி போட்டியிடுவார் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. கண்டி மாவட்ட வேட்பாளர் பட்டியலில் அசாத் சாலி இணைக்கப்படுவார் என கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் ஆளும் கட்சியில் இணைந்து கொள்ளும் நோக்கில் இரகசியப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

வடமேல் மற்றும் மத்திய மாகாணத்தை பிரதிநித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர்களே இவ்வாறு ஆளும் கட்சியில் இணைந்து கொள்ள திட்டமிட்டுள்ளனர்.

வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் மாவட்ட மட்டத்தில் ஜனாதிபதியின் தலைமையில் நடைபெறும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களின் போது குறித்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சியுடன் இணைந்து கொள்ளவுள்ளதாக தெரியவருகின்றது.

இதேவேளை எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்களின் பின்னர் மேல் மற்றும் தென் மாகாண சபைகளைக் கலைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (அ-2)

# இலங்கையில் ஊடக சுதந்திரம் வரையறுக்கப்பட்டுள்ளது

## உலக ஊடக சுதந்திர அமைப்பு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் ஊடக சுதந்திரம் வரையறுக்கப்பட்டுள்ளதாக ப்ரீடம் ஹவுஸ் என்னும் உலக ஊடக சுதந்திர அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

2012 ஆம் ஆண்டிலும் ஊடகவியலாளர்கள் பல்வேறு வழிகளில் துன்புறுத்தப்பட்டுள்ளதாகஅதில்குறிப்பிட்டுள்ளது. உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவான தேசிய செயற்றிட்டத்தில் ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்துவது குறித்த பல்வேறு நடவடிக்கைகள் அறிவிக்கப்பட்ட போதிலும் உண்மையில் அந்தப் பரிந்துரைகள் உரியமுறையில் அமுல் படுத்தப்படவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசியல் சாசனத்தில் ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளபோதிலும் வேறு சட்டங்களின் மூலம் கருத்துச் சுதந்திரம் முடக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளது.

1979 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் எதிராக பல்வேறு கெடுபிடிகள் காணப்படுவதாக குறிப்பிட்டுள்ளது.

தகவல்களை அறிந்து கொள்ளும் சட்டம் இதுவரையில் அமுல்படுத்தப்படவில்லை என வும் சுட்டிக்காட்டியுள்ளது. தகவல் அறிந்து கொள்ளும் சட்டத்தை எதிர்க்கட்சிகள் முன் வைக்க முயற்சித்த போதிலும் அதற்கு அரசாங்கம் இடமளிக்கவில்லை எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (அ-2)



மானிப்பாய் சிற்றி லயன்ஸ் கழகமும் ஏனைய 12 கழகங்களும் இணைந்து ஊர்காவற்றுறை சுகாதார வைத்தியசாலைக்கு அண்மையில் தென்னங்கன்றுகளை வழங்கியபோது... (படம்:-உ.சாள்ன்)

# இலங்கையின் எதிர்காலம் குறித்து எதிர்பார்க்கிறோம்

## பிரிட்டன் எம்.பி.எலியேனர் தெரிவிப்பு

பிரித்தானியாவின் மனிதவுரிமை நிலைமைகளுடன் இலங்கை மனிதவுரிமை நிலைமைகளை ஒப்பீடு செய்யமுடியாது என பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் எலியேனர் லாயிங் தெரிவித்துள்ளார். அவர் மேலும் சுருத்துத் தெரிவிக்கையில்,

30 வருடகால யுத்தம் நீடித்து வந்த இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகளைப் பிரித்தானியாவுடன் ஒப்பீடு செய்யமுடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எதிர்காலம் குறித்தும் எதிர்பார்ப்பதாக தெரிவித்துள்ளார்.

இலங்கை நிலைமைகள் குறித்து சாதகமாகவே தாம் நோக்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். நல்லிணக்கம் மிகவும் முக்கியமானது எனவும் கடந்த காலத்திலேயே எப்போதும் தேங்கிக் கிடப்பதில் பயனில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடமாகாண சபைத் தேர்தல்கள் மிகவும் முக்கியமானவை எனவும் வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள் எனத் தான் எதிர்பார்ப்பதாகவும் எலியேனர் குறிட்பிட்டுள்ளார். (அ-2)

# எதிர்க்கட்சி தலைவராக இருப்பதையே ரணில் விக்ரமசிங்க விரும்புகிறாராம்

எதிர்க்கட்சித் தலைவராக இருக்கவே ரணில் விக்ரமசிங்க கூடுதல் நாட்டம் காட்டி வருவதாக போக்குவரத்து அமைச்சர் குமாரவெல்கம தெரிவித்துள்ளார்.

மருதானையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தை கவிழ்க்க வேண்டும் என்ற உத்தேசமும் ரணிலுக்கு கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்சிக்குள் நிலவி வந்த உட்பூசல்கள் முற்றுப் பெறாத காரணத்தினாலேயே பாடும் யானை(துயாசிறி ஜயசேகர) ஆளும் கட்சியில் இணைந்து கொண்டதாகத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாட்களில் மேலும் பல யானைகள் ஆளும் கட்சியில் இணைந்து கொள்ளும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் நிலை தொடர்பில் இந்திய தூதருடன் மனோ பேச்சு

(கொழும்பு)

**இலங்கைக்கான புதிய இந்திய தூதுவர் வை.கே. சின்ஹா, ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசனை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இச் சந்திப்பு நேற்று முன்தினம் நண்பகல் கொழும்பு இந்திய தூதரகத்தில் நடைபெற்றுள்ளது.**

இச் சந்திப்பு பற்றி கருத்து தெரிவித்த மனோகணேசன்,

இந்திய அரசாங்கத்தின் இலங்கை பற்றிய கொள்கைகள் பற்றியும், இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் தொடர்பிலும், தேசிய இனப் பிரச்சினை பற்றிய இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பற்றியும் எமது கட்சியின் நிலைப்பாடுகளை புதிய இந்திய தூதுவரிடம் தெரிவித்தோம்.

இந்தியாவின் இலங்கை பற்றிய கொள்கை இன்று தமிழ் மக்களை அரசியல் ரீதியாக பலவீனப்படுத்துவதில் முடிந்துள்ளது. தனது நாட்டின் தென் எல்லையில் அமைதி நிலவ வேண்டும் என்பதற்காக இந்திய அரசு, இலங்கை அரசுக்கு கடந்த காலங்களில் பல விட்டுக்கொடுப்புக்களை செய்துள்ளது. இவை பற்றி எம்மால் முழுமையாக மகிழ்ச்சி அடைய முடியவில்லை.

இந்தியாவின் இலங்கை பற்றிய கொள்கையில் தனக்கு சாதகமான அம்சங்களை மாத்திரம் இலங்கை அரசு பயன்படுத்திக் கொண்டுள்ளது.

சிறிமா–சாஸ்திரி ஒப்பந் தத்தை மலையக மக்களை பலவீனப்படுத்தவும், இலங்கையின் போர் நடவடிக்கைகளுக்கு இந்தி அரசு அளித்த உதவிகள் மூலம் பெற்ற வெற்றியைக் கொண்டு முழு நாட்டையும் சிங்கள, பௌத்த மயமாக்கவும் இலங்கை அரசு பயன்படுத்தி வருகின்றது.

எனினும் இன்று இலங்கை அரசியலமைப்பில் இருக்கின்ற ஒரே ஒரு அதிகாரப்பரவலாக்கல் அம்சமான 13 ஆம் திருத்தம், இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளதை நாம் புரிந்து கொள்கின்றோம்.

எனவே, இலங்கை அரசு 13 ஆம் திருத்தத்தையும், இலங்கை– இந்திய ஒப்பந்தத்தையும் இல்லாது ஒழிக்க முயல்கின்றது.

இன்று வட இலங்கையில் போரின் பின் மீளக்குடியேற்றப்பட்டுள்ள மக்களின் நிலைமை ஒரு எரியும் பிரச்சினையாக இருக்கின்றது. அதேவேளை இலங்கை சனத்தொகையில் மிகவும் பின் தங்கிய பிரிவாக மலையக தோட்ட தொழிலாளர் சமூகம் இருக்கின்றது.

வடக்கில் மீளக்குடியேற்றம் திருப்திகரமானதாக இருப்பதாகவும், மலையகத்தில் தொழிலாள மக்கள் இன்று வசதியாக வாழ்வதாகவும் சில தரப்பினர் புள்ளி விபரங்களை காட்ட முயல்வது பிழையானது ஆகும்.

இந் நாட்டின் வறுமை விகிதம் சுமார் 12 வீதமாக இருக்கும் போது, மலையகத்தில் அது 30 வீதமாக இருக்கின்றது. சிசு மரண விகிதமும் மலையகத்தில்மிக அதிகமாக உள்ளது.

இதே நிலைமையே வன்னியிலும் இன்று நிலவுகின்றது. எனவே இந்த இரண்டு பின் தங்கிய பிரிவினரையும் இந்திய அரசு சமமாக கருதி கவனத்தில் எடுத்துக் கொண்டு கொள்கை வகுக்க வேண்டும்.

நமது கருத்துகளை கேட்டு தெரிந்துகொண்ட இந்திய தூதுவர் வை.கே. சின்ஹா, இந்திய அரசின் இன்றைய நிலைப்பாடுகள் பற்றியும், எதிர்கால நடவடிக்கைகள் பற்றியும் விளக்கிக் கூறினார். (அ-2)

# இரு சிறுமிகள் பாடசாலை ஆசிரியரால் துஷ்பிரயோகம்

## பொலிஸார் அதிர்ச்சி தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கப்பட்ட நான்கு சிறுமிகள் குறித்த முறைப்பாடுகள் கடந்த வாரத்தில் யாழ்ப்பாணம் ஏபொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டு உள்ளன.

இதில் ஒரு சம்பவத்தில் இரு பாடசாலைச் சிறுமிகள் பாடசாலை ஆசிரியரால் பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கப்பட்டுள்ள அதிர்ச்சிச் சம்பவம் வெளிவந்துள்ளது.

கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் கடந்த 18 ஆம் திகதி 15 வயதுடைய்ய சிறுமியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய ஊரெழு கிழக்கைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞர் கைது செய்யப்பட்டு எதிர் வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் 13, 14 வயதுடைய சிறுமிகளை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாக சந்தேகத்தின் பேரில் கந்தர்மடத்தைச் சேர்ந்த 36 வயதுடைய ஆசிரியர் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் 8 வயதுடைய சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்திய சந்தேகத்தின் பேரில் 19 வயதுடைய ஆவரங்கால் மேற்கு புத்தூரைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார். (செ-4)

# மனிதருக்கு நன்மை பயக்கும் நுளம்பு வகை கண்டுபிடிப்பு

(கொழும்பு)

மனிதருக்கு நன்மை பயக்கக் கூடிய நுளம்பு வகையொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சுகாதார ஆய்வு நிறுவகத்தினால் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் இந்த நுளம்பு வகைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இந்தப் புதிய நுளம்புகள் மிகவும் ஆபத்தான டெங்கு நுளம்பு முட்டைகளை உணவாக உட்கொள்ளக் கூடியவை எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தப் புதிய வகை நுளம்பிற்கு டொபோமியா என பெயரிடப்பட்டுள்ளது.

124வருடங்களின் பின்னர் டொபோமியா வகை நுளம்புகள் இலங்கையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இந்த புதிய நுளம்பு வகையுடன் இலங்கையில் மொத்தமாக 17 வகை நுளம்பினங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந்த நுளம்புகள் மனித இரத்தத்தை உறிஞ்சுவதில்லை எனவும் மாறாக மரங்களின் சாறுகளை உறிஞ்சுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த வகை நுளம்புகளை பெருக்குவதன் மூலம் டெங்கு நுளம்புகளை இல்லாதொழிக்க முடியும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (அ-2)

# சீன பூமியதிர்வுக்கு ஜனாதிபதி இரங்கல்

சீனாவில் இடம்பெற்ற பூமியதிர்விற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரங்கல் செய்தியொன்றை வெளியிட்டுள்ளார்.

சீனாவின் வட மேற்குப் பகுதி கொன்சூ மாகாணத்தில் இடம்பெற்ற பூமியதிர்வில் பெரும் எண்ணிக்கையானவர்கள் கொல்லப்பட்டனர்.

இது விடயம் சார்பில் இலங்கை மக்களின் சார்பிலும் அரசாங்கத்தின் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலை வெளியிட்டுக் கொள்வதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை இலங்கை மக்களின் சார்பில் தெரிவித்துக்கொள்வதாக ஜனாதிபதி அதில் சுட்டிக் காட்டியுள்ளார். சீன ஜனாதிபதி 11 ஆம் ஜனின் பின்னின் தலைமையின் கீழ் சீன மக்கள் இந்த அனர்த்தத்தின் பாதிப்பிலிருந்து விரைவில் இலகுவில் மீளுவர் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# தேசிய இளைஞர் விளையாட்டு விழா

(மானிப்பாய்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இலங்கை இளைஞர் சம்மேளனம் மற்றும் இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு ஆகியன இணைந்து நடத்தும் 25 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழா கடந்த 25 ஆம் திகதி ஆரம்பமாகி இன்று வரை பொலநறுவை தேசிய விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டிக்கு நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களில் இருந்தும் 3 ஆயிரம் வீர, வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளனர். ஆண் மற்றும் பெண்கள் கலந்து கொள்ளும் 64 போட்டி நிகழ்வுகள் இங்கு இடம் பெறவுள்ளன.

இந்த இளைஞர் விளையாட்டுப் போட்டியில் புதிய சாதனை நிலை நாட்டும் முதலாவது வீர மற்றும் வீராங்கனைக்கு கார் ஒன்று பரிசாக வழங்கப்படவுள்ளது.

இதன் இறுதி நாள் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, நாடாளுமன்ற உறுப்பினர் மொஹான் லால் கிரேரு, அமைச்சின் செயலாளர் கே.ஏ திலகரத்தன, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் சட்டத்தரணி லலித் பியூம் பெரேரா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இறுதி நாள் நிகழ்வன்று இரவு 8 மணிக்கு இசை நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (அ-2-23)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2013.07 28

- ✷ 1493-மொஸ்கோவில் பெரும் தீ விபத்து ஏற்பட்டது.
- ✷ 1540 -லண்டனின் எட்டாம் ஹென்றியின் ஆணைப்படி தோமஸ் குரொம்வெல் நாட்டுத்துரோகி என குற்றஞ்சாட்டப்பட்டு தூக்கிலிடப்பட்டார். அதே நாளில் ஹென்றி தனது ஐந்தாவது மனைவி கத்தரீனை மணந்தார்.
- ✷ 1586 - உருளைக்கிழங்கு முதற்தடவையாக ஐரோப்பாவிலிருந்து பிரித்தானியாவுக்கு இறக்குமதி செய்யப்பட்டது.
- ✷ 1609-பெர்முடாவில் ஆங்கிலேயர்கள் குடியேறினர்.
- ✷ 1794-பிரெஞ்சுப் புரட்சி: மாக்சிமிலியன் ரோப்ஸ்பியர் தலை துண்டிக்கப்பட்டு மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டான்.
- ✷ 1821 - பெரு ஸ்பெயினிடம் இருந்து விடுதலை பெற்றது.
- ✷ 1914 - முதலாம் உலகப் போர் ஆரம்பமானது. சேர்பியா மீது அவுஸ்திரியா–ஹங்கேரி போர் தொடுத்தன.
- ✷ 1915 -ஐக்கிய அமெரிக்காவின் ஹெயிட்டி முற்றுகை ஆரம்பமானது.
- ✷ 1943 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் ஹாம்பூர்க் நகர் மீது பிரித்தானியா குண்டுத் தாக்குதல் மேற்கொண்டதில் 42 ஆயிரம் ஜேர்மனியர்கள் கொல்லப்பட்டனர்.
- ✷ 1965 - வியட்நாம் போர்: தெற்கு வியட்நாமில் அமெரிக்கப் படைகளின் எண்ணிக்கையை 75, ஆயிரத்திலிருந்து 125, ஆயிரமாக அதிகரிக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி லிண்டன் ஜோன்சன் அறிவித்தார்.
- ✷ 1996 - வோஷிங்டனில் கென்னவிக் என்ற இடத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- ✷ 2005 - ஐரியக் குடியரசு இராணுவம் தனது 30 ஆண்டுகால ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதாக அறிவித்தது.

பிறப்புகள்

- ✷ 1936 - சோபர்ஸ், மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் துடுப்பாளர்
- ✷ 1951 - சந்தியாகோ கலத்ராவா, ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த கட்டடக்கலைஞர்
- ✷ 1954 -குகொ சவெஸ், வெனிசுலா ஜனாதிபதி
- ✷ 1977 -மனு ஜினோபிலி, ஆர்ஜெண்டீன கூடைப்பந்து ஆட்டக்காரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்லி மலை



## ஆன்மீகம் 71

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

குளிருக்கு மேல் சட்டை அணிந்து இருந்தவர்கள் காலிலிருந்து மிதியடிகளோடு அம்மன் அருகில் வந்து நின்றனர். அவர்கள் ஆராய்ச்சியாளர்கள் என்பது அதிலிருந்து உணர்த்தியது! அதில் ஒருவர் தம் ஆராய்ச்சி முடிவுகளை உடன் வந்தவர்களுக்கு உணர்த்துவதுபோல அம்மனின் சிலையை ஆங்காங்கே தொட்டுக்காட்டி பலத்தகுரலில் விளக்கிக் கொண்டிருந்தனர். அவர்கள் கொல்லியம் பாவையை தெய்வமாக மதிகாமல் அதை ஏதோ ஒரு ஆராய்ச்சிப் பொருளாகவே பார்த்தனர்! பூஜை செய்யும் என்னை ஒரு பொருட்டாகவே மதிக்காமல் இப்படி அம்மனை தொட்டுத் தொட்டு பேசாதீர்கள் என்று ஆட்சேபித்தேன். என் முகத்தில் தெரிந்த உக்கிரத்தை உணர்ந்த அவர்கள் சற்று திகைத்து நின்றனர். அந்த மனிதர்கள் வந்ததும் முதல் அவர்கள் பேசுவதை வேடிக்கை பார்த்து நின்ற என்னுடன் வந்த அன்பர்களுக்கு வந்தவர்களை நான் கண்டித்தது பிடிக்கவில்லை அதனால், ஆராய்ச்சியாளர்கள் பெரும் படிப்பாளிகள் அவர்கள் வேலையில் நாம் தலையிடுவது தவறு, பேசாமல் உங்கள் வேலையைப் பாருங்கள், எனக் கூறிவிட்டு வந்தவர்களிடம் மன்னிப்பு கேட்பதைபோல இந்த ஆளுக்கு இது பற்றியெல்லாம் ஒன்றும் புரியாது. சாதாரண சினிமாக்காரன். இந்த கோயிலுக்கும் இவருக்கும் எந்த உரிமையுமில்லை என்று என்னைப்பற்றி வந்தவர்களிடம் இழிவாக பேசினார்கள். அதனால், வந்தவர்களுக்கு பார்வையில் ஒரு சிறு புழுவைப் போல், நான் தோன்றினேன். அவர்கள் என்னை அலட்சியம் செய்து விட்டு மீண்டும் ஆராய்ச்சியில் ஈடுபட்டார்கள். இனி நான் என்ன



சித்தர்பெருமானுடன் கலைமாமணி கங்கை அமரன்

செய்ய முடியும்! திக்கற்றோர்க்கு தெய்வமே துணையல்லவா! தேவியின் திருப்பாதங்களே கதி என்று நினைத்து கற்பூரம் காட்டி பூஜையை முடித்தேன். தேவியின் காலடியில் விழ்ந்து வணங்கினேன். அதே நேரம் எங்கிருந்தோ பெரிய தேநீக்கள் போன்ற உருவமுடைய வண்டுகள் படைஎடுத்து வருவது போல ஏராளமான ஓசை ஓங்கார ஓசையாக காதுகளை துளைத்தன. மனத்தில் அச்சத்தை விளைவித்தன. அவ்வளவுதான் ஒரு ஆராய்ச்சியாளர் ஐயோ கதண்டுகள் ஓடுங்கள், ஓடுங்கள் என்று பெருங்கூச்சலிட்டார். அடியேனுக்கு அந்த வண்டுகளைப் பற்றி எதுவும் தெரியாது! திகைத்துப் போய் நிமிர்ந்து பார்த்தேன். தேவியின் பக்கத்திலிருந்த எனக்கும் ஒன்றும் புரியவில்லை. என்னுடன் வந்தோரும் ஆய்வுக்காக வந்தோரும் வண்டுகளிடமிருந்து தப்பிக்க ஒலி எழுப்பிக் கொண்டே ஒலிம்பிக் ஓட்ட பந்தய வீரர்களை எளிதில் வெல்வோம் என்று நிரூபிப்பதை போல கால் போன போக்கில் கண் முன் தெரியாமல் விரைந்து ஓடிச்சென்றார்கள்! ஓடினார்கள் என்பதை விட, இறக்கை இல்லாமல் பறந்தார்கள் என்று சொல்வதே பொருந்தும்.

அவர்களை சுமார் இரண்டு கிலோ மீட்டர் வரை வண்டுகள் துரத்தியடித்தன. சுய நினைவுக்கு வந்த நான் அந்த வண்டுகள் ஆயிரக்கணக்கில் என்னை சுற்றி பறந்து கொண்டிருப்பதையும் கண்டேன். மெல்ல நகர்ந்து என்னுடைய உடலிலும் வண்டுகள் பாய்ந்து வந்து அமர, அஞ்சி நடுங்கிய நான் நம் ஆயுள் முடிந்துவிட்டது, என்ற முடிவுக்கே வந்துவிட்டேன். என்னை அறியாமல் தாயே, அம்மா என்று அம்மனை மீண்டும் தரையில் வீழ்ந்து வணங்கினேன். என்னை சுற்றியிருந்த வண்டுகளும், உடல் மீது ஊறிக் கொண்டிருந்த வண்டுகளும் என்னை ஒன்றும் செய்யவில்லை. இனிய நண்பர்கள் நடுவில் இருப்பது போல உணர்ந்தேன். எண்ணற்ற ரகசியங்களை உணர்வித்த பேசும் தெய்வமாகவே அவள் இன்று திகழ்கிறாள்.

தொடரும்

# கொழும்பு துறைமுகத்திற்கு அருகில் நகர வளாகம் சீன நிறுவனத்துடன் உடன்படிக்கை

கொழும்பு துறைமுகத்திற்கு உள்ள நிலம் ஒன்றில் 1.4 பில்லியன் டொலர்கள் செலவில் நகர வளாகம் ஒன்றை உருவாக்கு வதற்கான உடன்படிக்கையில் இலங்கை அரசாங்கம் சீன நிறுவனம் ஒன்றுடன் கைச்சாதிட்டுள்ளதாக இலங்கையின் உத்தியோக பூர்வ வட்டாரம் ஒன்று தெரிவித்துள்ளது.

புதிய கொழும்பு தெற்குத்துறைமுகத்திற்கு அடுத்ததாக உள்ள 230 ஹெக்ரெயர் நிலப்பரப்பை இலங்கை அரச துறைமுக அதிகாரசபையானது மீளப் பெற்றுக் கொள்ளவுள்ளதாக இதன் தலைவர் பிரியாத் பண்டு விக்கிரம தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தலைநகரின் கரையோரத்தை நவீனமயப்படுத்தும் விதமாக சீன தொடர்பாடல் கட்டுமான நிறுவனமானது (China communications construction company limited -cccc) துறைமுகத்திற்கு அருகிலுள்ள நிலத்தில் 1.43 பில்லியன் டொலர்கள் செலவில் துறைமுக நகரம் ஒன்றை உருவாக்க ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளதாக பிரியாத் பண்டு விக்ரம் மேலும் குறிப்பிட்டுள்ளார்.


"நாங்கள் தற்போது துறைமுகத்திற்கு அருகிலுள்ள நிலத்தை துறைமுக அதிகார சபையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து அங்கே சிறிய நகரம் ஒன்றை உருவாக்கியுள்ளோம்" என விக்ரம தெரிவித்துள்ளார்.

"இது தொடர்பில் சீன நிறுவனத்துடன் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் செப்ரெம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்படும். புதிய துறைமுக நகரத்தைக் கட்டுவதற்கும் பயன்படுத்தப்படும் நிலத்தை மீள உரிமையாக்கும் நடவடிக்கையானது 39 மாதங்களுக்குள் நிறைவடைந்துவிடும் என நாம் நம்புகிறோம்" எனவும் விக்கிரம மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த புதிய துறைமுக நகரத்தில் 22 மாடிகளைக் கொண்ட தலைமைப் பணியகங்கள், விடுதிகள், குடியிருப்புகள் மற்றும் ஏனைய வசதி வாய்ப்புகளை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும், சீன தொடர்பாடல் கட்டுமான நிறுவனத்திடம் 99 ஆண்டுக்குத்தகைக்கு 50 ஹெக்ரெயர் நிலங்கள் வழங்கப்படும் எனவும் இலங்கை அரசின் கீழ் செயற்படும் துறைமுக அதிகார சபையின் தலைவர் விக்ரம சுட்டிக்காட்டியுள்ளார்.

ஹொங்கொங்கைத் தளமாகக் கொண்டியங்கும் சங்றி லா உள்ளடங்கலாக சில அனைத்துலக விடுதிகள் இலங்கையில் தமதுவிடுதிகளைக் கட்டி வருகின்றன. இலங்கையில் 37 ஆண்டுகளாத் தொடரப்பட்ட உள்நாட்டுப் போரானது மே 2009ல் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து இவ்வாறான அனைத்துலக விடுதிகள் இலங்கையில் போருக்குப்பின்னான அபிவிருத்திப் பணிகளின் மூலம் தமக்கான வருவாய்களை ஈட்டிக்கொள்வதற்காக விடுதிகளை அமைத்து வருகின்றன.

இலங்கையில் இடம்பெறும் கட்டுமானப்பணிகளில் சீன நிறுவனங்கள் முதன்மையான பங்காளிகளாக உள்ளதுடன், இவை இலங்கையில் ஏற்கனவே விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள், தொடருந்துப் பாதைகள் போன்றவற்றை அமைத்துள்ளன.



பிரதான கொழும்பு துறைமுகத்திற்கு அருகில் 500 மில்லியன் டொலர்கள் செலவில் மேற் கொள்ளப் படும் கொள்தாங்கி துறை முகப் பணிகளின் முதற்கட்டம் அடுத்த மாதம் தொடங்கவுள்ளதாகவும், இதன் மூலம் சிங்கப்பூர் மற்றும் துபாய் போன்றவற்றுடன் இலங்கையானது துறைமுகசார் தொடர்புகளைப் பேணமுடியும் எனவும் விக்ரம் தெரிவித்துள்ளார்.

புதிய கொழும்பு துறைமுகத்தை அடுத்த 35 ஆண்டுகளுக்கு சீன துறைமுக பொறியியலாளர் நிறுவனம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவுள்ளது. இதன் மூலம் இச்சீன நிறுவனமானது ஏற்கனவே கொழும்பு துறைமுகத்தில் செயற்படும் இலங்கை அரச அதிகார சபை மற்றும் தனியாருக்குச் சொந்தமான கொள்தாங்கிகள் போன்றவற்றுடன் போட்டியிடும் எனவும் கூறப்படுகிறது.

சீனாவானது இலங்கையின் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் தனது முத்துமாலை மூலோபாயத்தை விரிவுபடுத்துவதுடன், பிராந்திய வல்லரசான இந்தியாவைச் சூழவும் தனது புவிசார் செல்வாக்கை செலுத்துவதே அடிப்படை நோக்காகக் கொண்டுள்ளது என்கின்ற குற்றச்சாட்டை விக்ரம் மறுத்துள்ளார்.

சீனாவுடனான எமது நட்பானது எமது துறைமுகங்களை அபிவித்தி செய்து கொள்வதை அடிப்படையாகக் கொண்ட வர்த்தக சார் நலனாகும். நாங்கள் எமது துறைமுகங்களில் எந்தவொரு இராணுவத் தளங்களையோ அல்லது இராணுவ நலனுக்காக இவற்றைப் பயன்படுத்துவதற்கான அனுமதியை வழங்கமாட்டோம் என விக்ரம் தெரிவித்துள்ளார்.

முற்றும்

இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை

## 2013 (ஓகஸ்ட்) மாதிரி வினாத்தாள் — மேல்மாகாணம்

# இரசாயனவியல் – I

1. திண்மம், திரவம், வாயு மூன்று நிலைகளிலும் மூலகங்களைக் கொண்டுள்ள கூட்டம்
(i) 13 (ii) 14 (iii) 15 (iv) 17 (v) 12

2. ஏக பரிமாண வடிவமுடைய மூலக்கூறு
(i) $SiO_2$ (ii) $NH_3$ (iii) $H_2O$ (iv) $S_2Cl_2$ (v) $CS_2$

3. பின்வருவனவற்றில் தவறான கூற்று
(i) $SO_2Cl_2$ இல் S இலத்திரன் சோடிக் கேத்திர கணித வடிவம் நான்முகி
(ii) $NO_2Cl$இல் N இன் VSEPR இலத்திரன் சோடிகளின் எண்ணிக்கை மூன்று
(iii) $XeF_4$ இல் Xe இன் எல்லா இலத்திரன் சோடிகளும் ஒரே தளத்தில் உள்ளன.
(iv) $N_2O_5$இல் ஓரிடப்படாத இலத்திரன்கள் உண்டு.
(v) $N_2O_2$ இன் வடிவம் கோணலானது.

4. பென்சிற்கரி (Graphite) பற்றிய கூற்றுக்களில் உண்மையானது
(i) காபன் அணுக்களிடையே ஒற்றைப் பிணைப்புகள் மட்டும் உண்டு.
(ii) வைரத்தை விட வெப்பவுறுதி கூடியது
(iii) வைரத்திலும் உருகுநிலை குறைந்தது
(iv) காபன் அணுக்களிடையேயான பிணைப்புகள் முப்பரிமாண நிலைக்குரியது
(v) காபன் அணுக்கள் $sp^3$ கலப்புக்குரியன

5. Copper (II) sulphate (VI) - 5 water இன் நியம கரைசலாக்க வெப்பவுள்ளுறையைக் குறிப்பது
(i) $CuSO_4(s) + 5H_2O(l) \rightarrow CuSO_4.5H_2O(l)$
(ii) $CuSO_4.5H_2(s) + aq \rightarrow CuSO_4(aq)$
(iii) $Cu^{2+}(g) + SO_4^{2-}(g) + 5H_2O(l) \rightarrow Cu^{2+}(aq) + SO_4^{2-}(aq)$
(iv) $CuSO_4.5H_2O(aq) \rightarrow Cu^{2+}(aq) + SO_4^{2-}(aq) + 5H_2O(l)$
(v) $Cu^{2+}(aq) + SO_4^{2-}(aq) \rightarrow CuSO_4.5H_2O(s)$

6. Butanedioic acid பற்றிய கூற்றுக்களில் தவறானது
(i) இதன் கட்டமைப்பு $HO_2C\text{-}(CH_2\text{-})_2\ CO_2H$
(ii) இதில் காபனும் ஒட்சிசனும் சமமூலர் விகிதமுடையன.
(iii) Ethanediol உடன் இது பொலி எசுத்தரைக் கொடுக்கும்.
(iv) இங்கு எல்லா காபன் அணுக்களும் ஒரே தளத்தில் உள்ளன.
(v) இதனை சமமூலர் விகித சமத்தில் NaOH(aq) உடன் தாக்கி பெறப்படும் உப்பு தாங்கற் தொழிற்பாடுடையது.


7. 0.3 mol $dm^{-3}$ $KNO_3(aq)$ உம் 0.1 mol $dm^{-3}$ $Fe(NO_3)_3$ உம் சம அளவு கலந்து பெறப்பட்ட கரைசல் பற்றிய கூற்றுக்களில் உண்மையானது
(i) $NO_3^-$ செறிவு 0.3 mol $dm^{-3}$ ஆகும்.
(ii) $Fe^{3+}$ செறிவு 0.2 mol $dm^{-3}$ ஆகும்.
(iii) 1$dm^3$ இல் $K^+$ அயன் எண்ணிக்கை 0.3L ஆகும். (L-அவகாதரோ மாறிலி)
(iv) 500$cm^3$ விளைவுக் கரைசலில் $NO_3^-$ ஆனது 0.6L ஆகும்.
(v) $3C_{K^+(aq)} + C_{Fe^{3+}(aq)} = 6C_{NO_3^-(aq)}$

8. 25.0$cm^3$ $Na_2CO_3$ க்குள் பினோப்தலின் காட்டி சேர்த்து தரப்பட்ட HCl(aq) இனால் நியமித்தபோது அளவி வாசிப்பு 20.0 $cm^3$ ஆகும். பின் அதே HCl(aq) இன் 20.0$cm^3$ இனை வலுப்பார்த்தல் குப்பியில் எடுத்து பினோப்தலின் காட்டி சேர்த்தபின் அதே $Na_2CO_3(aq)$ இனால் நியமித்தபோது தேவையான $Na_2CO_3$ இன் அளவு
(i) 25.0 $cm^3$ (ii) 16.0 $cm^3$ (iii) 20.0 $cm^3$
(iv) 10.0 $cm^2$ (v) 12.5 $cm^3$

9. $K_2SO_4.Al_2(SO_4)_3.24H_2O$ இன் நீர்க்கரைசலொன்றில் $SO_4^{2-}$ இன் அமைப்பு 38.4 ppm எனில் அக்கரைசலில் $Al^{3+}$ செறிவு (mol $dm^{-3}$)இல் (k=39, S=32, Al=27, O=16, H=1)
(i) $2\times10^{-4}$ (ii) $2\times10^{-3}$ (iii) $1\times10^{-4}$ (iv) $4\times10^{-4}$ (v) $4\times10^{-3}$

10. பென்சல்டிகைட்டை பொருத்தமான நிபந்தனைகளில் ஒட்சியேற்றக் கூடியது / கூடியன
(a) $AgNO_3$ (ii) $CuSO_4$ (iii) $NH_4CrO_4$
(iv) $NaO_2C - \underset{OH}{CH} . \underset{OH}{CH} - CO_2H$ (v) NaClO
இவற்றில் பொருத்தமானது
(i) a, c மட்டும் (ii) a,b,c,d,e மட்டும் (iii) a,b,c,d மட்டும்
(iv) c,d மட்டும் (v) வேறு ஏதாவது சேர்மானம்

11. பின்வரும் சேர்வையைக் கருதுக.




இச் சேர்வை பற்றிய கூற்றுக்களில் உண்மையற்றது
(i) எல்லாக் குளோரின் அணுக்களும் OH ஆல் கருநாட்டப் பிரதியீட்டுக்குரியன.
(ii) நீருடன் கருநாட்டப் பிரதியீட்டில் ஈடுபட்டு காபொட்சிக்கமிலத்தை உருவாக்கக்கூடியது
(iii) $AgNO_3(aq)$ / dil $HNO_3(aq)$ உடன் வெள்ளை வீழ்படிவைத் தரும்
(iv) $NH_3(aq)$ உடன் இலகுவாக ஒரு அமைட்டை உருவாக்கக்கூடியது
(v) NaOH(aq) இல் கரையக் கூடியது


12. பின்வரும் சேர்வையின் H அணுக்களைக் கருதுக. இவற்றில் சில a,b,c,d,c எனக் குறிப்பிட்டுள்ளன.

(a) (b)H H H(c)H(d)
$H - C \equiv C - C = C - C - C - C{=O \atop H(c)}$
H H

இவற்றில் OH உடன் தாக்கக் கூடியது / கூடியன
(i) a,d மட்டும் (ii) a,d,e மட்டும் (iii) a,b மட்டும்
(iv) d மட்டும். (v) a,b,c,d,c ஐந்தும்

13. பின்வருவனவற்றுள் எது ஒரு கருநாட்டக் கூட்டல் தாக்கம்
(i) $CH_3CH_2Cl \xrightarrow{conNH_3(aq)} CH_3CH_2NH_3^+Cl^-$
(ii) $CH_3CHO \xrightarrow{dilNaOH(aq)} CH_3CH.CH_2CHO$
(iii) $C_6H_5COCl \xrightarrow{NaOH(aq)} C_6H_5COONa$
(iv) $CH_3C \equiv CH \xrightarrow{NaNH_2} CH_3C \equiv CNa^+$
(V) $C_6H_5COCl \xrightarrow{மிகை\ CH_3MgBr} C_6H_5\underset{CH_3}{\overset{OH}{C}} - CH_3$


14.





(a) $CH_3OH$ (b) $CH_3CH_2CH_2OH$ (c) $C_6H_5Cl$ (d)
இவற்றில் நீரில் கரைதிறன் அளவைக் குறிக்கும் ஏறுவரிசை
(i) d<a<c<b (ii) b<c<a<d (iii) d<a<b<c
(iv) d<c<a<b (v) a<d<c<d

15. பூகோள வெப்பமாதலில் தொடர்புகள் குறைந்தது
(i) Hydrofluorocarbon (ii) Chlorofluorocarbon (iii) $CO_2$
(iv) $NO_2$ (v) NO


16.




எனின் P, Q, R ஆக அமையக் கூடியன முறையே




17.




18. ஒரு அசேதனச் சேர்வை A யிற்கு ஐதான HCl சேர்க்கும்போது நிறமற்ற கரைசலும் (B) ஒரு நிறமற்ற வாயுவும் (C) பெறப்பட்டன. நிறமற்ற வாயுவானது (C) அமில $KMnO_4$ ஐ நீக்கியது. கரைசலானது (B) dil $H_2SO_4$ உடன் வீழ்படிவைத் தந்தது எனில் A யானது
(i) $Sr(NO_2)_2$ (ii) $Pb(NO_3)_2$ (iii) $BaCO_3$
(iv) CaS (v) $SrSO_2$

19. $[FeNO(H_2O)_5]Cl_2$ இன் IUPAC பெயராக அமைவது
(i) iron (II) nitropentaaqua chloride
(ii) pentaaquanitrosyloron (II) chloride
(iii) pentaaquanitrosyliron (II) chloride
(iv) pentaaquanitrdoiron (III) chloride
(v) pentaaquadichloridenitrosyl iron (III)

20. யூரியாவில் கைத்தொழில் தயாரிப்புடன் நெருங்கிய தொடர்பற்றது
(i) ஏபர் முறை (ii) $HNO_3$ (iii) சுண்ணாம்புக்கல்
(iv) ammonium carbonate (v) திரவ $CO_2$

21. பல்பகுதியங்கள் பற்றிய கூற்றுக்களில் உண்மையானது
(i) Polyester ஒரு கூட்டல், நீட்டல் சங்கிலிப் பல்பகுதியம்
(ii) PVC யில் ஒரு பகுதியம் chloro ethene ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii) Bakelite இல் மீள் அலகு $CO(NH_2)_2$ உம் HCHO உம் ஆகும்.,

(iv) வலகணைசுப்படுத்தப்பட்ட இறப்பர் ஒரு நீட்டல் சங்கிலிப் பல்பகுதியம்.

(v) நைலோன் ஒரு வெப்பம் இறுக்கும் (Thermoset) பல்பகுதியம்

22. $H-C\equiv C-CH_2-C(=O)-O-CH_3$ உடன் மிகை $CH_3MgBr$ இனை சேர்ப்பின் நீர்ப்பகுப்பு செய்ய பெறப்படும் சேதன விளைவுகளாக அமைய சாத்தியம் கூடியவை

(i) $H-C\equiv C-CH_2-C(OH)(CH_3)-CH_3$ உம் $CH_3OH$ உம்

(ii) $CH_4$ உம் $H-C\equiv C-CH_2-C(OH)(CH_3)-CH_3$ உம் $CH_3OH$ உம்

(iii) $CH_4$ உம் $BrMg-C\equiv C-CH_2-C(OH)(CH_3)-CH_3$ உம் $CH_3OH$ உம்

(iv) $CH_4$ உம் $BrMg-C\equiv C-CH_2-C(=O)-O-CH_3$

(v) $CH\equiv C-C(OMgBr)(CH_3)-O-CH_3$ உம் $CH_4$

23. $A(g) + 2B(g) \rightarrow C(g)$ என்பது ஒரு ஒருபடித்தாக்கமாகும். இது பற்றிய கூற்றுக்களில் உண்மையானது

(i) $R \alpha [A(g)][B(g)]^2$

(ii) C சார்பான தாக்கவீதம் ஆரம்பத்தின் அரைப்பங்காக எடுக்கும் காலம் ஒரு மாறிலியாகும்.

(iii) $R \alpha [A(g)][B(g)]$

(iv) $R \alpha [A(g)]$ ஆக அல்லது $R \alpha [B(g)]$ ஆகலாம்

(v) தாக்கவீத மாறிலியின் அலகு $mol\ dm^{-3}s^{-1}$ ஆகும்.

24.

| | $N_2(g)$ | $H_2(g)$ | $NH_3(g)$ |
|---|---|---|---|
| $H^0/kj\ mol^{-1}$ | 0 | 0 | -46 |
| $S^0/J\ mol^{-1}K^{-1}$ | 192 | 131 | 193 |

$N_2(g) + 3H_2(g) \leftrightharpoons 2NH_3(g)$ எனும் தாக்கம் பற்றிய கூற்றுக்களில் உண்மையானதன்று

(i) இத்தாக்கத்தின் $\triangle S^0 = -199 J\ mol^{-1}K^{-1}$

(ii) $25^oC$ யில் வெப்ப இயக்கவியலின்படி இத்தாக்கம் சுயாதீனமானது. ஆயினும் தாக்கவியக்கவியல் அடிப்படையில் சாத்தியமானதல்ல.

(iii) இத்தாக்கம் ஒரு புறவெப்பத் தாக்கம்

(iv) இத்தாக்கம் சமநிலையில் அமையும்போது விளைவுகளும் தாக்கிகளும் சமமூல்விகித சமத்தில் அமையும்.

(v) N≡N, H-H பிணைப்புகள் மிக வலிமையானதாகையால் இத்தாக்கம் உயர் ஏவற் சக்திக்குரியது.

25. $0.1\ mol\ dm^{-3}\ H_2SO_4(aq)$ இல் கரைசலின் முதலாம் அயனாக்கம் பூரணமானது இரண்டாம் அயனாக்கம் பகுதியானது $HSO_4^-(aq)$ இன் $K_a = 0.72\ mol\ dm^{-3}$ ஆகும். எனின் $HSO_4$ கூட்டப்பிரிகை நூற்றுவீதமாக அமையப் பொருத்தமானது

(i) 80% (ii) 72% (iii) 20% (iv) 18% (v) 50%

26. 400 K யில் Ar வாயுவின் (Ar=40) மூல கதிவர்க்க இடையாக (root mean square speed) அமைய பொருத்தமானது

(i) $40ms^{-1}$ (ii) $1200ms^{-1}$ (iii) $500ms^{-1}$ (iv) $250ms^{-1}$ (v) $5\sqrt{10}$

27. $NH_4NO_3(aq) + KOH(s) \rightarrow NH_3(g) + KNO_3(aq) + H_2O(l)$

$45cm^3\ NH_4NO_3(aq)$ தரப்பட்டுள்ளது. இதற்குள் $0.5\ moldm^{-3}\ KOH(aq)$ இல் $50cm^3$ சேர்த்து வாயு வெளியேற்றம் நிற்கும் வரை சூடாக்கப்பட்டது. பின் விளைவுக் கரைசலை நியமிக்க பினோப்தலின் காட்டி முன்னிலையில் $0.125\ mol\ dm^{-3}$ இன் $20cm^3$ தேவைப்பட்டது எனின் $NH_4NO_3(aq)$ இன் மூலர்திறன் $(moldm^{-3})$

(i) 0.125 (ii) 0.25 (iii) 0.5 (iv) 0.75 (v) 1.0

28. NaOH(aq) இன் ஐதான கரைசலிற்குள் $I_2(s)$ திண்மம் இட்டு கரைக்கப்பட்டது. பெறப்படும் விளைவுகளின் தொடைப்பிரிவு

(i) NaOI, NaI, $H_2O$ (ii) $NaIO_3$, NaI, $H_2O$ (iii) $NaIO_4$, NaI, $H_2O$

(iv) NaI, $H_2O$ (v) $NaIO_3$, உம் $H_2O$ உம்

29. ஒரு அசேதனச் சேர்வை X இன் நீர்க்கரைசலுக்கு KI இட்டு குலுக்கப்பட்டது. பெறப்பட்ட மஞ்சள் வீழ்படிவு நீருடன் வெப்பமாக்கப்பட்டபோது நிறமற்ற கரைசல் பெறப்பட்டது. குளிரவிட மீண்டும் மஞ்சள் வீழ்படிவு பெறப்பட்டது. X இன் பிறிதொரு பகுதிக்கு NaOH உம் Al தூசும் இட்டு பரிகரிக்க $NH_3$ வாயு பெறப்பட்டது. எனின் X ஆக அமைய பொருத்தமானது

(i) $AgNO_3$ (ii) KI (iii) $Pb(NO_3)_2$

(iv) $Hg(NO_3)_2$ (v) $Cu(NO_3)_2$

30. $1.0\ mol\ dm^{-3}\ I_2(aq)$ இன் $100cm^3$ நீர்க்கரைசலுடன் $100cm^3$ பியூட்டனோல் பகுதிகள் இரு தடவைகள் இட்டு குலுக்கி வேறாக்கப்பட்டது. நீர்க்கரைசலில் எஞ்சும் $I_2$ இன் செறிவு $0.04\ moldm^{-3}$ ஆகும். எனின் பியூட்டனோலுக்கும் நீருக்கும் இடையில் $I_2$ இன் பங்கீட்டு குணகம்

(i) 4 (ii) 40 (iii) 2 (iv) 20 (v) 10

31-40 வரையான வினாக்களுக்குரிய அறிவுறுத்தல்

| (i) | (ii) | (iii) | (iv) | (v) |
|---|---|---|---|---|
| a,b | b,c | c,d | d,a | வேறு சேர்மானம் |


31. பின்வருவனவற்றில் மஞ்சள் நிற நீர்க்கரைசல் / கரைசல்கள்

(a) $[CuCl_4]^{2-}$ (b) $[Cu(NH_3)_2]^+$ (c) $[Zn(NH_3)_4]^{2+}$ (d) $[Cr(NH_3)_6]^{3+}$

32. மிகை ஐதான $HNO_3$ இல் கரையக் கூடியது / கூடியன

(a) AgCl (b) $CaC_2O_4$ (c) $BaCrO_4$ (d) $PbI_2$

33. நீரின் அவத்தை வரைபு




பின்வரும் கூற்றுக்களில் உண்மையானது / உண்மையானவை

(a) A, B, C முறையே திண்மம், வாயு, திரவ அவத்தைகளாகும்.

(b) X, Y, Z முறையே 273.16K, 373.15K, 647.4K ஆகும்.

(c) Z இனால் குறிக்கப்படும் வெப்பநிலைக்கு மேல் நீராவியை திரவமாக்க முடியாது

(d) W ஆனது மும்மைப் புள்ளி ஆகும்.

34. வெப்பப்பிரிகையில் ஒரு வீழ்படிவையும் ஒரு வாயு வெளியேற்றத்தையும் கொடுப்பது / கொடுப்பன

(a) $NaHCO_3(aq)$ (b) $Ca(NO_3)_2(aq)$ (c) $Mg(HCO_3)_2(aq)$

(d) $Ca(HSO_3)_2(aq)$

35. $H_2S(g)$ உடன் கார ஊடகத்தில் வீழ்படிவைக் கொடுப்பது / கொடுப்பன

(a) $CuSO_4(aq)$ (b) $Bi(NO_3)_3(aq)$ (c) $ZnSO_4(aq)$

(d) $NiSO_4(aq)$

36. பின்வரும் கூற்றுக்களில் தவறானது / தவறானவை

(a) $CuSO_4$ நீர்க்கரைசலுக்கு 9650C மின்கணியம் செலுத்தும்போது 32 mg Cu படியும்

(b) $CuSO_4(aq)$ இனூடு Pt மின்வாய்களைப் பயன்படுத்தி மின்னோட்டத்தை செலுத்தும்போது அனோட்டில் நடைபெறுவது $2H_2O(l) \rightarrow O_2(g) + 4H^+(aq) + 4e$

(c) ஈயச் சேமிப்புக் கலத்தில் மின்னிறக்கம் நடைபெறும்போது கதோட்டில் நடைபெறுவது

$PbO_2(s) + 4H^+(aq) + SO_4^{2-}(aq) + 2e \rightarrow PbSO_4(s) + 2H_2O(l)$

(d) சாதாரண இலக்கிளாஞ்சிக் கலத்தில் அனோட்டில் நடைபெறுவது

$2NH_4^+ + 2MnO_2^- + 2e \rightarrow Mn_2O_3 + 2NH_3 + H_2O$

37. வெப்பப் பிரிகையில் ஒரேயொரு வாயுவிளைவைக் கொடுப்பது / கொடுப்பன

(a) $AgNO_3(s)$ (b) $NaHCO_3(s)$ (c) $NaNO_3$ (d) $KClO_3$

38. $CH_3CH_2CH=CH_2$ இனை $CH_3CH=CH-CH_3$ ஆக மாற்றக் கூடியது / கூடியன

(a) $H_2SO_4$ (b) $Br_2(aq)$ (c) $KMnO_4(aq)$

(d) KBr/dil $H_2SO_4$ பின் $KOH(C_2H_5OH)$


39. ஆவர்த்தன அட்டவணையில் 3ஆம் ஆவர்த்தனத்தில் Na முதல் Cl வரை உறுதியாக அதிகரித்துச் செல்வது


(a) முதலாம் அயனாக்க சக்தி (b) முதலாம் இலத்திரனாட்டம்

(c) அதியுயர் ஒட்சியேற்ற நிலைக்குரிய ஒட்சைட்டுக்களின் அமில நடத்தை

(d) அதியுயர் ஒட்சியேற்ற நிலைக்குரிய ஐதரொட்சைட்டுக்களின் நீரில் கரைதிறன்

40. பின்வருவனவற்றில் எது / எவை மிகை NaOH(aq) உடன் இளஞ் சூடாக்கும்போது முதலில் $NH_3$ ஐ தரும் வாயு வெளியேற்றம் நின்ற பின்பு விளைவுக் கரைசலை நன்கு வெப்பமாக்கும்போது மீண்டும் நன்கு சூடாக்க மீண்டும் $NH_3$ ஐ வெளிப்படுத்தக்கூடியது

(a)



(b)



(c)



(d) $NC-CH_2-CH_2-COONH_4$

41-50 வரையான வினாக்களுக்கான அறிவுறுத்தல்

| விடை | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (i) | உண்மை | உண்மை முதலாம் கூற்றின் திருத்தமான விளக்கம் |
| (ii) | உண்மை | உண்மை முதலாம் கூற்றின் திருத்தமான விளக்கமன்று |
| (iii) | உண்மை | பொய் |
| (iv) | பொய் | உண்மை |
| (v) | பொய் | பொய் |

| முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|
| 41. $C_6H_5NH_2$ ஆனது நீரிலும் பார்க்க HCL இல் நன்கு கரையக் கூடியது | $C_6H_5NH_2$ மூலமாதலால் HCl உடன் $C_6H_5NH_3^+$ |
| 42. $NO_2^+$, $CO_2$ இரண்டும் நேர் கோட்டு வடிவமுடையவை | இங்கு N,C இரு அணுக்களும் $sp^2$ கலப்புக்குரியன ஐ உருவாக்கும். |
| 43. சக்தியை சேமிக்கும் இரசாயன செயன்முறைக்கு மின்முலாமிடலில் படிவு ஒரு உதாரணமாகும். | மின்முலாமிடலின்போது மின்பகுப்பில் வெப்பம் வெளிப்படும். |
| 44. s,p தொகுப்புக்களில் ஒவ்வொரு கூட்டத்திலும் முதலாவது மூலகம் அக் கூட்டத்திற்கு சிறந்த உதாரணமல்ல. | s,p தொகுப்பில் கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் முதல் மூலகம் அக்கூட்டத்தின் ஏனைய மூலகங்களிலும் சிறிது வேறான இயல்பு காட்டுவன. |
| 45. $1.0\ mol\ dm^{-3}$ HCl இற்கு 100 மடங்கு ஐதாக்கமும் $0.1\ mol\ dm^{-3}$ இல் 100 மடங்கு ஐதாக்கமும் ஒரே pH அலகு வேறுபாட்டினை காட்டுவன. | HCl ஒரு வன்னமிலமாதலால் 100 மடங்கு ஐதாக்கத்தில் $H^+(aq)$ செறிவு ஒரேயளவாக குறையும் |
| 46. $NH_4^+$ இல் N இன் வலுவளவு 4 ஆகும். | $NH_4^+$ இல் N இன் வலுவளவு ஓட்டு இலத்திரன்கள் யாவும் பங்கீட்டில் ஈடுபடுகின்றன. |
| 47. உயர் ஏவற் சக்தியுடன் நடை பெறும் தாக்கங்கள் எப்போதும் உயர் அகவெப்பத் திற்குரியன. | உயர் ஏவற் சக்திக்குரிய தாக்கங்களில் எப்போதும் எந்திரப்பி மாற்றம் மறையானது |
| 48. திரவ HF இன் கொதிநிலை திரவ நீரிலும் பார்க்க உயர்வானது | புளோரின் ஆனது ஒட்சிசனிலும் பார்க்க கூடிய மின்மறையானது |
| 49. $NO_2$ ஆனது ஒளியிரசாயனப் புகாரை உருவாக்குவதில் குறிப்பிடத்தகு பங்களிப்புள்ளது. | $NO_2$ ஆனது போற்றன்களால் (hv) தாக்கப்பட்டு உருவாகும். அணுநிலை ஒட்சிசன் இதில் முக்கிய பங்கு வகிக்கின்றது |
| 50. அனிலினானது புரோமின் நீருடன் வெள்ளை வீழ்படிவைத் தருகிறது. | $Br_2$ ஆனது C=C கூட்டங்களுடன் இலத்திரனாட்ட கூட்டலில் ஈடுபடும். |

(பகுதி II நாளை...)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

528

## அவசர புத்தியால் ஏற்பட்ட இழப்பு!



ராமுவும், சுப்புவும் நண்பர்கள். ஒரே தெருவில்அடுத்தடுத்த வீடுகளில் வசிப்பவர்கள். கிராமத்தில் வசித்த அவர்கள் இருவரும் தினமும் நகரத் திற்குச் சென்று வற்றல் விற்று வந்தார் கள். இருவருக்கும் மிகவும் சொற்ப மான பணமே கிடைத்துவந்தது. ஆகை யால் அவர்களுடைய மனைவிமார் கள் அவர்களை நச்சரித்து வந்தனர்.

ஒருநாள் ராமுவின் மனைவி லட்சுமி, சுப்புவின் மனைவி வள்ளி யைப் பார்த்து "எதிர்காலத்தை நினைத் தால் பயமாக இருக்கிறது. என் வீட்டுக் காரர் சம்பாதிப்பது அரை வயிற்றுக் கஞ் சிக்குக் கூடப் போதவில்லை" என்றாள்.

அதற்கு "வள்ளி, என்ன செய்வது? நம் இருவரின் தலையெழுத்து, கையா லாகத கணவன்களாக நமக்கு வந்து வாய்த்தார்கள்" என்று ஒத்து ஊதி

**அம்புலிமாமா கதைகள்**

னாள். இருவரும் அடிக்கடி இவ்வாறு தங்கள் கணவன்மார்களின் தலை கள்ளை உருட்டுவதுண்டு.


ஒருநாள், பக்கத்துக் கிராமத்து ஜமீன்தார் அவர்களுடைய கிராமத்துக் கோயிலுக்கு வருகை தரப்போகிறார் என்றும், அன்றிரவு கிராமத்தில் மணியக் காரரின் வீட்டில் தங்கப்போகிறார் என் றும் ஒரு செய்தி தெரியவந்தது.

"ஆகா! என் வீட்டுக்காரர் மட்டும் ஜமீன்தாரைச் சென்று பார்த்தால் அவ ருக்கு ஒரு வேலை கிடைத்து விடும்," என்று லட்சுமியும்,, வள்ளியும் நினைத் தனர். இருவரும் மறுநாள் இரவு மணி யகாரர் வீட்டிற்குச் சென்றுஜமீன் தாரை சந்திக்கும்படி தங்களுடைய கணவன்மார்களிடம் வேண்டினர்.

ராமு,"லட்சுமி! வற்றல் விற்றுவிட்டு வீடு திரும்ப இரவு ஆகிவிடும், பிறகு ஜமீன்தாரை சந்திக்க முடியாது. அத னால், நான் நாளைக்கு நகரத்திற்குச் செல்லப் போவதில்லை!" என்றான்.

சுப்பு தன் மனைவி வள்ளியிடம், "நான் சிறிது வற்றல் விற்றுவிட்டு, மாலையில் திரும்பி விடுவேன். இர வில் ஜமீன்தாரை சந்திப்பேன்!" என் றான். மறுநாள் சுப்பு மட்டும் விற் பனைக்குச் செல்ல, ராமு வீட்டி லேயே தங்கி விட்டான். மதிய நேரத் திற்குள் தன் விற்பனையை முடித்து விட்டு, சுப்பு விரைவாக வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தான். அப்போது திடீரென மழைபிடித்துக் கொண்டது. ஆகையால், ஒரு பாழடைந்த அம்மன் கோயிலுக்குள் சுப்பு புகுந்தான். அங்கிருந்த அம்மனை பக்தியுடன் கும்பிட்ட சுப்புவை திடீரென ஒரு இனிமை யான குரல், "சுப்பு! நலமாக இருக்கி றாயா?" என்று கேட்டது.

திடுக்கிட்ட சுப்பு, "தாயே! நீ யார்? இந்தக் கோயிலின் அம்மனா?" என்று கேட்டான். அதற்கு அந்தக் குரல், "நீண்ட நாட்களாக இந்தக் கோயிலில் அம் மனே இல்லை. நான் பல கோயில்க ளைப் பார்வையிடும் அம்மன். உனது பக்தி எனக்குப் பிடித்திருந்தது. உனக்கு



ஒரு வரம் தர விரும்புகிறேன். என்ன வேண்டும் என்று கேள்!" என்றது.

"தாயே! நீ இவ்வாறு என்னைக் கேட்டதே போதும்! நான் இன்று இரவு ஜமீன்தாரை சந்திக்க வேண்டும். இந்த மழையில், காட்டுப் பாதையில் என்னால் செல்ல முடியவில்லை. நான் நேரத்திற்கு சென்றடைய நீதான் அருள் புரிய வேண்டும்!" என்றான்.


"உனக்கு ஒரு இடைஞ்சலும் ஏற் படாது. நீ வீட்டிற்குப் போ!" என்று குரல் ஒலித்தது. என்ன அதிசயம்! சற்று நேரத் தில் மழை நின்றுவிட, சுப்பு அவசர அவசர மாக தன் கிராமத்தை நோக்கி விரைந் தான். "என்ன சுப்பு? ஏன் இத்தனை தாமதம்?" என்று ராமு கேட்க, சுப்பு நடந்த வற்றைக் கூறினான்.

அவர்கள் இருவருடைய உரையா டலை உன்னிப்பாகக் கேட்டுக் கொண் டிருந்த மனைவிக்கு மனத்தில் திடீரென ஒரு யோசனை தோன்றியது. அந்த யோச னைப்படி நடந்தால் தான் வாழ்வில் ஏற்படப்போகும் மலர்ச்சியை கற்பனை செய்து ஒருகணம் மௌனமாக இருந் தாள்.பிறகு, திடீரென பெரிதாக கத்தி தன் கணவனை அழைத்து, "ஐயோ! என்னை உடனே நகரத்து மருத்துவரி டம் அழைத்துச் செல்லுங்கள்!" என்று நெஞ்சுவலியால் துடிதுடித்துக் கதறினாள். பதறிப்போன ராமு உடனே ஒரு வண்டியை ஏற்பாடு செய்து லட்சுமியை அதில் படுக்க வைத்து, நகரம் நோக் கிச் செல்ல [illegible] சுப்பு வும், வள்ளியும் அவர்களை அணுகி, "நாங்களும் துணையாக வருகிறோம்!" என்றனர்.

ஆனால் லட்சமி, "வேண்டாம் நீங் கள் ஜமீன்தாரை சந்தித்து வேலை கேளுங்கள்! நான் தனியாக சமாளித் துக் கொள்வேன்!" என்று கூறி விட் டாள். சுப்பு மட்டும் தனியாக ஜமீன் தாரை சந்திக்கச் செல்ல, ராமு, லட்சுமி யுடன் மருத்துவரை நோக்கி விரைந் தான். வண்டி பாழடைந்த கோயிலின் அருகே சென்றுகொர்ண்டிருக்கும் போது, திடீரென லட்சுமி வண்டியை நிறுத்தச் சொன்னாள். வண்டிக்காரனுக் குப் பேசிய தொகை முழுதும் கொடுத்து, அங்கேயே இறங்கிவிட்டாள். ராமு மிகவும் ஆச்சரியப்பட்டவாறு "ஏன் லட்சுமி இங்கேயே இறந்துவிட்டாய்? உன் நெஞ்சு வலி எப்படி இருக்கி றது?" என்று கேட்டான்.

எனக்கு நெஞ்சு வலியு மில்லை, ஒன்றுமில்லை. சும்மா அவர்கள் முன் நாட கம் போட்டேன். அவ்வளவு தான்! வாருங்கள்! நாம் கோயிலுக்குள் செல்வோம். நான் எப்படி வரம் கேட்கி றேன் என்று பாருங்கள்!" என்று ராமுவையும் அழைத் துக் கொண்டு அவள் கோயிலுக்குள் நுழைந் தாள்.

கோயிலுக்குள் நுழைந்த இருவரும் அம்மனை பய பக்தியுடன் விழுந்து வணங் கினர். பிறகு லட்சுமி, "தாயே! என் கணவரின் நண்பருக்கு வரம் தந்ததுபோல், எனக் கும் ஒரு வரம் தந்தருள்வாய்!" என்று வேண்டினாள். உடனே அம்மன் குரல் கருவறையிலிருந்து ஒலித்தது. "லட்சுமி! உனக்கு கட்டாயம் வரம் தருவேன்! ஒரே யொரு வரம்கேள்" என்றது அக்குரல்.



"தேவி! நான் மனத்தில் நினைப்பது நடக்க வேண்டும்!" என்றால், "சரி, இந்த வரம் உனக்கு ஒரு முறை பலன் தரும்!" என்று அந்தக் குரல் ஒலித்து ஓய்ந்தது.

மட்டிலா மகிழ்ச்சியுடன் லட்சுமி கோயிலிலிருந்து வெளியே வந்தாள். "இந்தக் கும்மிருட்டில் யாரேனும் நடந்து செல்வார்களா? என்று தன் கணவனி டம் கூறிவிட்டு, கண் இமைக்கும் நேரத் தில் அலுங்காமல் குலுங்காமல் வீடு போய்ச் சேரவேண்டும்!" என்று மனத்தில் நினைத்துக்கொண்டாள்.

அடுத்த கணமே இருவரும் அவர் களுடைய வீட்டில் இருந்தனர். அவர் களை எதிர்பார்த்துக் கவலையுடன் சுப்புவும், வள்ளியும் காத்துக் கொண் டிருந்தனர். "லட்சுமி! உனக்கு உடம்பு இப்போது எப்படி இருக்கிறது? மருத் துவர் என்ன சொன்னார்? என்று வள்ளி அக்கறையுடன் கேட்டாள். அதற்கு லட்சுமி, "என்னைப் பற்றி அப்புறம் கேட்கலாம்! உன் கணவருக்கு வேலை கிடைத்ததா?" என்று கேட்டாள். "கிடைத் தது! ஜமீன்தார் வேலை தர சம்மதித்து விட்டார். உன் கணவருக்கு அந்த பாக் கியம் இல்லாமல் போயிற்றே!" என்று வள்ளி ஆதங்கத்துடன் கூறினாள்.

அதற்கு ராமு, "லட்சுமி! அம்மன் கடைசியாக என்ன கூறினாள்? இந்த வரம்ஒருமுறை பலிக்கும் என்றாள். கோயிலைவிட்டு வெளியே வந்ததும் நீ கண்ணிமைக்கும் நேரத்தில் வீடு போய் சேர வேண்டும் என்று நினைத் தாய். அது நடந்துவிட்டது. இனி நீ நினைப்பது எதுவும் நடக்காது. அவ சரப்பட்டு வரத்தை வீணாக்கிவிட் டாள்!" என்றான். அப்போதுதான் லட் சுமிக்கு தன் கணவன் கூறுவது உண்மை என்று புரிந்தது.

மறுநாள் சுப்பு ராமுவிடம் வந்து, "ராமு நான் நாளை ஜமீன்தாரரிடம் வேலைக்குச் செல்லப்போகிறேன்" என் றான். அதற்கு அவன், "வாழ்த்துக்கள் சுப்பு, நேற்று நானும் உன்னுடன் வந் திருந்தால் இன்று நானும் வேலைக் குக் கிளம்பியிருப்பேன். ஆனால், என் தலையில் அவ்வாறு எழுதப்பட வில்லை" என்றான்.

அதற்கு சுப்பு, "ராமு நீ ஏன் இவ் வளவு வேதனைப்படுகிறாய். நான் வேலையில் சேர்ந்ததும் உனக்கு வாடகைக்கு ஒரு கடையை ஏற் பாடு செய்கிறேன். நீ அங்கு இருந்த படியே வியாபா ரம் செய்யலாம். நமது மனைவி மார்கள் இருவ ரும் இங்கு எப்படி அக்கா - தங்கை போல் இருந்தார் களோ அதே போல் அங்கும் இருப்பார்கள். ஆகையால் நீங் கள் இருவரும் எங்களுடன் தான் இருப்பீகள்" என்று கூறினான்.


உடனே லட் சுமி, "உங்கள் நல்ல மனத்தைப் புரிந்து கொள்ளாமலிருந்து விட்டேன். நான் செய்த பாவத்திற்கு கடவுள் என்னைத் தண்டித்து விட் டார். என்னை மன்னித்து விடுங்கள்" என்று கூறினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் - கிளிநொச்சி மாவட்டங்களில் ஒரே சமயத்தில் மூன்று வெவ்வேறு பிரதேசங்களினூடாக மூன்று ஜோதிலிங்க இரத பவனி

ஓகஸ்ட் மாதத்தில்

## 1. ஸ்ரீ சோமநாதர் இரத பவனி ஆரம்ப நிகழ்வுகள்




வலிகாமம்

| | | | |
|---|---|---|---|
| 04 ஞாயிறு | காலை 9.00 | - இரவு | கீரிமலை நகுலேஸ்வரம் |
| | மாலை 3.30 | - 5.00 | இளைஞர் நிகழ்வு |
| 05 திங்கள் | காலை 10.00 | - இரவு | மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் |
| 06 செவ்வாய் | காலை | - இரவு | ஆடி அமாவாசை கீரிமலை நகுலேஸ்வரம் |
| | காலை | | இரதபவனி அங்குரார்ப்பணம் |


## 2. ஸ்ரீ இராமேஸ்வரம் இரத பவனி ஆரம்ப நிகழ்வுகள்

கிளிநொச்சி தென்மராட்சி

06 செவ்வாய் ஆடி அமாவாசை காலை 7.00 - மாலை 4.00
இரணைமடுக்குளம் கனகாம்பிகை அம்மன் ஆலயம்
மாலை 3.00 - 4.30 இளைஞர் நிகழ்வு
மாலை 4.00 - 6.00 - இரதபவனி அங்குரார்ப்பணம்



## 3. காசி விஸ்வநாதர் இரத பவனி ஆரம்ப நிகழ்வுகள்



வடமராட்சி

| | | | | |
|---|---|---|---|---|
| 04 ஞாயிறு | காலை 6.00 | – | இரவு 8.00 | வல்லிபுரத்தாழ்வார் கோயில் |
| | காலை 10.00 | – | காலை 11.30 | இளைஞர் நிகழ்வு |
| 05 திங்கள் | காலை 6.00 | – | மதியம் 12.00 | நாகர் கோயில் |
| | காலை 10.00 | | | இளைஞர் நிகழ்வு |
| | மதியம் 2.00 | – | இரவு 7.30 | ஆழியவளை ஸ்ரீவெட்டுமுருகன் ஆலயம் |
| | மாலை 5.00 | | | இளைஞர் நிகழ்வு |
| 06 செவ்வாய் | காலை 7.00 | – | இரவு 8.00 | ஆடி அமாவாசை |
| | | | | பருத்தித்துறை சிவன் கோயில் |
| | காலை 9.30 | – | காலை 11.00 | |
| | மாலை 5.00 | – | மாலை 6.30 | இளைஞர் நிகழ்வு |
| | | | | ஸ்ரீசத்யசாயிசேவா சமித்தி |
| 07 புதன் | காலை | | | நெல்லந்தை பத்ரகாளி அம்மன் கோயில் |
| | | | | இரதபவனி அங்குரார்ப்பணம் |

### இரதத்துடன் இணைந்து வருபவை

**மனக்குறை தீர்க்கும் யாக குண்டம்**

வாழ்க்கையைச் சீர்குலைக்கும் தீய பழக்கங்கள், பலவீனங்கள், தீராத ஆழமான மன வேதனைகளை அர்ப்பணிக்கும் யாக குண்டம்

**இராஜயோக படவிளக்கம்**

வாழ்க்கையின் சவால்களை வெல்லும் ஆற்றலை இறைவனிடமிருந்து பெறும் கலை

### தரித்து நிற்கும் ஆலயங்களில்

**"துன்பம் போக்கும் அஷ்ட சக்திகள்"**

மனச்சோர்வைப் போக்கி ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் அதிகரிக்கும் எட்டு வித மனோநிலைகள் பற்றிய 20 நிமிட விளக்கம்

**தியான புத்தக, இறுவட்டுக் கண்காட்சி**

ஆன்மீக உண்மைகளை மனத்திரையில் உருவகிப்பது எப்படியென்று நவீன கம்பியூட்டர் (கிராபிக்ஸ்) வித்தைகளால் தத்ரூபமாக எடுத்துக் காட்டும் இறுவட்டுகள்

### இளைஞர் யுவதியருக்கு

**"நான் யார்?"** - சில ஆலயங்களில் 16 - 30 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர், யுவதியருக்கு ஒன்றரை மணித்தியால நிகழ்வு



**யாழ் பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையம்**



அங்குரார்ப்பண வைபவத்தை தொடர்ந்து 21 நாட்களுக்கு ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட பாதையில் இரதபவனிகள் இடம்பெற்று ஓகஸ்ட் 27ஆம் திகதி கோப்பாய் சித்திரவேலாயுத சுவாமி கோயிலில் நிறைவு விழா இடம்பெறும். இரதபவனியில், பிரதான வீதிகளும் நல்லூர், யாழ் நகரப் பகுதிகளும் உள்ளடக்கப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்திக்கு 7 ஆயிரத்து 76.47 மில்லியன் ரூபா

## செலவிடப்பட்டது என்கிறார் யாழ்.அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

**யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் யாழ்.மாவட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 7 ஆயிரத்து 76.47 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.**

யாழ்.மாவட்ட செயலக புள்ளிவிபர அறிக்கையை மேற்கோள் காட்டி அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் யாழ். மாவட்டத்தில் பல்வேறு துறைகளிலும் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் கடந்த மூன்று வருடங்களில் மட்டும் சுமார் 7 ஆயிரத்து 76.47 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளன.

குறிப்பாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வாழ்வின் எழுச்சி தேசிய வேலைத் திட்டத்தின் ஊடாக பல அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்த வாழ்வின் எழுச்சி தேசிய வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதனைவிட வடக்கின் வசந்தம் தீவக அபிவிருத்தி திட்டம், வடக்கின் துரித மீள் எழுச்சித் திட்டம், உள்ளூர் சேவை மேம்பாட்டுத் திட்டம், முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பிராந்தியங்களுக்கான துரித அபிவிருத்தித் திட்டம், மீள் எழுச்சித் திட்டம், மஹிந்த சிந்தனையின் கீழ் ஆரம்ப பாடசாலை அபிவிருத்தித்திட்டம், உலக உணவுத்திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின் கீழ் இந்த அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார். (அ-4-6)

## 'யுத்த சூன்ய வலயம்' மலேசியாவில் காண்பிப்பு

(கொழும்பு)

சர்ச்சைக்குரிய சனல் -4 யுத்த சூன்ய வலயம் ஆவணப்படம் மலேசியாவில் திரையிடப்பட்டுள்ளது.

மலேசிய உள்துறை அமைச்சகமே நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இத்திரைப் படத்தை இலவசமாக திரையிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சர்ச்சைக்குரிய சனல்-4 ஆவணப்படத்தை கடந்த 4 ஆம் திகதி வியாழக்கிழமை திரையிட ஏற்பாடு செய்தவர்கள் மலேசிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு அன்று கூறியிருந்த நிலையிலேயே இந்த திரைப் படம் மீண்டும் திரையிடப்பட்டுள்ளதென தெரிவிக்கப்படுகின்றது.

வன்னி யுத்தத்தின் இறுதிக்கட்டத்தின் போது அரசாங்கத்தின் செயற்பாடுகளைப் பாதகமாக சித்தரித்த யுத்த சூன்ய வலயம் ஆவணப்படம் திரையிடப்படவுள்ளதென அறிந்துக் கொண்ட மலேசியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் ஐ.அன்ஸர் மலேசிய அதிகாரிகளிடம் தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

வெளிவிவகார அமைச்சின் தகவலின் படி ஆவணப்படம் திரையிடப்படுவதை மலேசிய அதிகாரிகள் தடுத்து நிறுத்தியதுடன் ஏற்பாட்டாளர்களையும் தடுத்து வைத்துள்ளனர்.

படத்தின் இயக்குநரான கெல்லம் மக்ரே கைது செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் வந்த போதிலும் வெளிவிவகார அமைச்சரினால் அதனை அன்று உறுதி செய்ய முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-1)

## சிறுநீரக நோய் குறித்து ஆராய்ந்த அறிக்கை அமைச்சரவையில் சமர்ப்பிப்பு

சிறுநீரக நோய் பரவி வருவதைத் தடுப்பதற்கு அது தொடர்பில் நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழு 19 தற்காலிக தீர்வுகளும் 10, நீண்டகால தீர்வுகளும் அடங்கிய அறிக்கையொன்றை அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளது.

இந்த தீர்வுகளை அமுல்படுத்த அமைச்சரவை தீர்மானித்துள்ளதோடு இதனை கண்காணிக்க நிர்மாண பொறியியல் அமைச்சர் தலைமையில் அதிகாரிகள் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இரசாயன பசளை மற்றும் இரசாயன பாவனையினால் சிறுநீரக நோய் பரவுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

வடமத்திய மாகாணத்தில் சிறுநீரக நோயாளர்கள் அதிகளவில் இருப்பதற்கு இரசாயன பொருட்கள் நீரில் கலப்பதே காரணம் என ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஆராய 13 அமைச்சர்கள் கொண்ட அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டது. இந்தக்குழு 58 விஞ்ஞானிகளை அழைத்து இது தொடர்பாக ஆராய்ந்தது. உப குழுவின் அறிக்கை அமைச்சரவைக்கு முன் வைக்கப்பட்டது. (அ-2)

## கடனட்டை மோசடியில் துருக்கி பிரஜைகள் கைது

கடனட்டை மோசடியில் ஈடுபட்ட இரண்டு துருக்கி நாட்டுப் பிரஜைகளை குற்ற விசாரணைப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

போலியான கடன் அட்டைகளைப் பயன்படுத்தி பாரியளவில் நிதி மோசடிகளில் அவர்கள் ஈடுபட்டனர் என அவர்கள் மேல் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் பம்பலப்பிட்டி பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்களிடமிருந்து 57 கடனட்டைகளும் பத்து இலட்சம் ரூபாவிற்கு அதிகமான பணமும் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த துருக்கி பிரஜைகள் தாய்லாந்து மற்றும் மலேசியா ஆகிய நாட்டு வங்கிகளில் போலி கடனட்டைகளைப் பயன்படுத்தி பாரியளவில் பணத்தைப் பெற்றுக்கொண்டு இலங்கைக்கு சென்றுள்ளனர்.

இலங்கை தனியார் வங்கிகளில் பத்து இலட்சம் ரூபாவிற்கு மேல் மோசடியான முறையில் பணத்தைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

இந்த கடனட்டை மோசடியுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் பெல்ஜியத்தில் இருப்பதாக விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது. (அ-2)

## ஆட்சியமைப்பதே பிரதான இலக்கு

### ஐக்கிய தேசிய கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

ஆட்சியை அமைப்பதே பிரதான இலக்கு என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கட்சியின் நோக்கமும் இலக்கும் ஆட்சியை கைப்பற்றுவதே! எவ்வாறான தேர்தல்கள் நடத்தப்பட்டாலும் அதன்மூலம் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதே தமது நோக்கம்.

சிறிய மாகாண சபைத் தேர்தல்களை இலக்கு வைத்து கட்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.


சிறிய தேர்தல்களின் மூலம் மக்களின் மெய்யான அபிலாஷைகள் பிரதிபலிக்கப்படுவதில்லை. பொதுத் தேர்தலின் போது 75 வீதமாக காணப்படும் வாக்களிப்பு எண்ணிக்கை சிறிய தேர்தல்களில் 60 வீதமாகவே காணப்படும்.

எதிர்க்கட்சியின் வாக்காளர்களே இவ்வாறு வாக்களிக்கத் தவறுகின்றனர். எவ்வாறெனினும் இம்முறை மாகாணசபைத் தேர்தலில் மூன்று தந்திரோபாயங்களை பயன்படுத்தி பிரசாரத்தில் ஈடுபடப் போவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

## மென்பந்து துடுப்பாட்ட போட்டிக்கு விண்ணப்பிக்குக

(யாழ்ப்பாணம்)

எஸ்.ஆர்.சந்தைப்படுத்தல் நிறுவனத்தினால் யாழ்ப்பாணத்தில் சிறந்த மென்பந்து துடுப்பாட்ட அணியை தெரிவு செய்யும் நோக்கில் நடத்தப்படும் Jaffna Hero வெற்றிக் கிண்ணத்திற்கான மென்பந்து துடுப்பாட்ட போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் யாழ். மாவட்டத்தை சேர்ந்த துடுப்பாட்ட அணிகள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்பாக எஸ்.ஆர்.சந்தைப்படுத்தல் நிறுவனம், 201/2, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலோ அல்லது 0785050447, 0773727524, 0785048915 என்ற தொலைபேசி இலக்கங்களோடு தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களை பெறமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)



புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்ப பாடங்களுக்கான பயில் நிலை அறி வினைப் பெற்றுக்கொள்ளும் பயிற்சி நெறி கொக்குவில் தொழில் நுட்பக்கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. தொழிற்சங்க கல்லூரி பணிப்பாளர் கலாநிதி என்.யோகராஜன் விரிவுரையாளர்கள் மற்றும் பயிற்சி நெறியில் கலந்து கொண்ட மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவர்கள் ஆகியோரைப் படங்களில் காணலாம். (படம்:-மல்லாகம் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்டெம்பர் 6 பிரியாணி

மங்காத்தா வெற்றிக்குப் பின்பு வெங்கட் பிரபு இயக்கத்தில், ஸ்ரூடியோ கிரீன் நிறுவனம் சார்பாக ஞானவேல் ராஜா தயாரிக்கும் படம் பிரியாணி. இப்படத்தில் நாயகனாக கார்த்தியும், நாயகியாக ஹன்சிகாவும் நடிக்கின்றனர்.

இப்படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார். இது இவருக்கு 100ஆவது படமாகும். வெங்கட்பிரபுவின்' இயக்கத்தில் வித்தியாசமாக தயாராகிவரும் பிரியாணியை செப்டெம்பர் 6ஆம் திகதி வெளியிட முடிவு செய்துள்ளனர்.

பிரியாணி படத்தின் புகைப்படங்கள் ஏற்கனவே வெளியாகி ரசிகர்கள் மத்தியில் அமோக ஆதரவை பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# அஜித்தின் 'ஆரம்பம்'



ஸ்ரீ சத்ய சாய் மூவிஸ் சார்பில் ரகுராமன் தயாரிப்பில் விஷ்ணுவர்த்தன் இயக்கும் அஜித் படத்திற்கு கடந்த ஒரு வருடமாக பெயர் சூட்டப்படாமல் இருந்து வந்தது.

இந்நிலையில் இந்த படத்துக்கு 'ஆரம்பம்' என பெயர் சூட்டப்பட்டுள்ளது. அஜீத் சுய விளம் பரம் செய்யும் வகையில் வரும் தலைப் பையோ, சுயபுகழ் பாடும் தலைப்பையோ வைக்கக்கூடாது என்று தயாரிப்பாளரிடமும் இயக்குநரிடமும் கோரிக்கை வைக்க, கதை யின் கருவுக்கு ஏற்றவாறு இப்போது ஆரம் பம் என பெயரிடப்பட்டுள்ளது.

இந்த படத்தில் அஜித்துக்கு ஜோடியாக நயன்தாரா நடித்துள்ளார். மேலும் ஆர்யா, டாப்ஸி ஆகியோரும் நடித்துள்ளனர். யுவன் சங்கர்ராஜா இசையமைத்துள்ளார்.

படம் முடிந்து தற்போது தணிக்கை குழு வுக்கு அனுப்பும் நிலையில் உள்ளது. இப் படத்தின் இறுதிக்கட்ட வேலைகள் முடி வடைந்துள்ள நிலையில் விரைவில் வெளி யிட முடிவு செய்துள்ளனர்.

ஏற்கனவே விஷ்ணுவர்த்தன்-அஜித் கூட்டணியில் வெளிவந்த 'பில்லா' பெரும் வெற்றியை பெற்றது. இந்நிலையில் இந்த கூட்டணியில் உருவாகியுள்ள இந்த படத்தை ரசிகர்கள் மிகவும் எதிர்பார்த்து காத்திருக் கின்றனர்.

# காயம்பட்ட அனுஷ்கா

ருத்ரமாதேவி படத்தை சுமார் 120 கோடி செலவில் பிரம்மாண்டமாக தயாரித்து இயக்கி வருகிறார் குணசேகர். இந்தியாவில் தயாராகி வரும் முதல் வரலாற்று 3D STEREOSCOPIC படம் இது.


இந்தப் படத்தில் அனுஷ்கா, ராணா, பிரகாஷ்ராஜ், கிருஷ்ணம் ராஜு, சுமன், மகேஷ்பாபு என ஒரு நட்சத்திர பட்டாளமே நடித்து வருகிறது.

தமிழ், தெலுங்கில் ஒரே நேரத்தில் தயாராகும் இந்தப் படத்தில், 5 கோடி ரூபாய் மதிப்பிலான நகைகளை அணிந்து நடித்து வருகிறார் அனுஷ்கா.

மேலும், இந்தப் படத்தில் நடிப்பதற்காக உடம்பைக் குறைத்து, குதிரை சவாரி, வாள் சண்டை என அனைத்தையும் கற்றுள்ளார்.

சமீபத்தில் மகேஷ்பாபுவும், அனுஷ்காவும் மோதிக்கொள்வது போல சண்டைக்காட்சி படமாக்கப்பட்டது. அனுஷ்கா குதிரையில் ஏறி தப்பித்துப் போகும்போது மகேஷ்பாபு அவரை நோக்கி கத்தியை வீசுவார்.

இந்தக் காட்சியைப் படமாக்கும்போது மகேஷ்பாபு வீசிய அட்டைக் கத்தி, நிஜமாகவே அனுஷ்காவைக் குத்திவிட்டதாம். குத்தியது அட்டைக் கத்தி என்பதால் சிறிய காயம்தானாம். உடனடியாக முதலுதவி செய்யப் பட்டு, தொடர்ந்து அந்தக் காட்சியில் நடித்தாராம் அனுஷ்கா.



# கோச்சடையான் பற்றி இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமார்......

சினிமாவே பார்க்காதவர்கள் கூட கோச்சடையானை ஒரு முறை பார்த்தால், மீண்டும் பார்க்க வருவார்கள் என இயக்குநர் கே.எஸ் ரவிக்குமார் பாராட்டியதாக படத்தின் தயாரிப்பாளர் கூறினார். சுப்பர் ஸ்டார் ரியலிஸ்டிக் பெர்பா மன்ஸ் கேப்சரிங்" என்ற நவீன தொழில்நுட்பத்தில், முப்பரிமாணத் தில் படம் தயாராகியிருக்கிறது.

கோச்சடையான் குறித்து ரவிக்குமார் கூறுகையில், ஜேம்ஸ் கேமரூன் இயக்கிய 'அவதார்', ஸ்பீல்பெர்க் இயக்கிய 'டின் டின்' ஆகிய படவரிசையில் 'கோச்சடையான் படம் மிக நவீன தொழில்நுட்பத்தில் உருவாகியி ருக்கிறது. 'அவதார்", 'டின் டின்" ஆகிய இரண்டு ஹாலிவுட் படங்களும் தலா ரூ.2 ஆயிரம் கோடி செலவில், நான்கு வருடங்களுக்கு மேல் நேரமெடுத்து தயாரானவை. அந்த படங்களின் அம்சங்களை எப்படி வேண்டு மானாலும் மாற்றிக்கொள்ளலாம். ஆனால் ரஜினியை அப்படி மாற்றமுடியாது. அவருக்கு கோடான கோடி ரசிகர்கள் உள்ளனர். அவர் களை திருப்திப்படுத்துவது அவசியம். அத னால் அவரது தோற்றம், நடை உடை பாவனை ஒவ்வொன்றிலும் கவனம் செலுத்தி உரு வாக்கி உள்ளோம். ஹொலிவுட் படங்களை விட மிரட்டலாக தயாராகி உள்ளது.

கோச்சடையான் படத்தை நாங்கள் ஹொலிவுட் படங்களுக்கு இணையாக ரூ.125 கோடி செலவில், இரண்டு வருடங் களில் உருவாக்கியிருக்கிறோம். படத்தில் கிராபிக்ஸ் வேலைகளும், நவீன தொழில் நுட்பங்களும் அதிகமாக இடம்பெற்றிருப்ப தால்தான் தாமதமாகிறது.

கோச்சடையான் படம் தமிழ் திரை உலகில் மிகப்பெரிய முயற்சி. நிச்சயமாக இந்த படத்தை அனைத்து தரப்பு மக்களும் பார்த்து பாராட்டுவார்கள். இளமையான தோற்றத்தில் ரஜினி காந்த் செய்திருக்கும் சாகசங்கள் பரபரப்பாக பேசப்படும்.

கோச்சடையான் படத்தை ரஜினிகாந்த் பார்த்துவிட்டு அசந்துவிட்டார். இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமார், படமே பார்க்காதவர் கள்கூட இந்த படத்தை இரண்டு முறை பார்ப் பது நிச்சயம், என்று கூறினார். இயக்குநர் சௌந்தர்யா மிகத் திறமையாக, ஒரு சவா லாக எடுத்துக்கொண்டு இந்த படத்தை இயக்கி இருக்கிறார்.

படப்பிடிப்பு, எடிட்டிங் பணிகள் முடிவ டைந்துவிட்டன. பின்னணி இசைச் சேர்ப்பு பணிகள் நடைபெறுகின்றன. 'ஸ்பெஷல் எபக்ட்ஸ்" வேலைகளும் நடைபெறுகின்றன. செப்டெம்பர் மாதத்துக்குள் எல்லா வேலைக ளும் முடிவடைந்துவிடும்.

படம் திரைக்கு வரும் திகதி பற்றி ஒக்டோபர் மாதம் அறிவிப்போம். நிச்சயம் 'கோச்சடையான்" படம் இந்த ஆண்டில் திரைக்கு வந்து விடும். பாடல் வெளியீடு எங்கு, எப்போது என்பதை சீக்கிரம் சொல் கிறோம், என்றார்.

# அஜித்-ஷாலினி

## போன்று நட்சத்திர தம்பதிகளாக வாழ்ந்து காட்டுவோம்

– சிம்பு



படம்: வாலு
சிம்பு,
ஹன்சிகா

எனது பெற்றோரின் சம்மதத்துடன் ஹன்சிகா வைத் திருமணம் செய்து கொள்வேன் என்று நடிகர் சிம்பு தெரிவித்துள்ளார்.

இவர்கள் இருவரும் வேட்டை மன்னன், வாலு ஆகிய படங்களில் ஒப்பந்தமான போதே இரு வருக்கும் காதல் என்ற செய்தியை பலரும் எதிர் பார்த்தனர்.

எதிர்பார்த்ததை உண்மையாக்கும் பொருட்டு, இருவரும் தனது காதலை ஒப்புக்கொண்டு தற்போது திருமணப் பேச்சைக் கூட ஆரம் பித்துவிட்டனர்.

இவர்களின் காதலுக்கு ஆரம்பத்திலேயே சிம்புவின் தந்தை சம்மதம் தெரிவித்தது குறிப் பிடத்தக்கது.

இந்நிலையில் சிம்பு தனது காதலைப் பற்றி கூறுகையில், நானும், ஹன்சிகாவும் ஒருவரை யொருவர் மிக தீவிரமாக காதலித்து வருகிறோம்.

உயிருக்கு உயிராக பழகி வரும் நாங்கள் இருவரும், பெற்றோர்கள் சம்மதத்துடன் திருமணம் செய்து கொள்வோம். எங்களது திருமணம் அடுத்த வருடமே கூட நடக்கலாம். மேலும் அஜித்-ஷாலினி எப்படி சிறந்த நட்சத்திர தம்பதிகளாக வாழ்ந்து காட்டுகிறார்களோ, அதே போல் நானும், ஹன்சிகாவும் சிறந்த தம்பதிகளாக வாழ்ந்து காட்டுவோம் என்று தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய விடயங்கள் குறித்து தீர்வின்றேல் தெரிவுக் குழுவிலிருந்து விலகி விடுவேன்

## அமைச்சர் விமல் எச்சரிக்கை



(கொழும்பு)

**13ஆவது திருத்தச் சட்டத்தைப் பலவீனப்படுத்தும் நோக்கில் இலங்கை அரசின் நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் 2 ஆவது அமர்வு அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத்தில் இடம் பெற்றது.**

பொதுமக்களிடம் இருந்து கருத்தை பெற்று திருத்தங்களை செய்வதென அரச தரப்பு பிரநிதிகளை மட்டும் உள்ளடக்கிய தெரிவுக்குழு முன்னதாக முடிவு செய்திருந்தது.

இது தொடர்பான அறிவிப்பு பத்திரிகைகளில் வெளியிடப்பட்டதுடன், எதிர்வரும் ஓகஸ்ட் மாதம்15 ஆம் திகதிக்குள் கருத்துக்களைத் தரும் படியும் கேட்கப்படிருந்தது.

இந்நிலையில் தெரிவுக்குழுவின் 2 ஆவது அமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது, ஊடகங்களில் வெளியிடப்பட்ட பொதுமக்களுக்கான இந்த அறிவிப்பு தெளிவற்றிருப்பதாக உறுப்பினர்கள் சிலர் சுட்டிக்காட்டினர்.

அத்துடன், மீண்டும் தெளிவான அறிவிப்பை வெளியிட்டு, அதற்கான கால அவகாசத்தையும் நீடிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதையடுத்து, தெளிவான அறிவிப்பை மீண்டும் வெளியிட்டு, பொதுமக்கள் கருத்தைத் தெரிவிப்பதற்கு ஒருமாதகால அவகாசத்தை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தெரிவுக்குழுவைப் புறக்கணிக்கப் போவதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐ.தே.க., ஜே.வி.பி. என்பன ஏற்கனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக எந்த நடவடிக்கையிலும் இறங்கக் கூடாது என்று இலங்கைக்கு இந்தியா அழுத்தம் கொடுத்திருந்தது.

இதையடுத்து, அது தொடர்பான நடவடிக்கைகளை ஆறு மாதங்கள் வரை பிற்போட இலங்கை அரசு முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியிருப்பதாக தெரிகிறது.

இதற்கிடையில் காணி, பொலிஸ் அதிகாரங்கள் உள்ளிட்ட சில முக்கியமான விவகாரங்கள் குறித்து துரிதமாக தீர்வு காணத்தவறினால், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இருந்து விலகி விடுவேன் என்று அமைச்சர் விமல் வீரவன்ச எச்சரித்துள்ளார்.

இரண்டு அல்லது அதைவிட அதிகமான மாகாண சபைகளை இணைப்பதைத் தடுத்தல் உள்ளிட்ட முக்கியமான விவகாரங்கள் குறித்து விவாதிப்பதற்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழு முன்னுரிமை கொடுக்கவேண்டும்.

அத்துடன் காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பாகவும் தெரிவுக் குழு உடனடியாக ஆராயவேண்டும்.

இவை குறித்து முன்னுரிமை கொடுத்து, துரிதமாக கலந்துரையாடத்தவறினால், தெரிவுக்குழுவில் பங்கேற்பதில் அர்த்தமில்லை.

அடுத்த மூன்று அல்லது நான்கு அமர்வுகளில் இந்த முக்கியமான விவகாரங்கள் குறித்து ஆராயப்படவில்லையென்றால், தெரிவுக்குழுவில் இருந்து விலகிவிடுவேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# நவிபிள்ளையின் பாதுகாப்பு அதிகாரி இலங்கை விஜயம்

## பாதுகாப்பு நிலவரம் குறித்து ஆராய்வு

(திருகோணமலை)


ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

நவநீதம்பிள்ளையின் வருகைக்கு முன்னர் இந்த விஜயம் இடம் பெற்றுள்ளது.

ஆபிரகாம் மத்தாய் என்ற குறித்த அதிகாரி தலைமையிலான குழுவினர், கிழக்கு கடற்படை தளபதி ரியல் அட்மிரல் ரொஹான் அமரசிங்கவை சந்தித்து உரையாடியுள்ளார்.

இச் சந்திப்பு திருகோணமலையில் உள்ள கடற்படைத் தளத்தில் நடைபெற்றது. உலகளாவிய ரீதியில் நவநீதம்பிள்ளையின் பாதுகாப்பு விடயங்களில் மத்தாயும் அவரது குழுவினரும் ஈடுபட்டு வருகின்றனர்.

மத்தாய் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சேவைகளிலும் பணியாற்றியுள்ளார். (அ-2)



தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் விழிப்புலனை இழந்த சொர்ணலிங்கம் கருமதன் என்ற மாணவனுக்கு இராண்டாவது சத்திரசிகிச்சைக்கு ரூபா 6 இலட்சத்து 29 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை நேற்றுமுன்தினம் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியினால் ஆளுநர் பணிமனையில் வைத்து வழங்கப்பட்டது. இக்காசோலையை வடமாகாண ஆளுநர் மாணவனுக்கு வழங்கி வைப்பதையும் ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், பிரதம செயலாளர் ஆர் .விஜயலட்சுமி ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்:- என்.குமார்)

# பொதுநலவாய பிரிட்டன் பிரதிநிதிகள் அரசாங்கத்தை பாராட்டினராம்

## பிரதி சபாநாயகர் கூறுகின்றார்

(கொழும்பு)

பொது நலவாய பாராளுமன்ற சங்கத்தின் பிரிட்டன் கிளையின் பிரதிநிதிகள் குழுவுக்கு சபையில் வரவேற்பளிக்கப்பட்டது.

உத்தியோகபூர்வவிஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ள பொதுநலவாய பாராளுமன்ற சங்கத்தின் பிரிட்டன் கிளை பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்துக்கு விஜயம் செய்து சபை நடவடிக்கைகளை பார்வையிட்டனர். இதன்போது சபைக்கு தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி இக் குழுவினரை வரவேற்றார்.

ஆளும், எதிரணி உறுப்பினர்கள் ஆமோதிக்கும் வகையில் மேசையைத் தட்டி ஆரவாரம் வெளியிட்டனர். ஏழு பேரைக் கொண்ட இக்குழுவினர் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி, குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார் ஆகியோரை பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டை நடத்துவதற்கு அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் நடவடிக்கைகளை இக்குழுவினர் பாராட்டியதாக பிரதி சபாநாயகர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

இக் குழுவினர் வடக்கு-கிழக்கு ஆகிய பிரதேசங்களுக்கும் விஜயம் செய்யவிருப்பதாக குறிப்பிட்டார்.

நாட்டில் முன்னெடுக்கப்பட்டிருக்கும் அபிவிருத்தி நடவடிக்கைகளைப் பாராட்டியிருந்த இக் குழுவினர், முன்னாள் புலி உறுப்பினர்களை ஜனநாயக செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்துவது குறித்து அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் குறித்தும் மகிழ்ச்சியைத் தெரிவித்ததாக பிரதி சபாநாயகர் குறிப்பிட்டார். (அ-2)

# மாகாணசபையை எதிர்ப்பவர்கள் அச்சபையில் இருக்கக்கூடாது

## கம்மன்பில தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாண சபைகளை எதிர்ப்பது, மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது ஆகிய இரண்டும் வெவ்வேறான விடயங்கள் என மேல் மாகாண அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

மாகாண சபைகளை எதிர்ப்பவர்கள் மாகாண சபையில் இருக்கக் கூடாது என்று கூறுகின்றனர். இப்படி எமக்கு கூறும் நபர்கள், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை வேண்டாம் என கூறிக் கொண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

விருப்பு வாக்கு முறைமையை எதிர்ப்பவர்கள், அந்த முறையின் கீழ் தேர்தலில் போட்டியிடுகின்றனர். மாகாண சபைகளை எதிர்த்து மாகாண சபைகளில் இருக்கமுடியாது என்றால், முதலாளித்துவத்தை எதிர்த்துக் கொண்டு, முதலாளித்துவத்தின் கீழ் வாழமுடியாது.

அப்படியானால் அனைத்து சமவுடைமைவாதிகளும்தற்கொலைசெய்து கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# ஜே.வி.பியின் வேட்பாளர் தெரிவு

மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் முதன்மை வேட்பாளர்களை ஜே.வி.பி.தெரிவு செய்துள்ளது.

இதனடிப்படையில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் ஜே.வி.பியின் முதன்மை வேட்பாளராக சின்னத்துரை ராஜேந்திரன் போட்டியிடவுள்ளார். வடமேல் மாகாண சபைத் தேர்தலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கமால் குணரத்ன போட்டியிடுகின்றார்.

மத்திய மாகாண சபையின் முதன்மை வேட்பாளாராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கமமே கெதர திஸாநாயக்க போட்டியிடுகின்றார்.

மாகாண சபைகளுக்கான வேட்பு மனுக்களை ஜே.வி.பி. எதிர்வரும் 31 ஆம் திகதியும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியும் தாக்கல் செய்ய தீர்மானித்துள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அடிப்படை வசதிகள் இன்றி

# அல்லலுறும் குமாரபுர மக்கள்

(முல்லைத்தீவு)

**கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட குமாரபுர கிராம மக்களில் 326 குடும்பங்கள் கடந்த 2011 ஆம் ஆண்டு இங்கு மீள் குடியேற்றப்பட்டு வாழ்ந்து வருகின்றனர். இந் நிலையில் இக் கிராமத்திற்கு போதுமான வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

மேற்படி கிராமத்தில் 305 விவசாயக் குடும்பங்களும், 21 மீனவ குடும்பங்களும் வாழ்கின்றனர். இதில் முறிப்பு கிராமத்திலேயே அதிகளவான மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களில் 200 குடும்பங்களுக்கு ஷோபா நிறுவனத்தினால் தற்காலிக வீடுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆயினும் இன்னமும் 116 குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகளும் 316 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளும் தேவையாகவுள்ளன.

அத்துடன் 38 குடும்பங்களுக்கு காணி இன்மையால் வீட்டுத் திட்டங்களைப் பெறமுடியாத நிலைக்குட்பட்டுள்ளனர். ஒரு அங்கத்தவரைக் கொண்ட 42 குடும்பங்களுக்கு, எந்த உதவிகளும் வழங்கப்படவில்லை எனவும் முன்னாள் போராளிகளுக்கு வாழ்வாதார உதவிகளை மேம்படுத்தும் கடன் திட்டங்களை வழங்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இக்கிராமத்திற்கு அரச பேருந்து சேவை இதுவரை பெற்றுக் கொடுக்கப்படவில்லை. தனியார் பேருந்து சேவை இடம்பெறுகின்ற போதிலும் அச் சேவையும் விஸ்தரிக்கப்பட வேண்டியுள்ளது.



அத்துடன் இக் கிராமத்திலுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு போதிய வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டியுள்ளது. மாதர் கிராம அபிவிருத்தி சங்க கட்டடமும் திருத்தியமைக்கப்பட வேண்டியுள்ளதுடன் பொது நோக்கு மண்டபம், மீன்வர் சங்கம், கமக்கார அமைப்பு போன்றவற்றிற்கு கட்டடங்களும் அமைக்கப்பட வேண்டும்.

கிராமத்தில் இரண்டு வீதிகள் மட்டுமே புனரமைக்கப்பட்டுள்ளன. இங்கு பிர தான வீதி உட்பட 27 உள்ளூர் வீதிகள் புனரமைக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன.

மேலும் மின்சார வசதிகளையும் ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் மற்றும் சந்தைப்படுத்தும் வாய்ப்புக்களையும் ஏற்படுத்தி தருமாறு முல்லை. மாவட்ட அரசாங்கம் அதிபருக்கு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-9-267)

## வருடாந்த திருவிழா

(பூநகரி)

கௌதாரிமுனை கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட மண்ணித்தலை செபஸ்தியார் ஆலய திருவிழா எதிர் வரும் ஓகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகி 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தொடர்ந்து ஆறு நாட்கள் நடைபெறவுள்ள திருவிழா 24 ஆம் திகதி திருநாள் திருப்பலியுடன் நிறைவடையவுள்ளது.

திருவிழாவை முன்னிட்டு சுகாதாரம் மற்றும் குடிநீர் வசதிகள், பாதுகாப்பு, விற்பனை நிலையங்கள் என்பன ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பித்தக்கது. (ம-9-84)

## சமூக பாதுகாப்பு சபையின் ஏற்பாட்டில் விழிப்புணர்வு நிகழ்வு

இலங்கை சமூகப் பாதுகாப்பு சபையினரால் கிளிநொச்சி மாவட்டத்தில் அச் சபை பற்றிய விழிப்புணர்வு நிகழ்வும் இலங்கை சமூக பாதுகாப்பு சபையில், புதிய பயனாளிகளை இணைப்பதற்கான நடமாடும் சேவையும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு பளை பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி சபையின் திட்டமானது கிளிநொச்சியில் இவ் வருடம் ஆரம்பிக்கப்பட்ட போதும், மிகக் குறுகிய காலத்தில் சிறந்த அடைவுமட்டத்தை காட்டியவர்களும் இந்த நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர். இதனடிப்படையில், பளை பிரதேச செயலர் சி.சத்தியசீலன், பூநகரி பிரதேச செயலர் கே.எஸ்.வசந்த குமார், கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன், மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி வே.தபேந்திரன், பளை சமூக சேவைகள் அதிகாரி செல்வி.கே.கேதினி, பூநகரி சமூக சேவைகள் அதிகாரி செ.சுரேந்திரா, கரைச்சி சமூக சேவைகள் அதிகாரி ப.சிவகரன், பூநகரி பிரதேச கிராம அலுவலர் பி.பாலச்சந்திரன், பளை பிரதேச கிராம அலுவலர்களான ஆர்.சுதர்சன், ஏ.சுபாஜினி, எஸ்.ஜீவிதா ஆகியோரும் கரைச்சி பிரதேச கிராம அலுவலர் எஸ்.சேந்தன், பட்டதாரி பயிலுநர்களான (பளை பிரதேச செயலகப் பிரிவு) திருமதி எஸ்.ஜெனிற்றா, (கரைச்சி பிரதேச செயலகப் பிரிவு)செல்வி. தி.காயத்திரி, (பூநகரி பிரதேச செயலகப் பிரிவு) ஜே.சுபாஜினி போன்றோர் கௌரவிக்கப்படவுள்ளதாக கிளி நொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் அறி வித்துள்ளார். (ம-9-254)

## கன்னி பசுக்கன்று வளர்ப்புத் திட்டம்

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கால்நடை வளர்ப்போரின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் அரசாங்கத்தால் செயற்படுத்தப்படும் கன்னி பசுக்கன்று வளர்ப்புத் திட்டம் மூலம் செயற்கை முறை ஊசி மூலம் நல்லினப் பசுக்கன்று உற்பத்தி ஊக்குவிக்கப்பட்டு வருவ தாக கிளி. மாவட்ட கால்நடை உற் பத்தி உதவி பணிப்பாளர் செல்லத்துரை கௌரிதிலகன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தால் நாடுதழுவிய ரீதியில் செயற்படுத்தப்பட்டு வரும் இத் திட்டம் கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை, கரைச்சி, பச்சிலைப் பள்ளி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் நடைமுறையிலுள்ளது.

பூநகரி பிரதேச செயலர் பிரிவுகளில் இத் திட்டம் பாரியளவில் இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அங்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டவுடன் இது நடைமுறைக்கு வரவுள்ளது.

மேற்படி பிரதேச செயலர் பிரிவுகளில் கடந்த ஜூலை மாதம் முதலாம் ஆம் திகதிக்கு பின்னர் செயற்கை முறை மூலம் கருத்தரிக்கப்பட்டு நல்லின பசுக்கன்றுகளை பெற்றுள்ள கால்நடைகளின் உரிமையாளர்கள், தமது பகுதிகளிலுள்ள கால்நடை வைத்திய பணிமனைக்கு பற்றுச் சீட்டுடன் சென்று பதிவு செய்வதன் ஊடாக பசுக்கன்றுகளை வளர்ப்பதற்குபத்தாயிரம்ரூபாவை மானியமாக பெறமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-9-15)

## புனரமைப்பு வேலை பூர்த்தியாகவில்லை

(சிவநகர்)


கிளிநொச்சி திருநகர் பண்ட் வீதியின் புனரமைப்பு வேலைகள் முழுமையாக பூர்த்தியாக்கப்படவில்லை




என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். மேற்படி வீதியின் புனரமைப்பு பணிகளின் மூலம் குறுகிய தூரம் மட்டுமே நிறைவடைந்துள்ளன. ஏனைய வீதிகள் பள்ளமாகவுள்ளதுடன் கிரவல் இடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

இதனால் போக்குவரத்தை மேற்கொள்வதில் மக்கள் சிரமத்தை எதிர்கொள்வதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் வீதியை முழுமையாக பூர்த்தி செய்து தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-9-254)









வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் கலாசார விழா அண்மையில் பிரதேச வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், *மருதமுகில் நூலின்* முதற் பிரதியை நெடுங்கேணி பிரதேச செயலர் பரந்தாமன் வடமாகாண கல்வி அமைச்சின் செயலர் சத்தியசீலனுக்கு வழங்கு வதையும், கலை நிகழ்வையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள் :- குருமன்காடு செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன முதியோர் காப்பகத்திற்கு தீ!

## 11 பேர் உயிரிழந்தனர்

சீனாவின் முதியோர் காப்பகத்தில் வசித்த ஒருவர் அந்தக் காப்பகத்திற்கு தீவைத்ததில், அவர் உட்பட 11 பேர் உயிரிழந்தனர்.

அந்நாட்டின் ஹெய்லாங்ஜியாங் மாகாணத்திலுள்ள ஹெய்லுன் நகரில் ஆதரவற்ற முதியோர்களுக்கான மருத்துவக் காப்பகம் ஒன்று இயங்கிவருகிறது. இதன் உள்நோயாளிகளுக்கான கட்டடத்தில் வெள்ளிக்கிழமை அதிகாலை வாங் குய் (45) என்பவர் வைத்த தீயால் அக்கட்டடம் முற்றிலுமாக நாசமானது.

இதில் சிக்கி, வாங் குய் உட்பட 11 பேர் உயிரிழந்தனர். இரண்டுபேர் காயமடைந்தனர். மூளையில் இருந்த இரத்தக்கட்டிக்காக வாங் குய் இந்த மருத்துவக் காப்பகத்தில் தங்கி சிகிச்சை பெற்றுவந்தார்.

அப்போது அவரிடமிருந்து 200 யுவாங் காணாமல் போய்விட்டது. சக நோயாளிகளில ஒருவர்தான் அதைத் திருடிவிட்டதாக சந்தேகமுற்ற அவரை அங்கிருந்த அனைவரும் சமாதானப்படுத்தியும், ஆத்திரத்தில் அவர் அந்தக் கட்டடத்துக்கு தீவைத்துவிட்டார். இறந்தவர்கள் அனைவரும் 45 முதல் 87 வயதுடையவர்கள். ஆதரவற்ற முதியோர்களுக்காக இந்த மருத்துவக் காப்பகம் 2005 இல் கட்டப்பட்டது.

# புற்றுநோயை குணப்படுத்த புதிய கருவி

புற்றுநோய் பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளும்போது புற்றுநோய் பாதித்த திசுக்களை மட்டும் துல்லியமாக அகற்றும் ஒரு புதிய வகை கருவியை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இதனால் புற்றுநோய் பாதித்த நோயாளிகளுக்கு அறுவைச் சிகிச்சை செய்த போதிலும் மீண்டும் புற்றுநோய் தாக்கும் அபாயமும் இருந்து வந்தது. இதனையடுத்து புற்றுநோய் திசுக்களை சரிசெய்ய தற்போது கண்டுபிடித்துள்ள இந்த புதிய வகை கருவியால் புற்றுநோய் பாதித்த திசுக்களை ஏனைய திசுக்களில இருந்து பிரித்து காட்ட முடியும் அதனால் அவற்றை மிக துல்லியமாக நீக்கலாம். இதனால் புற்றுநோய் பாதித்து அறுவைச் சிகிச்சை மேற்கொண்டவர்களுக்கு மீண்டும் புற்று நோய் தாக்கும் அபாயம் பலமடங்கு குறைந்துள்ளது என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

# பாகிஸ்தானில் தற்கொலை தாக்குதல்

## 48 பேர் பலி




பாகிஸ்தானின் வடமேற்கில் ஆப்கானிஸ்தான் எல்லை பிரிவில் பக்துன்கவா என்ற மலை மாகாணத்தில் அங்குள்ள குர்ரம் ஏஜென்சி பகுதியில் பிராசினார் நகரில் நேற்றுமுன்தினம் இரட்டை தற்கொலை தாக்குதல் நடந்தது.

நேற்றுமுன்தினம் இப்தார் நோன்பையொட்டி பொருட்கள் வாங்க அங்குள்ள பஜாரில் சுமார் 500இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் திரண்டிருந்தனர். அப்போது அங்கு மோட்டார் சைக்கிளில் வந்த தற்கொலை படை தீவிரவாதி தனது உடலில் கட்டியிருந்த குண்டை வெடிக்கச் செய்தான்.

இதனால் அப்பகுதியில் பதட்டமும் பரபரப்பும் ஏற்பட்டன. மக்கள் ஆங்காங்கே சிதறி ஓடினார்கள். இதற்கிடையே அடுத்த ஒரு நிமிடத்தில் நகரத்தின் மற்றொரு பகுதியில் மீண்டும் ஒரு தற்கொலை தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதல்களில் 25 பேர் அதே இடத்தில் பலியாகினர். 100இற்குகும் மேற்பட்டோர் காயமடைந்தனர். அவர்களுக்கு பெஷாவரில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சிகிச்சை பலனளிக்காமல் மேலும் பலர் இறந்தனர்.

இதனால் இறந்தவர்களின் எண்ணிக்கை 48 ஆக உயர்ந்தது. பலர் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. எனவே, உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

# 2021 ஆம் ஆண்டு செவ்வாய்க்கு மனிதர்களை அனுப்ப இங்கிலாந்து திட்டம்



2021ஆம் ஆண்டில் செவ்வாய்க் கிரகத்துக்கு மனிதர்களை அனுப்ப இங்கிலாந்து திட்டமிட்டுள்ளது. செவ்வாய்க் கிரகத்துக்கு அமெரிக்காவின் நாசா விண்வெளி மையம் எண்டவர் விண்கலத்தை அனுப்பியுள்ளது. அங்கு தரை இறங்கிய விண்கலம் ஆய்வுகள் மேற்கொண்டு வருகிறது.

தற்போது எண்டவர் விண்கலத்தில் ஆய்வு கூடம் மட்டுமே உள்ளது. அதில் அமைக்கப்பட்டுள்ள கமராக்கள் மற்றும் கருவிகள் செவவாய் கிரகத்தின் நில அமைப்பு, தட்ப வெப்ப நிலை உள்ளிட்டவைகளை போட்டோ எடுத்து பூமிக்கு அனுப்பி வருகின்றன. இந்த நிலையில் 2033ஆம் ஆண்டில் செவ்வாய்க் கிரகத்துக்கு மனிதர்களை அனுப்ப அமெரிக்காவின் நாசா மையம் முடிவு செய்துள்ளது.

ஆனால், நாசாவின் இந்த தீவிர முயற்சியை முறியடிக்கும் வகையில் இங்கிலாந்து வருகிற 2021ஆம் ஆண்டிலேயே செவ்வாய்க கிரகத்துக்கு மனிதர்களை அனுப்புகிறது. அதற்காக 3 பேர் குழு பயணம் செய்யும் விண்கலத்தை வடிவமைத்து வருகிறது. லண்டன் இம்பீரியல் கல்லூரியை சேர்ந்த விஞ்ஞானிகள் இதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து இந்த குழுவின் தலைவர் பேராசிரியர் டாம் பைக் கூறும்போது, செவ்வாய் கிரகத்துக்கு ஆட்களை அனுப்புவதுதான் அடுத்த மிகப்பெரிய இலக்காக கருதுகிறோம். அதன் மூலம் சந்திரனின் தரை இறங்கிய நீல் ஆம்ஸ்ட்ரோங் புஷ் ஆல்ட்ரினின் சாதனையை 21ஆம் நூற்றாண்டில் நிகழ்த்த போகிறோம். மனிதர்களை அனுப்பும் அதே நேரத்தில் மற்றொரு ரொக்கெட்டில் செவ்வாய் கிரகத்தின் வடக்கு பகுதிக்கு ரோபோக்களை அனுப்ப இருக்கிறோம்.

அவை அங்குள்ள ஐஸ் படிவங்களை வெட்டியெடுத்து ஆய்வு மேற்கொள்ளும். அதே நேரத்தில் அங்கு செல்லும் 3 பேர் கொண்ட குழு 9 மாதங்கள் ஆய்வு மேற்கொண்டு பூமிக்கு திரும்புவார்கள். புவியீர்ப்பு சக்தி கிடைக்காத காரணத்தால் அவர்களின் உடல் எடை மற்றும் தசை மற்றும் எலும்புகளில் பாதிப்பு ஏற்படும். எனவே, அவர்களின் உடல் நிலை பாதிக்காத வகையில் பயணம் செய்யும் விண்கலம் அதிநவீன முறையில் விசேடமாக வடிவமைக்கப்பட உள்ளது என்றும் விஞ்ஞானி பைக் தெரிவித்துள்ளார்.

## அணுக் கதிரியக்கம் கலந்த நீர் கசிந்ததனால்

# ஜப்பானில் அணு உலையை நிர்வகிக்கும் நிறுவனத்தை கடுமையாகச் சாடுகின்றனர் சர்வதேச அணுசக்தி நிபுணர்கள்

ஜப்பானில் உள்ள புகுஷிமா அணு உலையில் இருந்து அணுக் கதிரியக்கம் கலந்த நீர் கசிந்தது தொடர்பாக அதை நிர்வகிக்கும் நிறுவனத்தை சர்வதேச அணு சக்தி நிபுணர்கள் கடுமையாகச் சாடியுள்ளனர்.

ஜப்பானில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் நிலநடுக்கம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து சுனாமி தாக்குதலும் நிகழ்ந்தது. இதனால், புகுஷிமா நகரில் உள்ள அணு உலை சேதம் அடைந்தது. அதைச் சுற்றிலும் வசித்து வந்த ஆயிரக்கணக்கான மக்கள் அங்கிருந்து பாதுகாப்பான பகுதிகளுக்கு வெளியேற்றப்பட்டனர்.

இந்த அணு உலை விபத்து தொடர்பாக நிபுணர்கள் குழு ஆய்வு நடத்துவதற்கு, அணு உலையை நிர்வகிக்கும் டோக்கியோ எலக்ட்ரிக் பவர் நிறுவனம் (டெப்கோ) ஏற்பாடு செய்தது. இந்தச் சோதனையின் முடிவுகள் சில மாதங்களுக்கு முன்பே சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அதை டெப்கோ சமீபத்தில்தான் பகிரங்கமாக வெளியிட்டது. அணு உலையில் இருந்து கதிரியக்கம் கலந்த நீர் வெளியேறி, கடலில் கலந்ததை அந்த நிறுவனம் கடந்த வாரம் முதல் முறையாக ஒப்புக் கொண்டது.

இந்நிலையில், டெப்கோ நிறுவனம் அணு உலை ஆய்வு தொடர்பாக இரு வெளிநாட்டு நிபுணர்கள் மற்றும் 4 ஜப்பானிய நிபுணர்கள் அடங்கிய கண்காணிப்புக் குழுவை அமைத்தது. இதன் கூட்டத்தில் பங்கேற்க வருமாறு அமெரிக்க அணுசக்தி ஆணையத்தின முன்னாள் தலைவர் டேல் கிளீனுக்கு அழைப்பு அனுப்பப்பட்டது. அதன்படி டோக்கியோ வந்த அவர், இந்தக் குழுவின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில்,

கதிரியக்கம் கலந்து நீர் வெளியேறிய விவகாரமானது, பாரம்பரியமான முடிவு எடுக்கும் நடைமுறை இல்லாததைக் காட்டுகிறது. மேலும், இது குறித்த தகவல்களை நீங்கள் (டெப்கோ நிறுவனம்) ஜப்பான் மக்களிடம் தெரிவிக்கவில்லை என்றும் தோன்றுகிறது. நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதே உங்களுக்குத் தெரியவில்லை. உங்களிடம் எந்தத் திட்டமும் இல்லை. சுற்றுச்சூழலையும் மக்களையும் காக்க நீங்கள் எதுவும் செய்யவில்லை என்றும் தெரிகிறது.

நீரில் கதிரியக்க மாசு கலந்த விவகாரத்தில் உங்களின் சமீபத்திய நடவடிக்கைகளில் நாங்கள் அதிருப்தி அடைந்துள்ளோம். எனினும் இந்தச் சம்பவங்கள், புகுஷிமா உலையைச் சுத்திகரித்து சீர்திருத்தும் பணியில் எட்டப்பட்டுள்ள முன்னேற்றத்தைப் பாதிக்காது என்று நம்புகிறோம் என்றார் டேல் கிளீன்.

மற்றொரு நிபுணரான, பிரிட்டன் அணு சக்தி ஆணையத்தின் தலைவர் பார்பரா ஜட்ஜ் பேசுகையில், அணு உலை விபத்து குறித்த தகவல்களை டெப்கோ நிறுவனம் உடனடியாக மக்களுக்குத் தெரியப்படுத்தாதது என்னை அதிருப்திக்கு உள்ளாக்கியிருக்கிறது. இது கவலையளிக்கும் போக்காகும. இந்த விவகாரத்தைத் தவறாகக் கையாண்டதில் இருந்து இந்நிறுவனம் பாடம் கற்றிருக்கும் என்று நம்புகிறேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும்... ஆனா வராது
-தொட்டால் பூ மலரும் திரைப்படம்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பிரம்ம தேவர் தலைமையிலான குழுவிடம் யாழ்ப்பாணத்து மாணவர்கள் முறையீடு - 2

யாழ்ப்பாணத்தில் மின்சாரம் தடைப்படுவது குறித்து மாணவர்கள் தேவர் குழுவிற்கு சமர்ப் பித்த மகஜரை விசாரணை செய்த பிரம்ம தேவர் தலைமையிலான குழு, யாழ். அரச அதிபரை மன்றுக்கு அழைத்தது.

**சித்திரகுப்தன் :** அரச அதிபர்... அரச அதிபர்...

**அரச அதிபர் :** தேவரீர் வணக்கம்.

**பிரம்மா :** யாழ்ப்பாணத்தில் மின்சாரம் அடிக் கடி தடைப்படுவது உண்மையா?

**அ. அதிபர் :** ஆம் சுவாமி.

**பிரம்மா :** க.பொ.த உயர் தரப் பரீட்சை மற்றும் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை என்பன நடைபெற இருக்கின்ற வேளையில் மின்சாரத்தை தடைசெய்வது தவறு அல்லவா?

**அ. அதிபர் :** *(மௌனம்)*

**பிரம்மா :** 23.07.2013 அன்று யாழ் பொது நூலகத்தில் ஊடகவியலாளர்களுக்கான கருத்த ரங்கில் கலந்து கொண்ட தாங்கள் யாழ்ப்பாண மாவட்டம் வேகமாக அபிவிருத்தி அடைந்து வருவதாகக் கூறியிருந்தீர்கள். ஆனால் இங்கோ மாணவர்கள் ஒழுங்காக் கற்க முடியாத அளவில் மின்சாரம் தடைப்படுகின்றது. அப்படியானால் யாழ்ப்பாணத்தில் அபிவிருத்தி என்று நீங்கள் கூறுவது எதனை?

**அ. அதிபர் :** வீதி திருத்தம் நடந்துள்ளது. புகையிரதப்பாதை அமைப்பு வேகமாக நடக்கிறது.

**நந்தி தேவர் :** *(இடையில் குறுக்கிட்டு)* புகையிரத வண்டியில் தான் வடக்கு மாகாணசபைத் தேர்த லுக்கான வாக்குப்பெட்டிகள் வந்து இறங்குமோ? *(சபையில் சிரிப்பு)*

**அ. அதிபர் :** இதுபற்றி எனக்குத் தெரியாது. (பிரம்ம தேவர் யமதர்மராஜனைப் பார்த்து வீதிகள் திருத்தப்பட்டுள்ளனவா? என வினவுகிறார்.)

**யமன் :** சுவாமி! வீதிகள் திருத்தப்பட்டுள்ளன என்பதில் உண்மை இருக்கத்தான் செய்கிறது. ஆனாலும் எனக்கு இப்போதுதான் இங்கு வேலை அதிகரித்துள்ளது.

**பிரம்மா :** என்ன! வீதி திருத்தம் செய்யப்பட்டபின் உமக்கு வேலை அதிகரித்துள்ளதா?

**யமன் :** ஆம் சுவாமி. வீதி புனரமைக்கப் பட்டுள்ளதால் வாகனங்கள் வேகக்கட்டுப்பாட்டை இழந்துள்ளன. வீதி ஒழுங்குகளை எவரும் கடைப் பிடிப்பதாக இல்லை. இதனால் நான் யாழ்ப்பாணத் துக்கு அடிக்கடி வரவேண்டியுள்ளது.

**பிரம்மா :** உலகம் முழுவதிலும் வீதித்திருத்தம் செய்யாததனால்தான் விபத்துக்கள் இடம்பெறு வது வழக்கம். ஆனால் இங்கோ வீதி புனரமைக் கப்பட்டுள்ளதால் விபத்து அதிகரித்துள்ளது. இங்கு எல்லாமுமே வித்தியாசம் தான். *(இவ்வாறு கூறிய பிரம்மா மீண்டும் அரச அதிபரிடம் விசாரணை நடத்தினார்.)*

**பிரம்மா :** மின்சாரம் தடைப்படுவதை தடுக்க உங்களால் நடவடிக்கை எடுக்க முடியுமா?

**அ. அதிபர் :** ஆம் சுவாமி.

**பிரம்மா :** *(சித்திரகுப்தரைப் பார்த்து)* அரச அதிபர் கூறு வதைக் குறித்துக்கொள்ளும். இனியும் மின்சாரம் தடைப் பட்டால் தேவலோகத்தில் இருந்து நோட்டிஸ் அனுப்பப்படும். *(என்று கூறியபடி சித்திர குப்தரைப் பார்க்க )*

**சித்திர குப்தர் :** சுன்னாகம் மின் அத்தியட்சகர்... மின் அத்தியட்சகர்...

**மின். அத்தி. :** வணக்கம் சுவாமி!

**பிரம்மா :** சனி, ஞாயிறு தினங்களில் மின்சாரத்துக்கு விடுமுறை கொடுக்கிறீர்களா?

**மின். அத்தி :** ஆம் சுவாமி!

**பிரம்மா :** ஏன்?

**மின். அத்தி. :** வீதி... திருத்தம் ... உயர் மின் அழுத்தம்... இன்னும் வேலை முடியவில்லை சுவாமி.

**பிரம்மா :** வீதி திருத்தம் என்றால் மாற்று ஏற்பாடுகள் கிடையாதா?

**மின். அத்தி. :** இல்லை சுவாமி.

**பிரம்மா :** றெட் நோட்டீஸ், கொழும்பில் இருந்து வரும் விசேட குழுவின் சோதனை என எல்லாமும் ஒழுங்காக நடைபெறும் போது மின்சாரத்தை தடையின்றி வழங்க முடியாதது ஏன்?

**மின். அத்தி. :** *(மௌனம்)*

**பிரம்மா :** மாணவர்கள் பரீட்சைகளுக்குப் படிக்கின்ற நேரத்தில் மின்சாரத்தை தடை செய்வது மிக மோசமான செயல். எனவே மின்சாரத்தை தடைசெய்யாமல் தொடர்ச்சியாக வழங்க வேண்டும் என இந்த மன்று சுன்னாகம் மின் அத்தியட்சகருக்கு கடும் உத்தரவு பிறப்பிக்கின்றது.

*(நாளை தொடரும்)*

## கரையொதுங்கும் பெண்களின் சடலங்கள் இறந்தோரின் எண்ணிக்கை 15 ஆனது!

இந்தோனேசியாவின் யாவாத்தீவுக்கு அருகில் கடலில் மூழ்கிய அகதிகள் படகில் பயணம் செய்த நான்கு பெண்களின் சடலங்கள் கரையொதுங்கியதை அடுத்து இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த செவ்வாயன்று அகதிப் படகு மூழ்கிய இடத்தில் இருந்து மேற்கே 50 கிலோமீற்றர் தொலைவில் உள்ள உயுங் ஜெங்றெங் கடற்கரையில் நேற்று முன் தினம் வரை நான்கு பெண்களின் சடலங்கள் கரை ஒதுங்கியுள்ளன.

204 பேர் பயணம் செய்ததாகக் கருதப்படும் இந்த அகதிப் படகில் இருந்த 189 பேர் மட்டும் காப்பாற்றப் பட்டனர். ஈரான், ஈராக், இலங்கை நாடுகளைச் சேர்ந்தவர்களே இந்த விபத்தில் சிக்கினர்.

சடலங்கள் மீட்கப்பட்டு உயிரிழந்ததாக உறுதிப்படுத்தப்பட்ட 15 பேரில், 18 மாத ஆண்குழந்தை ஒன்று உள்ளிட்ட 6 சிறுவர்களும், கர்ப்பிணிப் பெண் ஒருவரும் உள்ளடங்கியுள்ளனர்.

இவ்விபத்தில் காணாமல் போனவர்களின் சரியான எண்ணிக்கையை உறுதிப்படுத்த முடியாதுள்ளதாக மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரியான ரோச்மாலி என்பவர் தெரிவித்துள்ளார்.

மேலும் காணாமல் போனவர்களின் சடலங்களை தேடி நேற்று கரையோரப் பகுதிகளில் தேடுதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ஹெலிகொப்டர் மூலம் நடத்தப்படும் தேடுதல் தற்போது 60 கிலோமீற்றர் தொலைவு வரைக்கும் விரிவாக்கப்பட்டுள்ளதாக அவ்வதிகாரி குறிப்பிட்டார்.

எனினும் நேற்று முன்தினம் காலை காணாமல் போனவர்கள் உயிருடன் தப்பி இருப்பதற்கு வாய்ப்பு இல்லை என்றும் தெரிவித்தார். (எ-1)

## யாழ்ப்பாணம் புறக்கணிப்பு

இலங்கை-இந்திய மீனவர் பிரச்சினைகளினை ஆராய்வதற்காக இந்திய மீனவப் பிரதிநிதிகளினை உள்ளடக்கிய உயர்மட்ட குழுவொன்று எதிர்வரும் 1-ம் திகதி இலங்கை வரவுள்ளது என யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கை வரும் இக்குழுவினர் 7 நாட்கள் இங்கு நின்று நாட்டின் அனைத்து மாவட்டங்களிற்கும் சென்று சந்திப்பதற்கான ஏற்பாடுகளினை அரசாங்கம் செய்துள்ளது.

எனினும் இதில் யாழ்.மாவட்டம் புறக் கணிக்கப்பட்டுள்ளது எனவும் அவர்கள் தெரிவித்தனர். (எ-4)

## கரவெட்டி பிரதேசத்தில் நடமாடும் சேவை


ஆட்பதிவுத் திணைக்களத்தின் தேசிய அடையாள அட்டைக்கான நடமாடும் சேவை கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்படவுள்ளது.

இந்நடமாடும் சேவைகளில் அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள விரும்பும் பொதுமக்கள் தமது கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு சமர்ப்பிக்கப்படவேண்டிய உரிய ஆவணங்களைப் பரீட்சித்து உறுதிப்படுத்தித் தயார் நிலையில் இருக்குமாறு கரவெட்டி பிரதேச செயலாளர் எஸ்.சிவஸ்ரீ அறிவித்துள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 4 மணி வரை கரவெட்டி யா/ ஞானாசரியார் கல்லூரியில் ஜே/ 367, ஜே/ 368, ஜே/ 369,ஜே/ 370,ஜே/ 371, ஜே/ 372,ஜே/ 373, ஜே/ 374,ஜே/ 377,ஜே/ 380, ஜே/ 381,ஜே/ 382 ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளுக்கும் மறுநாள் இரண்டாம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் ஜே/ 352, ஜே/ 353, ஜே/ 354,ஜே/ 355, ஜே/ 356,ஜே/ 357,ஜே/ 358,ஜே/ 359,ஜே/ 360,ஜே/ 361,ஜே/ 362 ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளுக்கும் தொடர்ந்து 3ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 4 மணி வரை கரவெட்டி பிரதேச செயலகத்தில் ஜே/ 348,ஜே/ 349, ஜே/ 350, ஜே/ 351, ஜே/363,ஜே/364,ஜே/365, ஜே/ 366, ஜே/ 375, ஜே/ 376, ஜே/ 378, ஜே/379 ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளுக்கும் நடைபெறவுள்ளது. (அ)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### ஔவையார் திருமொழி



அறஞ்செய விரும்பென ஔவையார் தந்த
சிறந்த திருமொழி தீவினை தெறுமே
ஆறுவது சினமெனு மரிய மந்திரங்
கூறுவார் நாவிற் குலவுஞ்சொல் லணங்கே
இயல்வது கரவே லெவரே யாயினும்
பயில்வுறப் பயில்வுறப் பாவங் கெடுமே
ஈவது விலக்கே லெல்லாந் தந்து
சேவைகள் செய்யத் திறங்கொடுக் கும்மே
உடையது விளம்பே லுணர்வார்க் கெல்லாந்
தடையிலா வான்ம சக்தியீ னும்மே
ஊக்கமது கைவிடே லூழ்வினை நீக்கும்
தேக்குமா னந்தஞ் சித்தியுந் தருமே

## புனித அன்னாவின் திருவிழா இன்று

தொலைந்துவிட்ட மனிதத்தை மீண்டும் தேடிட
இடர்படும் இளையோரை நல்வழிப்படுத்திட
ஆதரவு தேடுவோரை அணைத்துக்காத்திட
தாயே! நீர் தேரேறி வாருமம்மா
கலாசார சீரழிவை கலைத்து விரட்டிட
பெற்ற பிள்ளையை வீசிடும் பேய்கள் ஓட்டிட
காமவெறியரின் களியாட்டம் அடக்கிட
பரமன் இயேசுவிடம் எமக்காய் பரிந்து
பேசிடம்மா

-கிருபாமேரி வசீகரன்-

## எம் இறைவேண்டுதலை அர்த்தமுள்ளதாக்குவோம்

இன்று தமக்குத் தரப்படும் வேதாகமப் பகுதியில் இயேசுவின் சீடரில் ஒருவர் இறைவனிடம் வேண்ட தமக்கு கற்றுத்தருமாறு இயேசுவிடம் கேட்க, அதற்கு இயேசு சொல்லித்தந்த "பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே" என்ற உலகப் புகழ்பெற்ற செபம் முதல் பகுதியாக வருகின்றது.

இறைவனின் குழந்தைகள் தங்கள் விண்ணகத் தந்தையை நோக்கி எழுப்பும் செபம் இதுவாகும். கிறிஸ்தவ உலகில் கத்தோலிக்கர்கள், அங்கிலிக்கர்கள்... என்று பல பிரிவுகள் இருந்தாலும் அனைவரையும் ஒருங்கிணைக்கும் ஒரு பொதுவான அம்சம், இயேசு சொல்லித்தந்த இந்தச் செபத்தில்

### பரமபிதா காட்டிய பாதை

உண்டு. மிக எளிதான ஏழு விண்ணப்பங்கள் அடங்கிய இச்செபம், கிறிஸ்தவர்களிடையே மட்டுமல்லாமல் உலகின் பல்வேறு மதத்தவரிடையிலும் பரவலாக பயன்படுத்தப்படும் செபமாகும்.

உலகமொழிகள் அனைத்திலும் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ள செபமாகவும் இது அமைந்துள்ளது. இக்கண்ணோட்டத்தில் காணும்போது இயேசு சொல்லித்தந்த பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே என்ற இச்செபம் உலகக் குடும்பத்தின் வேண்டுதல் என்று தயக்கமின்றி கூறலாம்.

இரண்டாவது பகுதியாக "நள்ளிரவில் நண்பர்" என்ற உவமைக்கதை வருகின்றது. உங்களுள் ஒருவர் தம் நண்பரிடம் நள்ளிரவில் சென்று நண்பா, மூன்று அப்பங்களைக் கடனாக் கொடு. என்னுடைய நண்பர் ஒருவர் பயணம் செய்யும் வழியில் என்னிடம் வந்திருக்கிறார்.

அவருக்குக் கொடுக்க என்னிடம் ஒன்றுமில்லை என்று சொல்வதாக வைத்துக்கொள்வோம். உள்ளே இருப்பவர், எனக்குத் தொல்லை கொடுக்காதே. ஏற்கனவே கதவு பூட்டியாயிற்று. என் பிள்ளைகளும் என்னோடு படுத்திருக்கிறார்கள். நான் எழுந்திருந்து உனக்குத் தரமுடியாது என்பார்.


எனினும் அவர் விடாப்பிடியாய்க் கதவைத் தட்டிக் கொண்டேயிருந்தால் அவர் தம் நண்பர் என்பதற்காக எழுந்து கொடுக்காவிட்டாலும் அவரது தொல்லையின் பொருட்டாவது எழுந்து அவருக்குத் தேவையானதைக் கொடுப்பார் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்.

மக்களின் எளிய வாழ்வுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்ட நிகழ்வுகளை இயேசு தன் உவமைக் கதைகளில் பயன்படுத்தினார் என்பது தெளிவாக இப்பகுதியில் காட்டப்படுகின்றது.

இயேசு கூறிய இந்த வாழ்க்கை அனுபவத்தைக் கேட்கும்போது விருந்தோம்பல், நட்பு ஆகிய பாடங்களைச் சொல்லித்தர இயேசு விளைந்தாரோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும். தேடுங்கள் நீங்கள் கண்டடைவீர்கள். தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும் என்று இயேசு சொன்ன வாக்கு நிறைவேறுவதையும் நாம் இங்கு எண்ணிப்பார்க்கலாம்.

நாமும் விடாமுயற்சியுடன் தளராத நம்பிக்கையுடன் இறைவனை நோக்கி மன்றாட வேண்டும் என்று அழைக்கிறார் இயேசு. எனவே நமது நம்பிக்கையைக் கொஞ்சம் ஆழப்படுத்திக் கொள்வோம். இந்த உவமைக்கதை வழியாக இயேசு கற்றுத்தர விளையும் ஒரு முக்கிய பாடம்- மனம் தளராமல், இடைவிடாமல் இறைவனிடம் மன்றாட வேண்டும் என்பதாகும்.



கேட்டல், தேடல், தட்டுதல் ஆகிய செயல்களில் மனித ஈடுபாடு துலங்குவதைக் காணலாம். அந்த ஈடுபாடு தீவிரமாகும்போது அதன் விளைவாக மனிதர் கேட்டதைப் பெறுவார்கள். தேடியதைக் கண்டடைவார்கள். தட்டிய கதவு திறப்பதை உணர்வார்கள்.

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

கடவுளை நோக்கி நாம் வேண்டுதல் செய்யும்போது நமக்குத் தேவையானவற்றைக் கேட்கிறோம். நம் உள்ளத்தைக் கடவுளை நோக்கி எழுப்புதலே இறைவேண்டல். கடவுளின் முன்னிலையில் தாழ்ச்சியோடு நம்மை நிறுத்தும்போது அங்கே இறைவேண்டல் நிகழ்கிறது. நம் கவலைகளையும் கலக்கங்களையும் களைந்துவிட்டு இறைப் பிரசன்னத்தின் அமைதியில் நாம் புகும் போது நம் இறைவேண்டல் அர்த்தமுள்ளதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவ உயர்மட்ட குழுவினர் வடபகுதி மீனவர் தொடர்பிலும் ஆராய வேண்டும்

## தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**இலங்கை- இந்திய மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்கு எதிர்வரும் முதலாம் திகதி இலங்கை வரவுள்ள இந்திய மீனவ உயர்மட்ட குழு வடமாகாண, மாவட்ட தலைமைத்துவ பிரதிநிதிகளை சந்தித்து வடபகுதியின் நிலை தொடர்பில் அறிய வேண்டுமென தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கமும் வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பும் இணைந்து வேண்டுகோள் விடுத்துள்ளன.**

வடக்கு மாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே இவ் வேண்டுகோளை விடுத்துள்ளன.

காலம் காலமாக நாம் எமது மீனவர்களுக்காக குரல் கொடுத்து வருவதோடு, அவர்கள் நலன்களுக்காகவும் செயற்பட்டு வருகின்றோம்.

யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இத்துறை அனுபவம் சார்ந்தவர்களும் இதில் இணைந்து கொள்ள வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில்,

இக்கலந்துரையாடல் கட்சி அரசியல் சார்ந்ததாக அல்லாமல் சுயாதீனம் மற்றும் சுதந்திரமான கலந்துரையாடலாக அமைய வேண்டியதோடு மீனவர்களுக்கிடையில் இனங்காணப்படும் ஆலோசனைகளை நன்கு ஆராய்ந்து இரு நாட்டு மீனவர்களுக்கும் பொருந்தக் கூடிய நிரந்தரமான தீர்வு ஒன்றை இரு நாட்டு அரசாங்கங்களும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

எடுக்கப்படுகின்ற எந்தவொரு தீர்வும் இலங்கை மீது திணிக்கப்படுகின்ற தீர்வாக அமையாது சகலராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய சமத்துவமான தீர்வாக அமைய வேண்டும்.

இந்திய அரசியல் நிலைமைக்குள் கச்சதீவு பிரச்சினையை முன்வைத்து மீளவும் கச்சைதீவைப் பெற வேண்டும் என இந்தியாவில் அரசியல் ரீதியாக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் மீனவர்களுக்கிடையிலான முரண்பாடுகளை மேலும் அதிகரிக்கச் செய்யும் என நாம் அஞ்சுகின்றோம். எனவே, இது தொடர்பாக மிகவும் ஆழமாக சிந்தித்துச் செயற்பட வேண்டும் என நாம் நினைக்கின்றோம்.

இழுவைப்படகுகள் இலங்கை நாட்டில் தடைச் செய்யப்பட்ட மீன்பிடி முறை என்றபடியால் முற்றுமுழுதாக அதை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கின்ற அதேவேளை கடல் வளங்களை அழிக்கக் கூடிய சகல விதமான சட்டவிரோத மீன்பிடி முறைகளையும் உடனடியாக நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பாக்குநீரிணை பிரதேசங்களில் மாத்திரமல்ல, மன்னார் வளைகுடா மற்றும் இலங்கையின் கிழக்கு பிரதேசங்களிலும் இந்திய இழுவைப்படகுகளின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை நிறுத்துவதற்கான முயற்சிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-4)

# 'புலித்தடம்தேடி...' நூல் இடிந்த கரையில் வெளியீடு

நாட்டில் போர் பாதித்த பகுதிகளின் தற்போதைய நிலைமை குறித்து, அந்நாட்டு இராணுவத்தின் அச்சுறுத்தல் மற்றும் கெடுபிடிகளையும் மீறி நேரில் சென்று கள ஆய்வு செய்து, மகா. தமிழ்ப் பிரபாகரன் எழுதிய **புலித்தடம் தேடி...** இரத்த ஈழத்தில் 25 நாட்கள் என்ற நூல் இடிந்த கரையில் வெளியிடப்பட்டது.

மகா. தமிழ்ப் பிரபாகரன் என்பவர், நாட்டில் 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற போருக்குப் பின்பு போர் பாதித்த பகுதிகளுக்கும், கிழக்கு மாகாணம், கொழும்பு, மலையகம் ஆகிய பகுதிகளுக்கும் சென்று கள ஆய்வு செய்து அவ் ஆய்வை இந்திய சஞ்சிகையில் தொடராக எழுதியிருந்தார்.

தற்போது அது நூலாக அணு உலைக்கு எதிரான போராட்டம் நடைபெறும் இடத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இடிந்த கரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இது தொடர்பான நிகழ்ச்சியில் டில்லியைச் சேர்ந்த பத்திரிகையாளர் சத்திய சிவராமன், பேராசிரியர் மணிவண்ணன், சுப.உதயகுமாரன், புஸ்பராயன், சா.முகிலன் ஆகியோர் நூலை வெளியிட இடிந்தகரை போராட்ட பெண்கள் அதனைப் பெற்றுக் கொண்டனர்.

புத்தக வெளியீட்டு நிகழ்வு முடிந்து இடிந்த கரையை விட்டு அழைப்பாளர்கள் வெளியேறும் வேலையில் பொலிஸார் இடிந்த கரைக்கான பாதையில் அவர்களை வழி மறித்து விசாரித்ததோடு, பங்கு பற்றியவர்கள் அனைவரின் விபரங்களையும் பெற்றுக் கொண்டு அவர்கள் வந்த வாகனங்களையும் அவர்களையும் வீடியோ கமராவில் பதிவு செய்து கொண்ட பின்பே வெளியேற அனுமதித்தனர். (அ-2)

# விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு பிரான்பற்று மார்க்கண்டு சுவாமிகள் சபையினால் நடத்தப்படும் மார் க்கண்டு சுவாமிகள் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முன்பள்ளி முன்றலில் சபையின் தலைவர் ந.சண்முகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.குகநேசன் , சிறப்பு விருந்தினர்களாக சமாதான நீதவான் கு.வர தராசா, மாதகல் சென். ஜோசப் மகா வித்தி யாலய ஆசிரியர் பா. பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

நீர்வேலி பாலர் பகல் விடுதியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலைய முன்றலில் பாலர் பகல் விடுதித் தலைவர் செ. பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு வடமாகாணக் கல்வி அமை ச்சின் ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவுப் பணிப்பாளர் செல்வி. ஜெயா தம்பையா, சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் த. கரிசாந், நீர்வேலி கிராம அலுவலர் சி.தயாபரன், நீர்வேலி பொதுச் சுகாதார பரிசோதகர் சதீஸ்குமார், கௌரவ விருந்தினர்களாக வலி.கிழக்கு தென்பகுதி ப. நோ. கூ.சங்கப் பொது முகாமையாளர் க.சிவலிங்கம், பழைய மாணவர் செ. பாலசுந்தரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

(திருநெல்வேலி)

சிவசக்தி பாலர் பாடசாலையும் திருநெல்வேலி அபிராமி முன்பள்ளியும் இணைந்து நடத்தும் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யா/ பரமேஸ்வரா வித்தியாலயத்தில், சிவசக்தி முன்பள்ளி தலைவர், யா/ கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாலய ஓய்வுபெற்ற ஆசிரியர் எஸ். தெட்சணாமூர்த்தி தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக நல் லூர் பிரதேச சபைத் தலைவர் பரமலிங்கம் வசந்தகுமார், சிறப்பு விருந்தினர்களாக, மக்கள் வங்கிப் பதவி நிலை உத்தியோகத்தர் கோபாலச்சந்திரன் அஜந்தன், பரிசோதக உத்தி யோகத்தர் க.மதனகுமார், நல்லூர்க் கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் வி.மாலதிதேவி, குடும்பநல சுகாதார உத்தியோகத்தர் ஆனந்தராசா அனுரதி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

பொற்பதி அறிவாலயம் நடத்தும் சரஸ்வதி முன்பள்ளியின் 28 ஆவது மெய்வல்லுநர் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.29 மணிக்கு யா/ கொக்குவில் நாமகள் வித்தியாலய மைதானத்தில் நல்லூர் பிரதேச சபை உபதலைவி திருமதி கோமதி ரவிதாஸ் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பிரசித்த நொத்தாரிசும் சட்டத்தரணியுமான செல்வி ஞானலோஜினி சிவஞானம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண உள்ளூராட்சி திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் திருமதி சிவதாஸ் சுஜீவா, நல்லூர் பிரதேச சபை செயலாளர் மேரி ஜோசப் சாந்தசீலன், யாழ். வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க. விமலநாதன், - யாழ்/ கொக்குவில் நாமகள் வித்தியாலய அதிபர் தி. சிவநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ-2)

# அந்தியேட்டி அழைப்பிதழ்



தோற்றம்: 31.05.1946
மறைவு: 29.06.2013

**அமரர்**
**எஸ்.திருச்செல்வம்**

அன்புடையீர்,

கடந்த 29.06.2013 அன்று இறைபதம் எய்திய எமது குடும்ப விளக்கு அமரர் எஸ்.திருச்செல்வம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 29.07.2013 அன்று காலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

[illegible] தெரு, பருத்தித்துறை. (சி-4147) **தகவல் : குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

## இந்தியா ஹட்ரிக் வெற்றி பெறுமா?

சிம்பாப்வே அணிக்கு எதிரான 5 ஒரு நாள் போட்டி தொடரில் இதுவரை நடந்த 2 ஆட்டத்திலும் இந்தியா வெற்றி பெற்றது. முதல் ஆட்டத்தில் 6 விக்கெட் வித்தியாசத்திலும், நேற்றுமுன்தினம் நடந்த 2-வது ஆட்டத்தில் 58 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் வெற்றி பெற்றது. இதன்மூலம் இந்தியா 2-0 என்ற கணக்கில் முன்னணியில் உள்ளது.

இந்தியா-சிம்பாப்வே அணிகள் மோதும் 3-வது ஒருநாள் போட்டி ஹராரேயில் இன்று ஞாயிற்றுக்கிழமை மதியம் ஆரம்பமாகிறது.

இந்திய அணி ஹாட்ரிக் வெற்றி பெறுமா? என்று இந்திய ரசிகர்களால் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது. அதே நேரத்தில் சிம்பாப்வே அணி பதிலடி கொடுக்கும் ஆர்வத்தில் உள்ளது.

### இலங்கை-தென்னாபிரிக்கா

இலங்கைக்கு வந்துள்ள தென்னாபிரிக்க அணி 5 ஒருநாள் மற்றும் 3, இருபது-20 போட்டித் தொடரில் விளையாடி வருகிறது.

இதனடிப்படையில் நடைபெற்று வரும் ஒருநாள் போட்டித் தொடரில் 4ஆவது ஒருநாள் போட்டி இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கண்டி பல்லேகல மைதானத்தில் பகல் இரவு ஆட்டமாக நடக்கவுள்ளது.

இதேவேளை, இலங்கை அணி தற்போது இரண்டுக்கு ஒன்று என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

## 10 மாதக் குழ....

ஒப்படைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)

## பாதுகாப்புச் செயலருட....

பயணம் மேற்கொண்டிருந்த போது தங்காலையில் வைத்து கொலை செய்யப்பட்ட பிரித்தானியக் குடிமகனின் கொலை தொடர்பில் இதுவரை நீதியான விசாரணைகள் நடத்தப்படாதது குறித்து ஜனாதிபதியிடம் நியாயம் கேட்கப் போவதாக பிரித்தானிய நாடாளுமன்றக் குழுவில் இடம்பெற்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் சைமன் டன்சுக் அந்நாட்டு ஊடகம் ஒன்றுக்கு செவ்வி அளித்திருந்தார்.

இச்செவ்வி இலங்கை அரசாங்கத்துக்கு விசனத்தை ஏற்படுத்தியதையடுத்தே, ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடனான பிரித்தானிய நாடாளுமன்றக் குழுவின் சந்திப்பு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்திருந்தது.

இந்நிலையிலேயே பிரித்தானிய நாடாளுமன்றக் குழுவுடனான சந்திப்பை பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவும் இரத்துச் செய்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது. (எ-11)

## திண்டுக்கல்லுக்குச் சென்ற....

செய்யப்பட்டது.

புலிகள் இயக்கத்துக்காகக் கடைசிவரை பாடுபட்ட அழகிரிசாமியின் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கடிதம் எழுதியுள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு, அவருடைய உழைப்பையும் தியாகத்தையும் போற்றும் வகையில், "ஈழத்துணை" என்ற பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது.

தமிழகத்தில் இந்த மதிப்பளிப்பைப் பெறும் முதல் தமிழர் அழகிரிசாமி.

அழகிரிசாமியுடனான தனது நினைவுகளை பகிர்ந்து கொண்டார் பழ.நெடுமாறன்.

"1957-ம் ஆண்டு, அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் முதன் முதலாக அழகிரிசாமியைச் சந்தித்தேன்.

அன்று தொடங்கிய நட்பு 56 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்தது. 1984-ம் ஆண்டு, "புலிகள் இயக்கத்தினருக்குப் பயிற்சி அளிக்க இடம் தேவைப்படுகிறது என, தலைவர் பிரபாகரன் எனக்குக் கடிதம் எழுதினார். அப்போது, திண்டுக்கல் சிறுமலையில் இருந்த தனது தோட்டத்தைப் பயிற்சிக் களமாக அளித்தார் அழகிரி.

தொடர்ந்து, தலைவர் பிரபாகரனின் நேரடிப் பார்வையில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள், இளம் பெண்கள் பயிற்சி எடுத்துக்கொண்டு தாயகம் திரும்பி, போர்களில் ஈடுபட்டனர்.

அரசின் அச்சுறுத்துதலுக்குப் பயப்படாமல், பயிற்சிக்கு இடம் கொடுத்ததுடன் கடைசி வரை புலிகள் இயக்கத்துக்கு ஆதரவாகவும் தமிழ்நாடு மட்டுமல்லாமல் உலக நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து அங்கு வாழும் தமிழர்களிடம் எல்லாம் புலிகளுக்கு ஆதரவு திரட்டியவர் அழகிரிசாமி.

இறுதிவரை இயக்கத்துக்காகப் பாடுபட்ட வரை, எனக்கு எல்லா வகையிலும் தோள் கொடுத்து நின்ற ஒரு நல்ல நண்பனை, உடன் பிறவா சகோதரனை, எனது நிழலை இழந்து தவிக்கிறேன்" என்றார் நெடுமாறன் என தமிழக நாளேடு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## கோடி விலை கொடுத்து....

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

அரசாங்கம் தனது பிரபலத்தினால் தேர்தலில் வெல்ல முடியுமொன்றால் ஏன் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பணம் கொடுத்து விலைக்கு வாங்க வேண்டும்? அரசாங்கத்தின் வங்குரோத்து நிலைமையை இது காட்டுகிறது.

எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை விலை கொடுத்து வாங்கி, ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரங்களை உளரீதியாக வீழ்த்தி, தேர்தலில் வெற்றிப் பெற அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

கோடிக்கணக்கில் பணத்தை விநியோகித்து, பதவி, சிறப்புரிமைகளை வழங்கி, ஊடகங்களைப் பயன்படுத்தி விமர்சித்த போதும் ஐக்கிய தேசியக் கட்சியை வீழ்த்த முடியாது என்பதை ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு கூறி வைக்க விரும்புகிறோம்.

அரசாங்கம் தற்போது மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ளது. வாக்குச் சாவடிகளுக்கு செல்லாத சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வாக்காளர்களை உளரீதியாக தட்டியெழுப்புவதற்காக அரசாங்கம், எதிர்க் கட்சியில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களை தம்பக்கம் இழுத்து வருகிறது என்றார். (எ-11)

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒலிபரப்பு செய்யப்படும்
இணைய வானொலி ஒன்றில் அறிவிப்பாளர் மற்றும்
சந்தைப்படுத்தல் துறையில்

**உடனடி வேலைவாய்ப்பு**

**அறிவிப்பாளர்**

இனிய குரல் வளம்
நல்ல தமிழ் உச்சரிப்பு
கணணி அறிவு
ஆங்கில மொழி தேர்ச்சி

**சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்**

நல்ல பேச்சுத்திறமை
முன்அனுபவம் உடையவரா...!

(இரண்டு துறைகளிலும்
முன்அனுபவம், திறமை உடையவருக்கு
முன் உரிமை வழங்கப்படும்)

தொடர்புகளுக்கு
0770868542,
0772299933.

மின்னஞ்சல் முகவரி sudarfm@hotmail.com

முடிவுத்திகதி ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி

# மரண அறிவித்தல்

## நவரத்தினம் இராகுலன்



தெல்லுளுவை, வல்வெட்டி, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் இராகுலன் 25.07.2013 அன்று காலமானார்.

அன்னார் நவரத்தினம் - சகுந்தலாதேவி தம்பதியரின் அன்பு மகனும், தவனேஸ், அனுசியா ஆகியோரின் அன்புச் சகோதரனும், தங்கராஜா குடும்பத்தின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 28-07-2013 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக எல்லங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நவரத்தினம் குடும்பம்
தங்கராசா குடும்பம்
உயிர் நண்பர்கள்

(3487)

# கண்ணீர் அஞ்சலி



தாய்மடியில் 1989 - 12 - 13

இறையடியில் 2013 - 07 - 25

அமரர்

**நவரத்தினம் இராகுலன்**

குடும்பத்தின குல விளக்காய்
குவலயம் போற்ற வாழ்ந்து
இமைப் பொழுதில் எமைப்பிரிந்து
எங்குற்றாய்! ஏங்குற்றோம்! - இராகுலா!
கணப்பொழுதும் உனை மறப்போமா!

தகவல் :
நவரத்தினம் குடும்பம்
தங்கராசா குடும்பம்
உயிர் நண்பர்கள்

(3487)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கில் வீடு, கிணறு, மா, பலா போன்றவற்றுடன் கூடிய நான்கு (4) பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர் மட்டும் தொடர்புகொள்ளவும்.

**தொடர்புகளுக்கு: 0777044995**

(3462)



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:
T.P : 021 321 0815,
E-mail: valampurii@yahoo.com



## Organ, Guitar புல்லாங்குழல் வகுப்புகள்

சினிமாப் பாடல்களுக்கான Notes விற்பனைக்குண்டு.

**கரவீணா இசை மன்றம்**

4, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.

**தொ.பே: 0777031293**

(3419)



## Jet D Express
### Courier Service




| | | |
|---|---|---|
| Sweeden | Over 5 Kg 1000/- | |
| Canada | Over 5 Kg 1100/- | |
| Norway | Over 5 Kg 1000/- | |
| Italy | Over 5 Kg 1000/- | |
| France | Over 5 Kg 1000/- | Over 11 Kg 750/- |
| Germany | Over 5 Kg 900/- | Over 11 Kg 700/- |
| London | Over 5 Kg 800/- | Over 11 Kg 650/- |
| Australia | Over 5 Kg 900/- | Over 11 Kg 750/- |
| Netharland | Over 5 Kg 1000/- | Over 11 Kg 800/- |
| Swiss | Over 5 Kg 1000/- | Over 11 Kg 850/- |
| Denmark | Over 5 Kg 1000/- | Over 11 Kg 800/- |

Note : 25Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட கட்டண சலுகை உண்டு.

உங்கள் உறவுகளுக்கு நீங்கள் அனுப்பும் பொருட்கள் 5 நாட்களில் சென்றடையும்..

*Note : கடலுணவு வகைகள் எல்லாவகையான பொருட்களும் அனுப்பிவைக்கப்படும். வெளிநாடுகளில் எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

(C-4134)

உலகின் முன்னணி சேவையின் ஊடாக உங்கள் உறவுகளுக்கு பொருட்களை அனுப்பிக்கொள்ளலாம்

இல. 27, முதலாம் மாடி,
நவீன சந்தை (தனம்ரெக்ஸ் மேல்)
யாழ்ப்பாணம். 021 221 9150, 0772187 301

No. 77E, Manning Place,
Wellawatta, Colombo - 06.
T.P : 0112363873, 0776509909.



## LEYDEN CONSTRUCTIONS CONSORTIUM (Pvt) Ltd.

யாழ் மண்ணில் நம்பிக்கையான உறுதியான பாரம்பரிய கட்டட நிபுணத்துவம் மிக்க பொறியியலாளர்களின் மேற்பார்வையில் உங்கள் வீடுகள், கடைகள், கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்படும்.









01) Accomplish jobs always within the time frame.
02) Full time supervision and security facilities for every work sites.
03) Skilled and experience working teams.
04) Sophisticated machineries for technical jobs.
05) Heavy machineries for heavy construction.
06) Geotechnical Engineering facilities for foundation work.
07) Structural Engineering dasigns to reduce cost and strengthen the building.
08) Pantry cupboards for modern kitchen.
09) Hot & Cold water plumbing and dry bathrooms.
10) Television, Telephone, Network, and ring circuit Electrical wiring (to reduce the electricity cost).
11) Experience tillers and painters to give hotel finish.
12) All bill payments are done on measure and pay basis.
13) Loans facilities shall be arranged with banks at your convenience.
14) AutoCAD planning & printing facilities available.

*For Contact:*
472, Main Street, Chundikkuli, Jaffna.
T.Phone: 021 222 1851, 0777320799
0773151654
E-mail: ssreeganathas@yahoo.co.in

(3452)



கடை கட்டிடங்கள்
## விற்பனைக்கு

பரந்தன், யாழ்ப்பாணம் - கண்டி வீதி, பரந்தன் சந்தியிலிருந்து முல்லைத்தீவு வீதியில் 150 யார் தூரத்திற்குள் ஒவ்வொன்றும் பதினைந்து அடி அகலமும் 105 அடி நீளமும் கொண்ட நான்கு கடைகள் தனித் தனியாகவோ மொத்தமாகவோ விற்பனைக்கு உண்டு.

K. முருகன் : 0775272093
P. சிங்கம் : 0776027324, 021 228 0020

(C-4139)


## அமைச்சர் ஹக்கீம்....

அமைச்சர் தனது அறியாமை காரணமாக பொய்யான அறிக்கைகளை தொடர்ந்தும் வெளியிட்டு வருவதால் அவரை மன்னிக்க முடியாது.

மத நல்லிணக்கத்திற்கு குந்தகம் ஏற்படுத்தும் இப்படியான அமைச்சர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேவேளை மஹியங்கனை பிரதேசத்தில் ஜும்மா என்ற பெயரில் பள்ளிவாசல்கள் எதுவும் இருக்கவில்லை.

பள்ளிவாசலை அமைக்க மாவட்ட செயலகம், வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரச் சபை, நகர அபிவிருத்தி அதிகாரச் சபை உட்பட பல நிறுவனங்களிடம் அனுமதி பெறவேண்டும்.

இதனடிப்படையில் இந்த நிறுவனங்களிடம் விசாரித்த போது, அவர்கள் பள்ளிவாசல் தொடர்பான எந்த தகவல்களையும் வழங்கவில்லை என தம் மரக்கித்த தேரர் தெரிவித்துள்ளார்.

(எ-11)


## வேலைவாய்ப்பு

அச்சகவேலை தெரிந்தவர்கள், பழக விரும்புபவர்கள் தேவை (பெண்கள்)

0770366123

(3478)



## விற்பனைக்கு

- நல்ல இன தென்னம்பிள்ளைகள் செவ்விளநீர் நாற்று
- போட்டோ பிரதி மெசின் Canon 1215, Sharp, 5516E
- கடைக்குரிய சிறிய இரும்புக் கதவு
- பைண்டிங் மெசின் (சிறியது)
- Hp1210 பிறிண்டர்

**0770366123**

(3478)



## தேவை

எதிர்காலத்தை வெற்றிகொள்ள நிரந்தர வேலை வாய்ப்புகள், கப்பல் புனர்நிர்மாணப் பிரிவுக்கு கொழும்பு துறைமுகம் (தனியார்) சாதாரண ஊழியர்கள்/வெல்டிங்/வெல்டிங் ஹெல்ப்பர் தேவை. 18 -50 வயதினர் சம்பளம் 18000/- 35000/- உணவு, தங்குமிடம் சகாய விலைகளில் வருகை தரும் நாளிலே வேலை வாய்ப்புகள்

**தொடர்புகளுக்கு: 0775561883**

(C-4145)



## af ALLIANCE FRANÇAISE DE JAFFNA

French மொழி கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட வட மாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Francaise de Jaffna மட்டுமே. இது ஓர் அரிய சந்தர்ப்பம். மேலும் தரமான Certificate ஐ பெறுங்கள்.

புதிய வகுப்புகள் விரைவில்... T.P: 0212228093

61, Kachchery-Nallur Road, Jaffna.

(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)

(3460)



## நிரந்தர வேலைவாய்ப்புகள்

வளமான வாழ்விற்கு அதி உயர் சம்பளத்துடன் நிரந்தர வேலை வாய்ப்புகள் கொழும்பை அண்மித்த முன்னணித் தொழிற்சாலைகளான ஜாம், குளிர்பானம், PVC ஆடைத் தொழிற்சாலை, பிளாஸ்டிக், மெல்லியகூரை கோழி இறைச்சி தொழிற்சாலை போன்றவற்றுக்கு உற்பத்தி உதவியாளர்/பொதியிடல் / லேபல் தரம்பிரித்தல் பிரிவுக்கு 18.50 வயதினர் (ஆண்/பெண்) தேவை. உணவு தங்குமிடம் சகாயவிலையில் சம்பளம் 18000/-, 25000/-, 30000/- வருகை தரும் நாளிலே வேலை வாய்புகள். **தொடர்புகளுக்கு: 0775561883**

(C-4146)



இன்று ஆரம்பம்!

திறமைச்சித்திக்கு வழிகாட்டும்

## LOGIC
### கருத்தரங்கு

ஆசிரியர் : எஸ். எஸ். மனோகரன்

- 28 இல் - பயனிலைத் தர்க்கம், போலிகள், வலுச்சமனான சூத்திரங்கள் சார்புக் கொள்கையினர்.
- 29 இல் - உண்மை விருட்சம், தர்க்கப்படலைகள், விஞ்ஞானமுறை மற்றும் M.C.Q தொடர்பான ஆலோசனைகள்

**BEACON கல்வி நிறுவனம்**

கட்டணம் 300/-

மணிக்கூட்டு வீதி (வெலிங்டன் சந்தியடி), யாழ்ப்பாணம்.

நேரம் : காலை 8.00 மணிமுதல் 3.00 மணிவரை (இடைவேளையுடன்)



DHL EXPRESS வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

220ற்கும் மேற்பட்ட நாடுகளுக்கான கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.

- 11kg மேற்பட்ட பொதிகளுக்கு கட்டணச் சலுகை, கடலுணவு, மருந்து பொருட்கள், எண்ணை, பழவகைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.
- உங்கள் இல்லங்களில் வந்து பொருட்களை பொறுப்பெடுத்து வெளிநாடுகளில் உரிய முகவரியில் ஒப்படைக்கும் சேவை.




**திருமுருகன் கொம் நெற்**

இல. 271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். - 021 222 7835
(ஆல் சிலோனிந்து முன்பாக அமைந்துள்ளது.)
இல.18, பிரதான வீதி, நெல்லியடி. இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி

TCN Express
இல. 2B, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 6



வெளிநாடுகளில் இருந்து மிக விரைவாக பணத்தினைப் பெற்றுக்கொள்ள

WESTERN UNION
MMBL Money Master

46, Adiyapathum Veethy, Thirunalvely.

சகல நாடுகளுக்குமான விமானப் பயணச்சீட்டு, அதற்கான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம். கனடா, லண்டன், இந்தியா ஆகியவற்றுக்கான Online Visa விண்ணப்ப சேவையினைப் பெற்றுக்கொள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.